# டேவிட் காட்மனின் அறிமுகம்

டேவிட் காட்மன்  ரமண மஹர்ஷியின் போதனைகளைப் பற்றி மிகவும் தெளிவாகவும் சீரிய முறையிலும் எழுதப்பட்ட புத்தகங்களுளொன்றான Be as you are -The teachings of Sri Ramana Maharshi என்ற புத்தகத்திற்காக நன்கு அறியப்[பட்டவர். இப்புத்தகம் உண்மையிலேயே மஹர்ஷியின் போதனைகளைச் சுருககமாக ஆனால் முழுமையாகத் தருவது மட்டுமன்றி, ஸ்ரீ ரமண மஹர்ஷியின் உபதேச சாரத்தின் ஆழ்ந்த விமர்சனத்தையும் தருகின்றது.  டேவிட், ஸ்ரீ ரமணர் , அவரது சீடர்கள், அவரது போதனைகளையும் பற்றி பத்து புத்தகங்கள் எழுதியும் பதிப்பித்தும் உள்ளார்.

படிப்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளவும், அதை விட முக்கியமாக ரசிக்கும்படியும் இருக்கும் வகையில் அப்போதனைகளின் ஊடே அனேக சம்பவங்களைப் புகுத்தி விடும் இயல்பான திறமை டேவிடுக்கு உள்ளது.  என் அபிப்பிராயத்தில் அவருடைய ஒவ்வொரு புத்தகமும் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் அகண்டாகாரத்தினுள் அருமையான பல வகைப்பட்ட தரிசனத்தைத் தருகின்றது. இரண்டு விதங்களில் டேவிடின் புத்தகங்கள் இணையற்றவை.  முதலாவது, இப்புத்தகங்களைப் படிக்கும் போது கொடுக்கப்பட்ட விஷயம் சரியானது தானா என்று உறுதி செய்து கொள்ள டேவிட் நிரம்ப ஆராய்ச்சிகள் செய்துள்ளார் என்பது நன்கு தெரிகின்றது.  அவர் விவரஙளைச் சரி பார்க்க  ஆவணங்களுடன் ஒப்பிட்டும் சந்திப்புகள் மூலமாகவும் பெரு முயற்சி செய்துள்ளார். ஆகவே, எழுதியவைகளின் விஷய ஞானம்  சந்தேகத்திற்கப்பாற்பட்டது.  இரண்டாவதாக டேவிட் ஸ்ரீ ரமண மஹர்ஷியைப்பற்றி  எழுதும் எழுத்தாளர் மட்டுமல்ல.  அவர் ஸ்ரீ ரமணரின் உபதேசங்களின் படி வாழ்ந்து காட்டுகிறார்.  (பின் வரும் உரையாடல்களிலிருந்து இது நன்கு புலப்படும்),  ஸ்ரீ ரமண மஹர்ஷியை பற்றி எழுதப்பட்டவற்றுள் சிலவற்றைப் படித்ததனால் ஏற்பட்ட மௌன நிலையை அனுபவித்த பின் டேவிட் 1976 இல் ரமணரின் ஆச்ரமத்தைச் சென்று பார்க்க உந்தப்பட்டார். சிறிது நாள்களுக்கு இருந்து விட்டு வரலாமென்று எண்ணினார். ஆனால் திரும்பிச் செல்லவே இல்லை,  அந்நாளிலிருந்து  ஸ்ரீ ரமணர் வாழ்ந்திருந்த தென்னிந்தியாவின் ஒரு ஊரான திருவண்ணாமலையிலேயே பெரும்பாலும் இருந்து கொண்டிருக்கிறார்.  குருவின் பால் பக்தியையும்  சேவை மனப்பாங்கையையும் வளர்த்துக்கொண்டு, ஸ்ரீ ரமணரின் பல சீடர்களுடன் வாழ்ந்திருக்கிறார்.  சொல்லப்போனால், அவருடைய பல புத்தகங்களின் பதிப்பாசிரியர் உரிமைகளை (பண வரவுகள்) பல குருமார்களுடைய ஆச்ரமங்களை நேரே சென்றடைகின்றன.  ஆகவே அவருடைய எழுத்துக்களில் பாண்டியத்துடன் டேவிடால் அனுபவபூர்வமான ஒரு தனிப்பட்ட கருத்து விளக்கத்தையும் தர முடிகிறது.  டேவிடின் எழுத்துக்களுடைய அந்த

பாண்டித்தியமும் ரசனை பூர்வமான இயல்பும் அவருடைய புத்தகங்களை ஒரு உண்மையான பொக்கிஷமாக்குகின்றன. படிப்பவர் எவருக்கும் ஆன்மிக நாட்டாமுள்ளவரோ இல்லையோ, ஒரு விருந்தாக!!

நான் டேவிடின் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தபோது, அவற்றோடு ஒரு இயல்பான இணைப்பை உணர்ந்தேன். அதுவரை ஸ்ரீ ரமண மஹர்ஷியின் எழுத்துக்கள் வறட்சியாக , புரிந்து கொள்ளக் கடினமாக இருப்பதாகத் தோன்றின. இந்த உரையாடலை நடத்தியதன் நோக்கம் - ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் சொற்படி நடக்கும் டேவிட் போன்ற ஒருவரின் மூலம் எனக்கும் மற்றவர்களுக்கும் ஸ்ரீ ரமணரின் போதனைகளைத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்குமென்று தான். அவருடைய பல அலுவல்களுக்கிடையே டேவிட் இந்த உரையாடலை ஈ மெயில் மூலம் செய்வதற்கு அன்புடன் ஒப்புக்கொண்டார். டேவிட் மற்ற தொண்டர்களுடைய உதவியுடன் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் போதனைகளைப் பற்றி நிறைய விவரங்களைத் தரும் வெப் சைட் ஒன்றை உருவாக்கியுள்ளார். அதில், டேவிட் பதிப்பிக்காத சில விவரங்களும் (உதாரணமாக, திருவண்ணாமலையில் ஆரம்ப நாள்கள் என்று அவர் எழுதியதைப் படியுங்கள். அது மிகவும் நுண்மையான அதே சமயம் வேடிக்கை மிக்க விஷயங்களைக் கொண்டுள்ளது.) உரையாடல்களும் உள்ளன வெப் சைட்டில் அவர் எழுதிய புத்தகங்களின் பட்டியல், ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றிய சிறு குறிப்புடனும், அதை வாங்குவதற்கான முறையுடனும் கொடுக்கப்படடுள்ளது. வெப் சைட் http://www. davidgodman.org என்பதாகும்

என்னைப்போலவே எல்லோரும் இந்த உரையாடலையும் டேவிடின் புத்தகங்களையும் படித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறேன். அதைவிட முக்கியமாக நம்மில் சிலர் ஸ்ரீ ரமண மஹர்ஷியின்- - எவருடைய சந்நிதானம் , செல்வாக்கு மற்றும் அருளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றனவோ --அவருடைய போதனைகளின் படி நடப்பதற்கு ஒரு ஊக்கத்தைப் பெறுவார்களென நம்புகின்றேன்.

**மாலோக்**

# பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் உபதேசத்தைக் கடைப்பிடித்து ஒழுகல்

## திரு டேவிட் காட்மனுடன் உரையாடல்கள்

**பாகம் 1**

கேள்வி: உங்கள் வாழ்க்கையில் ஸ்ரீ ரமண மஹர்ஷி அவர்கள் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். பகவானைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாதவர்களுக்காக ஸ்ரீ பகவானின் சரித்திரத்திலிருந்து உங்களை ஆழமாகக் கவர்ந்த சில முக்கிய அம்சங்களைப் பற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா ?

டேவிட் : ஸ்ரீ ரமணரின் வாழ்க்கை வரலாற்றையும் அன்னாரின் உபதேசங்களையும் சுருக்கமாகக் கூறும்படி ஒவ்வொரு ஆண்டிலும் இதே கேள்வியை இரண்டு மூன்று முறை யாரேனும் என்னிடம் கேட்பதுண்டு. அப்போது எங்கே தொடங்குவது என்று தெரிவதில்லை. முதற்கண் நான் கூற விரும்புவது ஸ்ரீ ரமண மஹர்ஷி இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாட்டில் தோன்றிய ஆன்மிகத் தலைவர்களில் மிகவும் மதிக்கப்பட்ட, பலராலும் வணங்கப்பட்டவர்களுள் ஒருவர். இந்து மதத்தின் ஆன்மிகத் துறையில் சிறந்தவற்றிற்கான ஒரு உதாரணமாக எப்போதும் கருதப்படுபவர் என்று வேறு யாரையும் குறிப்பிட முடியாது. ஒரு உண்மையான மஹான் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு பரிபூரண உதாரணமாக எல்லோராலும் மதிக்கப்படுபவர்.

இது நிகழ்ந்தது எப்படி? ஸ்ரீ ரமணர் இளம் பிராயத்தினராக இருந்தபோது அவருக்குத் தன்னியல்பான விசேஷ அனுபவம் ஒன்று ஏற்பட்டது. அந்நிலையில் தன் தனித்தன்மை இறந்துவிட்டு தன் உண்மையான ஸ்வரூபமானது எல்லாவற்றிற்கும் மேலான அடிப்படையான தனது ஆத்மாவேயாகும் என்று உணர்ந்துகொண்டார். அது வியக்கத்தக்க வகையில் நிலையான ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. ஏனெனின் அதற்குமுன் அவருக்கு ஆன்மிக விஷயங்களில் ஆர்வம் ஏதும் இருந்ததில்லை. சில வாரங்களுக்குப்பின் யாரிடமும் கூறிக்கொள்ளாமல் தன் வீட்டை விட்டு விலகி சென்னையிலிருந்து தெற்கே 120 மைல்களுக்கு அப்பாலுள்ள தெய்விகமான மலையும் புண்ணிய ஸ்தலமுமான அருணாசலத்தின் அடிவாரத்தில் தனது வாழ்நாளின் மிகுதியைக் கழித்தார். சில ஆண்டுகள் மெய்மறந்து உலகைத் துறந்து இருந்த பின் அவரிடமிருந்து ஒரு ஆன்மிக ஒளி வெளிப்பட்டதைக் காண நேர்ந்தோர்க்கு ஒரு அமைதியும் மகிழ்ச்சியும் மேம்பட்டதால், பக்தர்கள் அவரை நாடி வந்தனர். பின்னர் அவருக்குக் கிடைத்த புகழுக்கும் பிரஸித்திக்கும் இதுவே காரணமாகும். அவர் செய்கைக்காகவோ, பேச்சுகளுக்ககவோ பெரிய மஹான் என்ற பெயர் அவருக்கு வரவில்லை; மாறாக பலவிதமான கேள்விகளுடனும், சந்தேகங்களுடனும் அவரது ஆசிரமத்துக்கு வந்தவர்கள் எதிர்பாராத விதமாக அவரது முன்னிலையில் ஒரு அமைதியையும் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் உணர்ந்தமையால்தான். அவரிடமிருந்து தொடர்ந்து

ஒரு நலம் பயக்கும் சக்தியின் பெருக்கு வெளிப்பட்டு, எந்த விதத்திலோ அவரைக் காண வந்தவர்களின் சலனமான மனத்தின் அமைதியின்மையையும், கவலைகளையும் மறையச்செய்தது. அவர் ஒருவரையும் தன்னிடம் வரச் சொன்னதில்லை. மக்கள் தாமாகவே வந்தனர். ஒரு நல்ல எலிப்பொறியைக் கண்டுபிடித்தால் அடர்ந்த காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டாலும்கூட மக்கள் அதற்காக உங்களைத் தேடி வந்துவிடுவார்கள் என்று 19ஆம் நூற்றாண்டில் ஒரு அமெரிக்க எழுத்தாளர் எழுதினார். அது போல மக்கள் ஸ்ரீ ரமணரை நாடி வரலாயினர். சுலபமாக அணுக் முடியாத இட்ங்களில் பல வருடங்கள் ஸ்ரீ ரமணர் இருந்தாலும் மேற்சொன்ன சிறந்த எலிப்பொறியைவிட மேன்மையான ஒரு எலிப்பொறி அவரிடம் இருந்தது. அது தன்னை அணுகியவர்களிடம் அமைதியை ஏற்படுத்தக் கூடிய் இயல்பான சக்தி அவரிடம் அமைந்திருந்ததாகும்..

அவரது அத்தகைய நிலையையும், அவரால் பிறருக்கு ஏற்பட்ட விளைவுகளையும் புரிந்துகொள்வதற்காக நான் இதனை மேலும் விரிவாகக் கூற விழைகிறேன். அவரது பதினாறாவது வயதில் ஏற்பட்ட அனுபவத்தின்போது ஒரு ஸ்திரமான அமைதி நிறைந்த நிலையில் அவரை ஆழ்த்திவிட்டு. அவரது மனமும், தான் ஒரு தனி மனிதன் என்ற தனித்துவமும் அடியோடு அற்றப்போய்விட்டது. அத்தகைய புது அனுபவத்திற்கு, 'நான்' ஒரு தனி நபர் என்பது காரணமாகாதென்று அவர் நன்கு உணர்ந்து கொண்டார். மாறாக, அந்த நிலை அவருக்கு இயல்பானது; எப்போதும் உள்ளதொன்று என்றாலும் மனமும், அதன் நிரந்தரமான பரபரப்பும் அடங்கும்போது அத்தகைய அனுபவம் ஏற்படும். இந்த இயல்பான, தன்னிச்சையான உள்ளடங்கிய மௌனத்தின் மூலம் சுற்றுச்சூழலை குணப்படுத்தும் அமைதியைத் தரும் சக்தியால் நிரப்பினார். அவரைக் காணவந்தோர் களிப்பும் அமைதியும் கொண்டனர். இது எதனால் ? ஏனெனில் நம் எல்லோருக்குமே உரித்தான இயற்கையாக அமைந்த நிலையின் ருசியை ஸ்ரீ ரமணரை சுற்றி இருந்தவர்கள் அனுபவிக்கும் வண்ணம் ஒரு முயற்சியுமின்றி தானாகவே தன் அமைதி கூடிய பேரானந்த அனுபவ அலைகளைப் பரப்பிக் கொண்டிருந்தார். இந்த சக்தி அவருடைய அருகாமையில் மட்டும்தான் என்றில்லையானாலும், அங்கு சிறிது அதிகமாகக் காணப்பட்டது. அவரை மனதால் நினைத்தவர்கள்கூட இருந்த இடத்திலேயே அத்தகைய அமைதி நிரம்புவதை (வெறும் மனத்தளவு தொடர்பினால்) உணர்ந்தனர். இந்தப் பின்னணிக்குப் பிறகு 'ரமண மஹர்ஷி யார்; அவர் உபதேசங்கள் எவை?' என்ற கேள்விக்கு பதில் சொல்லலாம்.

ஸ்ரீ ரமண மஹர்ஷி அமைதிக்கும், மதிழ்ச்சிக்கும் ஒரு உயிரோவியம். அவர் உபதேசங்கள் பிறருக்கு தத்தம் உள்ளார்ந்த சந்தோஷத்தையும் அமைதியையும் உணர்ந்து கொள்ள உதவிய (அவருடைய) அந்நிலையின் வெளிப்பாடுகள். சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாதபடித் தோன்றினால் ஆர்தர் ஆஸ்பர்னின்[1] மகள் எனக்குச் சொன்ன ஒரு கதையைச் சொல்கிறேன். 1940களில் ஸ்ரீ ரமணரின் ஆசிரமத்திற்கு அருகே இருக்க இடமில்லாத வெளிநாட்டு அன்பர்களுக்கு அவர்கள் வீடு தங்குமிடமாக செயல்பட்டது. பரிதபிக்கத்தக்க கடுப்பான பெண் ஒருவள் ஆசிரமத்தாரால் அனுப்பப்பட்டு அங்கு வந்து சேர்ந்தாள். அவருக்கு இடமும் காலை உணவும் அளித்து மறுநாள் காலை ஸ்ரீ ரமணரைக் காண்பதற்கு அனுப்பிவைத்தனர். அவள் முற்றிலும் மகிழ்ச்சியில் திளைத்தவளாக மதிய உணவு வேளைக்குத் திரும்பி வந்தாள். அவள் முகத்தில் ஆனந்தம் பொங்கிற்று. எல்லோரும் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளத் துடிப்புடன் இருந்தும் அவள் ஆசிரமத்திற்கு சென்று வந்ததைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. 'என்னை நோக்கினார் அதனால் இப்படி நடந்தது' என்றோ ' நான் ஒரு கேள்வி கேட்க அதனால் இந்த அற்புதமான அனுபவம் நடந்தது' என்றோ ஒரு அதிசயமான கதையைச் சொல்வாளென்று வீட்டிலுள்ளோர் எதிர்நோக்கினர். உணவு முடிந்த பின், அந்த வீட்டிலுள்ளோரால் மேலும் தங்கள் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'என்ன நேர்ந்தது ?' என்று ஒருவர் கேட்டார். ' பகவான் உன்னை என்ன செய்தார்? உன்னிடம் என்ன கூறினார்?' என வினவ அப்பெண்மணி' ஆச்சரியம் அடைந்தவளாய் ' அவர் ஒன்றும் செய்யவில்லை. ஒன்றும் பேசவில்லை. நான் காலை முழுதும் அங்கு அமர்ந்திருந்துவிட்டு மதிய உணவுக்காக இங்கு வந்தேன்' என்றாள். அங்கிருந்த கூட்டத்தோடு அவள் ஒருஅதிசயிக்கத்தக்க புதியவளாக அமர்ந்திருந்தாள். ஆனால் ஸ்ரீ ரமணரிடமிருந்து வெளிப்பட்ட சக்தியானது வாழ்நாள் முழுவதும் இருந்த வேதனையைத் துடைத்து அவளுக்குள்ளே அவளுக்கே உரித்தான இயற்கையான மகிழ்ச்சியையும், அமைதியையும் அவளுக்கு உணர்த்திவிட்டது.

தன்னைச் சுற்றி இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது ஸ்ரீ ரமணருக்குத் தெரியும். ஆனால் அதற்குத் தானே காரணம் என்று அவர் ஒப்புக் கொண்டதே இல்லை. ' நான் இப்பெண்மணியின் தன்மையை மாற்றினேன் என்று ஒருபோதும் உரைக்க மாட்டார். அவரால் மக்களிடம் ஏற்படும் தாக்கத்தைப் பற்றிக் கேட்கும்போது, சில சமயங்களில், தான்

[1] ஆர்தர் ஆச்பர்ண் , ஸ்ரீ ரமணரையும் அவர் உபதேசங்களையும் பற்றி மிகச் சிறந்த புத்தகங்களை எழுதியவர்.

தன்னுடைய ஸகஜ நிலையான சாந்தியில் தொடர்ந்து இருக்கும் போது எவ்வாறோ ஒரு சக்தி நிறைந்த சந்நிதி உருவாகி தன்னைக் காண வருவோரின் மனக்கிலேசங்களைத் தானாகவே மாற்றிவிடுகிறது, என்றுரைப்பதுண்டு. மௌனமாக, மௌனநிலையில் தொடர்ந்திருக்கும்போது, சக்திவாய்ந்த களம் உருவாகிறது. அது அவரைச் சூழ்ந்துள்ளவர்களை அதிசயிக்கத்தக்க வகையில் மாற்றிவிடுகிறது. ஆரம்பத்தில் என்னிடம் கேட்ட கேள்வி 'ஸ்ரீ ரமண மஹர்ஷி என்னை ஏன் வெகுவாகக் கவர்ந்துவிட்டார்?' என்பது. அத்ற்கான பதில் 'நான் அவருடைய சந்நிதிக்கு (அருகாமை) வந்தேன். அதன் தூண்டிவிடும் செயலால் என்னுடைய அமைதியையும், மகிழ்ச்சியையும் கண்டுகொண்டேன்'.

கேள்வி: ஸ்ரீ ரமண மஹர்ஷியின் உபதேசங்களின்படி நடக்க விரும்புவோர் எவ்வாறு எங்கிருந்து துவங்க வேண்டும்?

டேவிட்: இது மற்றொரு சிறந்த கேள்வி. 'நான் என்ன செய்ய வேண்டும்?' இந்தக் கேள்வியே தவறான ஒன்று. அமைதியும் மகிழ்ச்சியும் உழைத்து முயற்சியால் பெறுகின்ற நிலைகள் என்ற தவறான எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. பரபரப்பான ஒரு மனம், நம் உண்மை நிலைகளான அமைதியையும், நிம்மதியையும் மறைத்துவிடுகிறது. ஆகவே மனத்தை இயக்கி ஒரு ஆன்மிக இலக்கைத் தொடர உபயோகிக்கும்போது, அநேகமாக மனத்தை அமைதியினின்று தூரப்படுத்துவதே அன்றி அமைதியை நோக்கி அல்ல. இது பலருக்கு புரிந்து கொள்ள முடியாத கடினமான ஒரு கருத்து.

ஸ்ரீ ரமணரின் முன்னிலையில் மக்கள் தங்களுக்குச் சுயமான உள்ளார்ந்த அமைதியைக் கண்டார்கள் ஏனென்றால் அவர்கள் மனங்களையும், தாங்கள் பல பாவனைகளும், நம்பிக்கைகளும் கூடிய ஒரு தனிப்பட்ட நபர் என்ற உணர்வையும், அழித்துக் கொண்டிருந்த அந்த அற்புதமான சக்தியை அவர்கள் தடை செய்யவில்லை. ஸ்ரீ ரமணரின் உபதேசங்களுக்கான சரியான பயிற்சிமுறை - ஸ்ரீ ரமணரின் இறைச்சக்தி நம் இதயத்தில் தோய்ந்து மாறுதலை உண்டாக்க உதவும் வகையில் அமைதி காத்து, தொடர்ந்து உள்ளார்ந்த மன அடக்கத்துடன் இருப்பதுவே. ஸ்ரீ ரமணரின் வாக்கினாலே இதனைச் சுருக்கமாகச் சொல்வதானால், 'சும்மா இரு, பகவான் பார்த்துக் கொள்வார்'.

'உபதேசங்களுக்கான பயிற்சி முறை  என்று எடுத்துக்கொண்டால், பின் வரும் வழிமுறையைக் கூறலாம். அதாவது ஸ்ரீ ரமணர், அடையவேண்டிய ஒரு இலக்கைக் கூறுவார். இலக்கை அடைய சிறு பயிற்சி;  மனத்தை அவ்விலக்கை நோக்கித் தீவிரமாகச் செல்ல

உபயோகித்தல். இச்செயல்களுக்கெல்லாம் மனமே பொறுப்பேற்க விரும்பும். அது குருவின் சொல்லைக் கேட்டு, செய்ய வேண்டியவற்றைத் தெரிந்து கொண்டு, செல்ல வேண்டிய அந்த வழியில் தன்னைச் செலுத்த முயலும். இது முற்றிலும் தவறானது. உபதேசங்களை செயல்படுத்த மனம் ஒரு சாதனமாகாது. மனம்தான் அவற்றை நேராக அனுபவித்து உணர்வதற்குத் தடையாக உள்ளது.மனம் செய்யக் கூடிய ஒரே பயனுள்ள செயல் மறைந்து போதலே ஆகும்

தன் உண்மையான உபதேசங்கள் மௌனத்தின் வாயிலாகக் கொடுக்கப்பட்டன என்று ஸ்ரீ ரமணரே எப்போதும் சொல்வதுண்டு. அவற்றை ஏற்றுக் கொண்டவர்கள், தங்கள் மனத்தை விலகச்செய்து ஸ்ரீ ரமணரின் மௌன உபதேசங்கள் தங்களிடம் மாற்றங்களை ஏற்படுத்த வழி வகுத்தவர்கள்.'உள்ளது நாற்பது'[2] என்ற நூலின் வாழ்த்துப்பாவில் ஸ்ரீ ரமணர் எழுதியதைச் சிறிது சுருக்கமாகச் சொல்கிறேன். தான் மட்டுமே என்று இருக்கும் ஒன்றின் மேல் யார் தியானிப்பது? ஒருவரும் அதைக் குறித்துத் தியானிக்க முடியாது. ஏனென்றால் ஒருவரும் அதேயன்றி வேறில்லை. அதுவாகவே மட்டும்தான் இருக்கலாம். இதுதான் ஸ்ரீ ரமணருடைய உபதேசங்களின் சாரம். ' நீ நீயாக இரு. எண்ணங்கள் அற்று நீ நீயாக நிலைத்திரு. ஆன்ம விசாரத்திலோ, கடவுள் தியானத்திலோ ஈடுபட முயல வேண்டாம். மௌனத்தைக் கடைப்பிடித்து மனத்தின் மூலத்தில் கவனத்தைச் செலுத்தினால் நீயே இறைவன், நீயே ஆன்ம ஸ்வரூபம் என்ற அனுபவத்தை உணர்வாய்'.

கேள்வி: எத்தகைய வாழ்க்கை நெறி ஆன்மிக விசாரங்களுக்கு உதவும் என்று ஸ்ரீ ரமணர் ஏதாயினும் வழிமுறைகளைக் கொடுத்துள்ளாரா? அதாவது உலகாயதமான உணவு, உறக்கம், பேச்சு, குடும்பம், திருமணம், பாலியல் போன்றவை.

டேவிட்: இதற்குச் சிறந்த பதில் 'மிதமாகச் செயல்படுதல்'. உணவு, உறக்கம், பேச்சு என்றவற்றில் மிதமாக இருத்தல் சாதனையில் வெற்றி பெற சிறந்த முறைகள் என்று ஸ்ரீ ரமணர் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். எதிலும் எந்தவிதமான அதீதத்தையும் அவர் அனுமதித்ததோ, ஊக்குவித்ததோ இல்லை. உதாரணமாக ' மௌனமாக இருத்தல்' என்ற பிரதிஞைகளை ஆதரித்ததில்லை. 'மனதை அடக்க முடியாத போது நாவை அடக்கி என்ன பயன்?', என்று அவர் கூறுவதுண்டு.

---

[2] முருகனார் என்ற பக்தரின் வேண்டுகோளுக்கிணங்கி, தன் உபதேசங்களின் சாரத்தை 42 பாடல்களாக, 1928இல் ஸ்ரீ ரமணர் எழுதியது

அடியார்களை அவர் கண்ணியமான, நேர்மையான வாழ்க்கையை வாழவேண்டுமென்று வலியுறுத்தினாலும், கடுமையான சட்டதிட்டங்களை வற்புறுத்தினாரில்லை. எவராயினும் பிரம்மச்சாரியத்தை தானாகவே உவந்து ஏற்றுக் கொண்டால் மகிழ்வாரேயன்றி, பாலின உணர்ச்சிகளை அடக்கி வாழ்வதைப் பெரிதாக நினைக்கவில்லை. அரவிந்த ஆசிரமத்தில் திருமணமான ஆண்களும் பெண்களும்கூட தனித்தனியாக உறங்குகிறார்கள் என்று யாரோ ஒருவர் சொல்ல, அதற்கு அவருடைய பதில், 'இன்னும் ஆசைகள் உளவாயின் தனித்தனியாக உறங்குவதில் என்ன சிறப்பு?' ஆசைகள் உள்ளவர்கள் அவற்றை ஒழித்துவிட விரும்பி அவருடைய ஆலோசனையைக் கேட்க வந்தால் 'தியானம் செய்தல் அவ்வாசைகளின் பலத்தைக் குறைக்கவல்லது' என்பார்.

ஸ்ரீ ரமணரின் கூற்றுப்படி ஆசைகளை அட்க்கியோ, அல்லது அவற்றிற்கு இடங்கொடுக்காமலோ இருப்பதால் அவற்றை அறவே நீக்க முடியாது; கவனத்தை 'ஆன்மா' மேல் வைப்பதால்தான் அவற்றை அகற்ற முடியும். அவர், மணமானவர்களை ஆசைகளுக்கு இறையாகிவிட்டவர்கள் என்று இழிவாக நினைக்கவில்லை. ஒரு முறை ரங்கன் என்ற ஒரு மணமான அடியாரிடம் 'ஒரு ஸந்நியாசியாக இருப்பதைவிட க்ருஹஸ்த்தனாயிருந்தாலே ஆத்ம சாக்ஷாத்காரத்தைப் பெறுவது சுலபமென்றும் கூறியுள்ளார்.

பழக்கவழக்கங்களையும் உடைமைகளையும் துறப்பது நன்மை பயக்கக் கூடியது என்று அவர் எண்ணவில்லை. மாறாகப் பிரச்னைகளின் ஆணிவேருக்குச் சென்று தான் உடலைச் சார்ந்த ஒரு தனி நபர் என்ற எண்ணத்தை விடும்படியும் அவர் கேட்டுக் கொண்டார். தன் உத்தியோகம், குடும்பம், பொறுப்பு எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு குகைக்குச் சென்று தியானம் செய்ய முற்படினும், தன் மனத்தை உடன் எடுத்தே செல்ல வேண்டும் என்று சில சமயம் சொல்வார். தன் கொடிய ஆட்சியை செய்துகொண்டு இன்னும் அந்த மனம் இருக்கும்போது, நாளடைவில் நன்மை பயக்கக்கூடிய யாதொன்றையும் உண்மையில் துறந்துவிட்டதாக் ஆகாது.

கேள்வி: ஸ்ரீ ரமண மஹர்ஷியின் உபதேசங்கள் என்ற கேள்வி எழும்போது "ஆத்ம விசாரம்", 'நான் யார்' என்றி தன்னையே வினவும் பயிற்சி என்றே பலரும் கருதுகிறார்கள். தாங்கள் அதைப் பற்றிப் பேசவில்லையே?

டேவிட்: நான் அஸ்திவாரத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறேன். நீதிமன்றத்தில் சொல்வதைப்போல சரியான முறையில் விவரிக்க முயன்று கொண்டிருக்கிறேன். 'நான் ஞானம்பெற என்ன செய்ய வேண்டும்' என்று

விசாரத்தில் ஈடுபட்டவர் எப்போதுமே கேட்கும் கேள்வியுடன் மக்கள் ஸ்ரீ ரமணரிடம் வந்தனர். அவர் வழக்கமாகக் கூறும் பதில்களில் ஒன்று, ' சும்மா இரு' என்பது. 'சும்மா' என்றால் 'அமைதியாக' என்பது 'இரு' என்பது ' தங்கி இருத்தலை' உணர்த்தும் கட்டளை வினைச் சொல். எனவே 'அமைதியாக நீடித்து இரு' என்று பொருள் கொள்ளலாம். இதுவே அவரது முக்கிய முதல் அறிவுரை. ஆனால் பல பேர்களால் இயல்பாக அமைதியாக இருக்க முடியாது என்று அவர் அறிவார். அத்தகையோர் தாங்கள் பின்பற்ற ஒரு வழி அல்லது முறை வேண்டுமென்று கேட்டால் பெரும்பாலும் ஆத்மவிசாரம் என்னும் முறையைப் பின்பற்றும்படி பரிந்துரைப்பார். அநேகமாக இதற்குத்தான் அவர் பெயர்பெற்றவர். அது (ஆத்மவிசாரம்) என்றால் என்ன, பயன் என்ன, எவ்வாறு நடமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றெல்லாம் புரிந்துகொள்ள, மனத்தைப் பற்றிய ஸ்ரீ ரமணரின் கருத்துக்களைசிறிது ஆராயவேண்டும்.

தனிநபர் என்பது (அகந்தை), பொய்யான கற்பனையிலுதித்த ஒன்று. நாம் அதன் உண்மைச் சொரூபத்தை விவரமாக சோதித்தறியாமையால் அது நீடித்திருக்கிறது. நாம், தொடர்ந்து எண்ணங்கள், நம்பிக்கைகள், உணர்ச்சிகள், பொருள்கள் முதலியவற்றுடன் நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதால், 'நான்' என்ற உண்ர்வும் ஒருகுறிப்பிட்ட உடலுக்குச் சொந்தமான நபர் என்ற பாவமும் நிலை பெற்று விடுதிறது. 'நான்' தனித்து நிற்பதில்லை. எதனுடனாவது சேர்ந்தே இருக்கும். 'நான் ஜான்', 'நான் கோபமாக இருக்கிறேன்', 'நான் ஒரு வக்கீல்', 'நான் ஒரு பெண்' முதலியவை போல.  அவை சுயேச்சையாக தன்னிச்சையாக நிகழ்பவை.. வேண்டுமென்றே நினைத்து நினைத்து விருப்பப்பட்டு செய்யப் படுபவையல்ல. அவை நம் அனுபவங்களுக்கும் பழக்கங்ளுக்கும் பின்னால் இருக்கும் ஆக்ஷேபிக்கப்படாத ஊகங்கள். ஸ்ரீ ரமணர் முழு கவனத்தையும் 'நான்' என்ற விசாரத்தில் செலுத்தி, ஏனைய எல்லா சம்பந்தங்களிலிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ளுமாறு சொல்கிறார். அவ்வாறு செய்வதால் எண்ணங்கள், நம்பிக்கைகள், கருத்துகள் மற்றும் உணர்ச்சிகளுடன் அது இணைந்துகொள்வதைத் தடுக்கமுடியும். நமக்குப் பழகிப்போன ஒரு உண்ர்ச்சி அல்லது எண்ணத்துடன் ஆரம்பித்தல் இதற்குச் சிறந்த முறை. உதாரணமாக, இரவு என்ன உணவு அருந்தப் போகிறேன் என்ற நினைவில் நான் இருக்கலாம். ஆதலால் 'யார் இரவு உணவை எதிர்நோக்கிக்கொண்டிருப்பது' என்ற கேள்வியை நான் கேட்டுக்கொள்ள, அதற்கான பதில் ' நான்' என்று எழும். பிறகு ' நான் என்பது யார்? இந்த 'நான்' என்று அடுத்த உணவுக்காகக் காத்துக்கொண்டிருப்பது யார் அல்லது எது?' என்று நீயே உன்னைக் கேட்டுக் கொள்ள வேண்டும். இது மனத்திற்குள் நடப்பவற்றைப் பற்றிய அறிவு பூர்வமான அலசலுக்கு ஒரு அழைப்பு அல்ல; மாறாக 'அடுத்த

வேளை உணவு' என்ற எண்ணத்தின் கருவிலிருந்து கர்த்தாவான, அவ்வெண்ணத்தை உடையவனுக்குக் கவனத்தைத் திருப்பும் ஒரு உபாயமாகும். அந்த க்ஷணத்தில் செய்ய வேண்டியது 'நான்' என்பதில் உறுதியாக நின்று, எண்ணங்களோடும் பொருட்களோடும் இருக்கும் ஈடுபாடுகளும் உறவுகளும் நீங்கிவிட்டால் எவ்வாறு இருக்கும் என்று மனதளவில் அனுபவித்தறிய முயல வேண்டும். தன்னைப் பரபரப்பாக வைத்துக் கொள்வது மனத்தின் இயல்பாதலால் பல பேருக்கு இவ்வாறு நீடித்திருக்க முடியாது.. தொடர்ந்து வேறு சிந்தனைத்தொடர்களும், புதிய இணைப்புகளும் நம்மை சூழ்ந்துகொள்ளும். இவ்வாறு நிகழும்போது, 'பகற்கனவு கண்டுகொண்டிருப்பது யார்' என்று ஒவ்வொரு முறையும் உன்னை நீயே கேட்டுக்கொள். மருத்துவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைப் பற்றிக் கவலை கொண்டிருப்பது யார்? வானிலையைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பது யார்? முதலானவை போன்று. ஒவ்வொன்றிற்கும் பதில் ' நான்' என்பது. வேறு எதனோடும் சம்பந்தப்படாத நான் என்ற அனுபவத்தை முடிந்த அளவு நீடிக்க வைத்துக்கொள். எவ்வாறு இவ்வனுபவம் எழுதுகிறதென்றும், அதைவிட முக்கியமாக மனத்தைக் கவரும் எண்ணங்கள் அற்ற நிலை எந்த இடத்தில் வந்து தணிகின்றது என்றும் கவனமாகப் பார். விசாரத்தின் அடுத்த கட்டம் இது.'நான்' என்ற உணர்ச்சியை அது வழக்கமாக ஒன்றிக் கொள்ளும் விஷயங்களிலிருந்து பிரிக்கமுடியுமாயின், அது மறையத் தொடங்குவதைக் காணலாம். அது தணிந்து மேலும் குறைந்து கொண்டே வரும்போது உண்மையில் நமக்கே உரித்தான, இயற்கையான நிலையான அமைதியையும் ஆனந்தத்தயும் அனுபவிக்க ஆரம்பிப்போம். சாதாரணமாக இவற்றை நாம் அனுபவிப்பதில்லை. ஏனென்றால் பரபரப்பான நம் மனம் அவற்றை மூடி மறைத்து விடுகிறது. ஆனால் அவை எப்போதும் உள்ளவை. மனஓட்டத்தை நிறுத்தும்போது அனுபவிக்க நேர்வது அதுவே.

இது ஒரு விதமான மனத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி. பொன்னும், புதையலுமான நம் உண்மையான நிலைக்குண்டான இயற்கையான ஆனந்தம் அங்கே நமக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் அதைத் தேடுவதில்லை.. அதைப் பற்றின அறிவு கூட நமக்கில்லை. ஏனென்றால் நாம் காண்பது, நாம் அறிந்ததெல்லாம் அதன்மேல் குவிந்துவிட்டவைகளை. அதைத் தோண்டி எடுக்கும் கருவி, 'நான்' என்பதை இடையறாது உணர்ந்து கொள்வதே. அது நம்மை எண்ணங்களிலிருந்து மீட்டு, அமைதியும், ஆனந்தமுமான நம் உண்மை சொரூபத்தில் கொண்டு சேர்க்கும். இவ்வாறான செயல்பாட்டை ஒருமுறை ஸ்ரீ ரமணர், தன் எஜமானனின் மணத்தின் துணைகொண்டு, அவரைத் தேட முயலும் ஒரு நாய்க்கு ஒப்பிட்டார். பற்றுதலில்லாத

’நான்’ என்பதைப் பின்பற்றுதலால் நான் என்கிற அகந்தை தனிப்பட்ட நபர் இருந்தே இராத இடத்திற்கு, நாம் சேர வேண்டிய இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும்.

இதுவே ஆத்ம விசாரம். பயிற்சி செய்ய வேண்டிய முறை இதுவே. எப்போதும் ’நான்’ என்ற உணர்வைப் பற்றிக்கொள்ளுங்கள். வேறு விஷயங்களில் கவனம் சிதறும்போது மறுபடி அதற்கே திரும்புங்கள். ஸ்ரீ ரமணர் இதை ஒரு தியானப் பயிற்சியாகக் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை என்பதைக் கூற விரும்புகின்றேன். உடல் என்ன செய்துகொண்டிருந்தாலும் இது (ஆத்ம விசாரம்) எப்போதும் நமக்குள் நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டிய ஒன்று.

ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடைவதற்கு மிகச் சிறந்த முறையாக இதை ஸ்ரீ ரமணர் சொன்ன போதிலும் இந்த இலக்கை அடைவதில் வெற்றி பெற்றவர் மிகச் சிலரே. இந்த முறையாலோ வேறு வழியாலோ வெற்றி பெறமுடியாதபடி நம்மில் பலருக்கு மனமானது மிகக் கடினமாக இருக்கிறது. ஆனாலும் ஆத்ம விசாரத்தில் நாம் செலுத்தும் முயற்சி ஒருபோதும் வீணாகாது. கூறப்போனால் பலருக்கு இது ஒருவகையான வெற்றிபெற்ற நிலையே; ஒன்று ஞானம் கைகூடும். அல்லது அமைதியும் ஆனந்தமுமாவது வந்தடையும்.

கேள்வி: ’ஆத்ம விசாரத்தைப் பயின்ற பிறகும் வெகுசிலரே ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்ற இலக்கை அடைவதில் வெற்றிபெற்றனர்’ என்ற தங்கள் பதிலைக் கேட்ட பின், ஆத்மவிசாரம் செய்ய முயல்வதற்குக்கூட பின்வாங்கலாம். ஒருகால் இதைச் சரிவர புரிந்துகொள்ள, பூரண ஆத்மஸக்ஷாத்காரம் என்ன என்பதை விரிவாக விளக்கிச் சொல்வது உதவியாக இருக்கும். அது கிடைப்பது கடினமானதா அல்லது அரிதானதா? ஆத்மவிசாரத்தைச் சரியான முறையில் செய்யாததால் அது அரிதானதா கிறதா?

டேவிட்: ’நான்’ என்ற நபரின் அனுபவத்தின் உறுதியான முடிவு ஆத்மஸாக்ஷாத்காரம். அது நிரந்தரமான விழிப்புணர்ச்சியுடன் கூடிய நிரந்தரமான நிலை. உலகத்தின் எல்லா நாம ரூபங்களும் தோன்றுவதற்கான அடிப்படை ஒருவனது உண்மைச் சொரூபமே என்று உணர்தலைத் த்ன்னுள் கொண்டது. பலர் இவ்வுண்மையை அவ்வப்போது கண்டாலும் மனம், தனிப்பட்ட ’நான்’ மறுபடிவலிவுறும்போது அதை இழந்துவிடுகிறார்கள். தான் ஒரு தனிப்பட்ட நபர் என்ற எண்ணத்தை நிரந்தரமாக அழிப்பது என்பது இயலாத ஒன்று என்று நான் நினைக்கிறேன். ஆனால் பலர் இதை மறுக்கக்கூடும்.

ஸ்ரீ ரமண மஹர்ஷியைப் போன்றவர் ஒரே ஒரு முறை செய்யும் ஆத்ம விசாரத்தினால் ஸாக்ஷாத்காரத்தை அடைந்து விடுகின்றனர். ஆனால்

மற்றவர்கள் ஐம்பது வருடங்கள் தியானத்திற்குப் பின்னும் அந்நிலையை அடையத் தவறிவிடுகின்றார்களே என்று ஒரு முறை நிஸர்கதத்தா மஹராஜ்[3] என்பவரைக் கேட்டேன். அவர் பதிலைக் கேட்க நான் ஆவலாக இருந்தேன். ஏனென்றால் மறுபிறப்பு நிகழ்வதில்லை என்று அவர் ஆசிரியராய் இருந்த அச்சமயத்தில் உறுதியாகப் பிடிவாதமாக கூறிக்கொண்டிருந்தது எனக்குத் தெரியும். தங்கள் முந்தையப் பிறவிகளில் அவரைப் போல் தியானம் செய்யாதவர்களைவிட ஒருவித அனுகூலத்துடன் ஸ்ரீ ரமணர் பிறந்துள்ளார் என்று அவரால் கூற முடியாது. சிலர் ஒரு சுத்தமான இரசாயனப் பொருளுடன் பிறந்தவரென்றும், மற்றவர் அவ்வாறில்லை என்றும் பதிலளித்தார். இரசாயனம் என்ற உவமையை படம் பிடிக்கும் தகடுகள்(films) மேல் பூசப்படும் இரசாயனப் பொருள்களின் அடுக்குகளிலிருந்துஅவர் பெற்றார் என்று நான் நினைக்கிறேன். அவருடன் பேசியதில் நான் அறிந்துகொண்டது - நம் வாழ்க்கைக்கான ஒரு படத்தகடு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது - அதாவது நம் வாழ்க்கையைச் செலுத்த ஏறத்தாழ முன்கூட்டியே தீர்மனிக்கப்பட்ட விவ்ரங்கள் இரசாயனத்தின் தன்மை கருத்தரிக்கும் சமயம் இருக்கக்கூடிய பலவித காரணங்களால் தீர்மானிக்கப்படுதிறது, அவர் கூறிய சில காரணங்கள், நம் பெற்றோர்களின் மரபுப்பண் தொடரக் காரணமாயிருக்கும் உயிர்த்துளிகள் (genes) கிரஹங்களின் பரஸ்பரநிலை, நாம் வளரப்போகும் சுற்றுச் சூழ்நிலை என்பன. நல்ல இரசாயனப் பொருள் கிடைக்கும் அதிர்ஷ்டம் உள்ளவர்கள் ஆத்மஸாக்ஷாத்காரம் அடைந்தனர். அசுத்தமான கெட்ட இரசாயனத்தைக் கொண்டவர்கள் எவ்வளவு முயன்றாலும் அதை அடைவதே இல்லை

நாம் ஞானத்தைப் பெறுவது இரசாயன்த்தின் தன்மையே தீர்மனிக்கும் என்றால் ஆன்மிக முயற்சிகளுக்கு அர்த்தமே இல்லை என்றும், இது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட்துபோல் இருக்கிறது என்றும் நான் கூறினபோது, சிலர் சிறிதே அசுத்தமான இரசாயனப்பொருளுடன் பிறக்கின்றனர் என்றும் அவர்கள் ஆத்மஞானமடைந்த ஒரு குருவின் துணையாலும், உண்மையை உணர்வதற்கு திடமான ஆர்வம் காரணமாகவும் ஆதம ஞானத்தைப் பெற முடியும் என்றும் பதிலளித்தார். இக்கருத்தின்படி பல வருடங்கள் ஆத்மவிசாரம் செய்தும் வெற்றி காணாதவர்கள் தவறான முறையில் செய்கின்றனர் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாது. எத்தனை முயன்றாலும் விளக்கம் பெற முடியாத

[3] 1981 இல் காலம் சென்ற நிஸர்கதத்தா மஹராஜ், பம்பாயில் ஒர் சிறு வீட்டில் இருந்தவர். தற்காலத்து அத்வைத போதகர்களில் மிக்க புகழ் பெற்றவர். ஆன்மிக நூல்களில் - I am that. - என்ற அவரது சம்பாஷணை அடங்கிய புத்தகம் சிறப்பானது. அவர் உபதேசங்களில் பல ஸ்ரீ ரமணருடையவை போன்றது

அளவு அவர்களுடைய இரசாயனப்பொருள் மிக அசுத்தமாக உள்ள வெறும் துரதிர்ஷ்டம்  கொண்ட பெரும்பான்மையோராவார். மேலும் மறுபிறப்பு என்று ஒன்றில்லையாதலால் இவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பிற்காலத்தில் பலனளிப்பதில்லை.

இது ஒரு விசித்திர விளக்கமுறை.- நான் எங்கும் கேட்டதோ, படித்ததோ இல்லை - மிகவும் குழப்பமுள்ளாதாகத் தோன்றியது. நிஸர்கதத்தா மஹராஜைக் காண நான் காணச்சென்ற சமயங்களில் அவர் எழுதிய 'I am That' என்ற புத்தகத்தின் முன்பக்க அட்டையில், மறுபிறப்பு எவ்வாறு நிகழ்கிறது என்பதைப்பற்றி அவர் எழுதிய விரிவான குறிப்புகள் இருந்தன. ஆனால் அவர்காலத்தின் கடைசி நாட்களில், மறுபிறப்பு என்பது உண்மை என்றோ ஒரு பிறவியின் முயற்சிகளோ முதிர்ச்சியோ மறுபிறப்பில் தொடரும் என்றோ அவர் ஒப்புக்கொண்டதில்லை.

ஸ்ரீ ரமணரின் சிஷ்யர்களான லக்ஷ்மணஸ்வாமி[4], பாபாஜி போன்றோர் பல பிறவிகளில் செய்யும் ஆன்மிக முயற்சிகள், இறுதிப்பிறவியின் போது விரைவில் ஆத்மஞானம் பெற ஏதுவாகும் என்று கூறுவதுண்டு. ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமியை நீங்கள் ஏன் விரைவாக ஆத்மானுபூதியைபெற்றீர் என நான் வினவியபோது அவர், 'என் முற்பிறவிகளில் வேண்டிய அளவு வேலையை முடித்துவிட்டேன்' என்றார்; பாபாஜி[5], முற்பிறவியில் தான் தென்னிந்தியாவில் ஒரு யோகியாக இருந்தது பற்றிய நினைவுகள் இருப்பதாகக் கூறினார்.

ஸ்ரீ ரமணர் தன் முற்பிறவிகளைப்பற்றி பேசியதே இல்லையென்றாலும் ஏதோ ஒரு பிறவியில் தனக்கு ஒரு குரு இருந்திருக்க வேண்டும் என்று ஒரே ஒருமுறை ஒப்புக்கொண்டுள்ளார்.. எனக்குத் தோன்றுவது என்னவென்றால் - வேறு உடலில் செய்யவேண்டிய எல்லா ஆன்மிக முயற்சிகளையும் செய்துமுடித்துவிட்டு அவர் இறுதியாக இப்பிறவியில் அதீத தூய்மையுடனும், ஒரு தயாரான நிலையிலும் வந்துதித்தார்;

---

[4] டேவிட், ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமியைப் பற்றியும் அவரது சிஷ்யையான மாத்ரு ஸ்ரீ சாரதாவைப் பற்றியும் No mind -I am the Self -என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இப்போது அச்சில் இல்லை.  அவரது சமீபத்திய புத்தகமான The power of Presence-part 2  என்ற புத்தகத்தில் ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமியின் வாழ்க்கையை பற்றியும் , அவர் ஆத்மானுபூதி பெற்றதைப் பற்றியும் படித்து மகிழலாம்

[5] பாபாஜி அல்லது Sri H.W.L.Poonja , லக்னௌவில் வசித்த ஸ்ரீ ரமணரின் சீடர்.தூங்கும் மனிதர்களைத் தட்டி எழுப்புவதற்குப் பெயர் பெற்றவர்.  Nothing Ever Happened - என்ற மூன்று பகுதிகள் கொண்ட பபாஜியின் சரிதத்தை டேவிட் எழுதியுள்ளார்.

எனவே தானாகவே அவர் தேடாமலேய் அவரின் சிறு பிராயத்திலேயே அந்த ஆத்மானுபூதி அவருக்கு நிலைத்துவிட்டது.

ஆத்ம விசாரமோ அல்லது வேறு எந்த பயிற்சியையோ மேற்கொள்ளும்போது, தீர்க்கமான தரிசனத்தோடு தொடங்கவேண்டும். ஆத்மானுபூதி எப்போது வேண்டுமானாலும் கிடைக்கக்கூடிய ஒன்றென்று நினைப்பது தவறில்லை. உண்மையில் மிகவும் மெச்சத்தக்க மனோபாவம்தான். ஆனால் அது கிட்டவில்லை என்றால் மனம் தளரக் கூடாது. பலருக்கு 'நான் யார்' என்று தன்னைய கேட்டுக்கொள்வது அறியாமையும், மனக்கட்டுப்பாடுமான ஒரு மலையை சிறிது சிறிதாகத் தகர்க்க முயல்வது போன்றது. இப்பிறவியிலேயே பலன் தரக்கூடும், இல்லையெனில் பலன்கள் வேறு ஒரு பிறவிக்குத் தொடர்ந்து வரும். எவ்வாறாயினும், இப்பயிற்சி தவறாமல் செய்யப்பட்டால், நமது நேரம, சக்தி என்ற முதலீடுகளை ஈடு செய்யும் வண்ணம் போதுமான அளவு அமைதியையும், சாந்தியையும் நிச்சயம் கொடுக்கும்.

கேள்வி: 'நான் யார்' என்ற விசாரத்தை ஒரு மந்திரமாக மாற்றிவிடும் போக்கு பலரிடம் உள்ளதென்று என் அனுபவத்தில் கண்டுள்ளேன். அது சரியான முறையாகுமா?

டேவிட்: மேல்நாட்டு பழக்கவழக்கங்களைப் பற்றி ஒன்றும் அறியாத பசிபிக் கடலிலுள்ள ஒரு தீவை இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்க வீரர்கள் கைப்பற்றினர். சைன்யர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு குவிப்பதற்காக ஒரு பாதை அமைத்து விமானம் மூலம்கொண்டு சேர்த்தனர். தீவின் உள்ளூர் வாசிகளில் இன்னும் ஆதிவாசிகளாகவே இருந்தவர்களுக்கு அப்பொருள்களில் எஞ்சியவைக் கிடைத்தன. போர் முடிந்தபின், சில கட்டிடங்களையும் விண்கலத்துக்கான பாதையையும் அங்கேயே விட்டுவிட்டு அமெரிக்கர்கள் வெளியேறினர். உள்ளூர் ஆதிவாசிகள் முன்போல் பொருள்கள் தொடர்ந்து குவியவேண்டும் என்று விரும்பினர். ஆனால் எவ்வாறு இது முடியுமென்று அவர்களுக்குப் புரியவில்லை. உலக அரசியலைப் பற்றியோ, வேறு செய்முறைகளைப் பற்றியோ சிறிதும் தெரியாத அவர்கள். ஆகாயத்திலிருந்து மிகப்பெரிய பறவைகள் இறங்குவதையும், பாதையில் நினைக்க முடியாத அளவு பண்டங்களைக் குவித்துச் செல்வதையுமே கண்டிருந்தார்கள். அந்நியர்கள் தங்கள் தீவில் ஏன் உள்ளார்களென்றோ, இந்த விசித்திரமான பொருள்கள் எவ்வாறு தயாரிக்கப்பட்டு தங்கள் தீவிற்கு கொண்டுவரப்படுகின்றன என்பது பற்றியோ தெரிந்துகொள்ள சிறிதும் முயன்றாரில்லை. அப்பெரிய உலோகத்தாலான பறவைகளைத் தங்கள் தீவிற்குத் திரும்ப வரவழைக்கும் முயற்சியில் விண்கலப்பாதையில் சிறு பீடங்கள்

அமைத்து அங்கு தங்களுக்குத் தெரிந்தசமயச் சடங்குகளைச் செய்யலானார்கள். இச்சடங்குகள் ஒரு விதமான மதக்கொள்கை என்று ஸ்தாபிதமாகி ' மனித வர்க்க சாஸ்த்ர' வல்லுநர்களால் 'சரக்கு மதம்(cargo cult)' எனப் பெயரிடப்பட்டது. இதை நான் சொல்வது ஏனென்றால் பலர் ஆத்மவிசாரம் எப்படி, ஏன் பலனளிக்கின்றது என்று புரிந்துகொள்ளாமலே செய்ய முயல்கின்றனர், இந்த அறியாமை, உள்ளபடி ஆத்ம விசாரம் அல்லாத பல பயிற்சிகளைச் செய்ய ஏதுவாகிறது. அதனால் விரும்பிய பலன்கள் கிடைப்பதில்லை. முன்கூறிய ஒப்புமையை இன்னும் சற்றுத் தொடர்ந்தால் ' ஆத்மவிசாரம்' , ' சரக்கு மதவிசாரம்' -- இரண்டிற்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் ஆத்மவிசாரம் எவ்வாறு, ஏன் செயல்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆத்மவிசாரத்தில் 'தான்' என்ற நபரைத் தனிப்படுத்துகின்றோம். அவ்வாறு செய்வதால் மனத்தையும் 'தனிநபர்' என்ற உணர்வையும் அவை எழும் இடத்திற்கே திரும்பிச்சென்று மறையுமாறு செய்கிறோம். பொருட்களோடும் எண்ணங்களோடும் மனத்தை இணைத்துக்கொள்ள வைக்கும் வழிமுறை எதுவும் ஆத்மவிசாரமாகாது. அது மனநாசத்திற்கு அடிகோலாகாது, மாறாக மனத்தை இன்னும் வலிமை கூடியதாகச் செய்யும். 'நான் யார்' 'நான் யார்' என்று திரும்பத் திரும்பக் கூறும்போது ஒரு எண்ணாத்தின் கருவாகிய 'நான்' என்ற நபர்(எழுவாய்), 'நான் யார்' என்ற தொடரின் மேல் கவனம் செலுத்துகிறார். இது 'நான்' என்ற அகத்தை அதன் எண்ணங்களிலிருந்து பிரிக்க உதவாது; அவற்றில் சிக்கிக்கொள்ளவே வைக்கும்.

ஆத்மவிசாரத்தை உடலின் குறிப்பிட்ட ஒரு பாகத்தில் உணர்வைச் செலுத்துதலோடு சம்பந்தப்படுத்தும் பயிற்சிகளைப் பற்றியும் இவ்வாறே கூறவேண்டும். இத்தவறான கருத்து பல பேருக்கு உண்டு. உடலின் ஒரு பாகத்தில் கருத்தைச் செலுத்துவதால், அது எந்த பாகம் ஆயினும் 'நான்' என்ற அகத்தை அறியப்படும் ஒரு பொருளோடு சம்பந்தப்படுத்துகிறோம். இது ஆத்மவிசாரமாகாது; இதனால், ஒருபோதும் 'நான்' என்ற அகத்தை நசித்துப் போகச்செய்ய முடியாது. 'நான்' அல்லாத வேறு எண்ணம், கருத்து, உணர்ச்சி இவைகளின்மீது கவனம் செலுத்தும் எந்த செய்முறையும் ஆத்மவிசாரமாகாது. நீங்கள் அவ்வாறு நினைத்தால், நீங்கள் 'சரக்குமத' விசாரத்தைதான் செய்துகொண்டிருப்பீர்கள். மனமானது எப்படி எழுச்சி அடைகிறது, எப்படி அதை மறையச் செய்யலாம் என்பது பற்றிய தவறான அனுமானத்தால் எழுந்த ஒரு சடங்கை அல்லது பயிற்சியைப் பின்பற்றிக் கொண்டிருப்பீர்கள். மதச் சடங்குகளின் வாயிலாக வானத்திலிருந்து விமானங்களை வசியம்

செய்ய முயன்ற தீவு வாசிகளுக்குக் கிடைக்கப்போகும் வெற்றிதான் உங்களுக்கும் சாத்தியமாகும்.

கேள்வி: ஆயின் பக்திக்கும் நம்பிக்கைக்கும் பங்கு ஏதும் இல்லையா? என்ன செய்ய வேண்டும் அல்லது எதனைத் தவிர்க்க வேண்டும் என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமலே மிகுந்த பக்தி சிரத்தையுடன் செயல்படும் மக்களின் நிலை என்ன?

டேவிட்: நான் பக்தியையோ நம்பிக்கையையோ குறை கூறவில்லை. நான் சொல்ல விரும்பியது என்னவென்றால், ஆத்மவிசாரம் செய்வதற்கு பயனளிக்கும் முறையும் பலனில்லாத முறையும் உள்ளன. 'நான்' என்னும் அகத்தின் இயல்பைப் பற்றியும், அது எவ்வாறு எழுகிறது, அதை எப்படி அடங்கச்செய்வது என்பது பற்றியும் ஸ்ரீ ரமணரின் அறிவுரைகளை புரிந்து கொள்வதால் இவற்றின் வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆத்மானுபூதி அடைந்த ஒரு குருவினிடம் முழுமையான நம்பிக்கையும் பக்தியுமே ஒருவனைத் தன் இலக்கு நோக்கி அழித்துச் செல்லும். வேறு எதனைப் பற்றியும் சிந்தனையோ, கவலையோ தேவையில்லை. இதற்கான நான் கண்ட சிறந்த உதாரணம் மாத்ருஸ்ரீ சாரதா[6] அவர்கள். ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமியின் பக்தையான இவர், அவர்மேல்கொண்ட ஆழ்ந்த அன்பினாலும், பக்தியினாலும் மட்டுமே அனுபூதி கிடைக்கப் பெற்றார். 1970-ம் ஆண்டுகளில் அவர் பெயரை ஒரு நாளில் 20 மணிநேரம் ஜபித்துக்கொண்டும்; அவருடைய புகைப்படத்தில் கருத்தைச் செலுத்திக்கொண்டும், மிகுந்த 4 மணிநேரத்தில் உறங்கும்போது, பலமுறை அவரைத் தன் கனவுகளில் கண்டுகொண்டுமிருந்தார். இது வெறும் ஆழ்ந்து மனத்தை ஒருமுகப்படுத்துதல் மட்டுமன்றி, கூடவே இடையறாது ஆழ்ந்த அன்புப் பெருக்கும் இருந்தது.அப்பெருக்கு சில சமயம் அதீதமாகி, தன்னை இரவில் விழித்துக் கொண்டிருக்க வைத்தது என்று லக்ஷ்மணஸ்வாமி கூறியுள்ளார். தனக்கு சிறிது தூக்கம் கிடைப்பதற்காக அபரிமிதமான அப்பெருக்கைச் சிறிது மிதமாக்கிக் கொள்ளும்படி ஒரு முறை அவர் கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்களால் அது இயலவில்லை. பக்திக்குகந்தவர்பால் அந்த அன்பு தொடர்ந்து 24 மணிநேரமும் பெருகிக்கொண்டே இருந்து இறுதியில் அந்த

---

[6] No Mind- I am the Self- என்று டேவிட் எழுதிய புத்தகத்தில் மத்ரு ஸ்ரீ சாரதா ஆத்மானுபூதி பெற்றது பற்றிய விவரங்கள் உள்ளன.அவரது குருவான் ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமி , ஸ்ரீ சாரதா ஆத்மானுபூதி பெறும் போது ஏற்படும் அனுபவங்களை பதிவு செய்ய அவள் அருகே ஒரு ஒலிப்பதிவு செய்யும் கருவியைப் பொருத்தியிருந்தார். இவ்விரு அனுபூதி பெற்ற குருமார்களின் அனுபவங்களும், பல சம்பவங்களும் இப்புத்தகத்தில் நிறைந்துள்ளன.

அன்பின் சக்தியினால் அவருக்கு அனுபூதி பூரித்தது. இந்த முறையில் அனுபூதி பெற அந்த அளவு அன்பு செலுத்தவேண்டும். ஆத்மவிசாரத்தால் ஆத்மஸாக்ஷாத்காரம் பெற விரும்பினால் ஆன்மிகப் பாதையில் அதே அளவு சிரத்தையும் தீவிரமும் தேவையாகும்.

கேள்வி: வெறும் மந்திர ஜபமும், மனகற்பனை வடிவங்களும் ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதற்கு தடைகளாகக் கூடும் என்பதில் ஸ்ரீ ரமணர் மிகத்தெளிவாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? ஆத்மவிசாரம் என்னும் வழிமுறையை ஸ்ரீ ரமணர் பெரிதும் விரும்பினாலும், வேறு பயிற்சிகளைத் தொடர அதற்கு ஒவ்வாதிருப்பினும், பலரை ரமணர் அனுமதித்தார்; மேலும் ஊக்கமும் அளித்தார் என்பது உண்மையா? ஆத்மவிசாரம் அத்துணை பயனளிப்பது என்று அவர் நினைத்தால் தன்னிடம் அறிவுரை கோரி வந்தவர்களுக்கு அம்முறையைப் பின்பற்ற ஏன் வலியுறுத்தவில்லை?

டேவிட்: பற்பல கேள்விகள் இவை. ஒவ்வொன்றாகப் பதிலளிக்கிறேன். ஸ்ரீ ரமணரைக் காண முதன்முறை வரும்போது மக்கள் ஆன்மிகம் பற்றிய அறிவுரை கேட்பார்கள். ஸ்ரீ ரமணர் அநேகமாக 'த்றபோது நீங்கள் செய்யும் பயிற்சி என்ன?' என்று பதிலளிப்பார். அவர்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை வழிபடுகிறோமென்றோ அல்லது ஒரு மந்திரத்தை ஜபம் செய்து கொண்டிருக்கிறோமென்றோ கூறினால், ஸ்ரீ ரமணார் 'நல்லது அதை நீங்கள் தொடர்ந்து செய்யலாம்' என்பார்.

வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு பாதைகளால் ஈர்க்கப்ப்டுகிறார்கள் என்று அவர் உணர்ந்திருந்தார். மேலும் ஆத்மவிசாரத்தைகப் பலர் கடினமானதாகவும், எழுச்சியற்றதாகவும் உணர்ந்தனர். அவர் ஒரு ஸர்வாதிகாரி அல்ல. அவருடைய ஆஸ்ரமத்தில், எந்த ஆன்மிகப் பாதையையும் அனுசரிக்கும் சுதந்திரம் இருந்தது. எவரும் ஸ்ரீ ரமணரின் உபதேசங்களைப் படிக்கவோ குறிப்பிட்ட பாதையைப் பின்பற்றவோ வற்புறுத்தப்படவில்லை.

பலமுறை அடியார்கள் சில மாதங்களுக்குப்பின், தங்கள் பழைய பயிற்சி முயற்சிகளில் ஆர்வம் இழந்துவிட்டதை உணர்ந்தனர். அவர்கள் மறுபடியும் ஸ்ரீ ரமணரை அணுகி தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று வினவுவர். அப்போது ஸ்ரீ ரமணர் ஆத்மவிசாரத்தைபற்றிக் கூறுவாரேயன்றி மாறவேண்டுமென்று வற்புறுத்தமாட்டார். இருப்பினும் சிலர் அவரிடம் சென்று ' நான் தற்போது எவ்விதமான பயிற்சியையும் மேற்கொள்ளவில்லை, ஆனால் ஆத்மஞானம் பெற விரும்புகிறேன். அதற்கு விரைவான நேரான வழிமுறை என்ன?' என்று கேட்பார்கள்.அவ்வாறு கேட்பவர்களை அவர் ஆத்மவிசாரம் செய்யுமாறே

கூறுவார்.

கிராமவாசிகளின் குழு ஒன்று 1920-யில் ஸ்ரீ ரமணரைக் காண வந்ததைப் பற்றிய ஒரு நல்ல கதை உண்டு. அவர்களில் ஒருவர் ஆத்மானுபூதி அடைய மிகச்சிறந்த வழி என்னவென்று கேட்க, ஆத்மவிசாரம் செய்யும்படி ஸ்ரீ ரமணர் உபதேசித்தார். ஒரு அனுபவம் மிக்க அடியார் அவ்வுபதேசம் சரியானதா என்று பின்னர் தமது சந்தேகத்தை வெளியிட்டார். கிராமவாசிகள் போன்ற மக்கள் ஏதாவது ஒரு வகையான ஜபம் செய்யும்படி சொல்லப்படுவதே உசிதம் என்று அவர் எண்ணினார்.

இந்த விமர்சனம் குறித்து ஸ்ரீ ரமணர் கேள்விப்பட்டபோது, ' மிகச்சிறந்த வழி என்னவென்று என்னை வந்து கேட்கும் மக்களை நான் ஏன் ஏமாற்றவேண்டும்?' அவர் கேள்வி கேட்டார். நான் அதற்குச் சரியான பதிலைக் கொடுத்தேன்' என்றார். ஆத்மவிசாரம் செய்ய விரும்பினவர்களை ஸ்ரீ ரமணர் ஊக்குவித்தார். ஆனால் அவர்கள் வேறு மார்க்கங்களால் கவரப்பட்டால், அவர்களுக்குப் பிடித்தமில்லாத ஒன்றைச் செய்யும்படி அவர்களை வற்புறுத்தியதில்லை. அவரைக் காண வந்தவர்களுடன் அவர் நடத்திய பிரசுரிக்கப்பட்ட சம்பாஷணைகளை நோக்கினால் பலமுறை, ஆர்வம் காட்டாத சிலருக்கு ஆத்மவிசாரத்தைப் பரிந்துரைப்பதைக் காணலாம். அவர்களுடைய தயக்கத்தை அவர் புரிந்துகொண்டதும் வேறு மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும்படி கூறிவிடுவார்.

இது உங்களுடைய அடுத்த கேள்விக்குக் கொண்டு செல்லும். ரமணாருடைய உபதேசங்களில் ஜபம், தெய்வச்சொரூபங்கள் அல்லது சின்னங்கள் மீது தியானம் போன்ற ஆன்மிகப் பயிற்சிகளுக்கு என்ன பங்கு? ஆத்மஞானம் பெற இரண்டே வழிகள்தான் உள்ளன என்று அவர் எப்போதும் சொல்வதுண்டு; ஆத்ம விசாரம் செய் அல்லது கடவுளிடமோ, குருவிடமோ முழுமையாக சரணடைந்துவிடு. தெய்வங்களின் நாம ரூபங்களில் காட்டும் பக்தியை ஒருபோதும் குறைவாகப் பேசியதில்லை.

சரணாகதி மார்க்கத்தைத் தொடர்பவர்களில் பலரும் ஏதோ ஒரு தெய்வத்தின் நாமத்தை ஜபம் செய்வதுண்டு. ஸ்ரீ ரமணர் இதை முழுமனதோடு ஆதரித்தாலும், ஜபம் செய்யப்படும் பெயரின்மேல் அல்லது தியானிக்கப்படும் உருவத்தின்மேல் மிகுந்த பிரீத இருந்தால்தான் அவ்வாறான வழிமுறைகள் பலனளிக்குமென்று அவர் சொல்வதுண்டு. இந்த வித்தியாசம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஜபிக்கப்படும் பெயரின்மேல் பக்தியும் அன்பும் இல்லாவிடில் ஒரு நாள் முழுவதும் இறைவனின் ஒரு பெயரை உச்சரித்தாலும் அது வெறும் மன ஒருமைப்பாட்டுக்கான பயிற்சியாக மட்டுமே அமையும். உடல்

தசைகளை, திரும்பத் திரும்பச் செய்யும் பயிற்சிகள் வலிமையாக்குவது போன்றே, அத்தகைய ஜபமானது மனத்தின் தசைகளை வலுவாக்கும்! அது மனத்தை அழியச் செய்வதில்லை; ஆனால் இறைவனின் நாமத்தை பெரும் கவனத்தோடு மட்டுமன்றி பக்தியோடும் ஜபிக்க முடிந்தால், மனத்தை இறுதியில் இறைவனோடு கலந்து இறைவனாகவே மாற்றிவிடும்.

## பாகம் 2

கேள்வி: டெல்லிக்கு நான் சென்றிருந்தபோது ஒருநாள் ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. என் சகோதரியின் மகளுடன் ஒரு புத்தகக்கடைக்கு சென்றிருந்தேன்.அங்கு ஆன்மீகம் பற்றிய ஒரு மிகப்பெரியப் பகுதி இருந்தது. நான் அந்தப் பகுதியை மிகக் கவனமாகத் தேடியும் ரமணமஹரிஷியைப் பற்றிய ஒரு புத்தகமும் இல்லை என்று தெரிந்தது. இதைப்பற்றி கேட்டபோது, புத்தகக் கடையின் மேற்பார்வையாளர், ரமணமஹரிஷியைப் பற்றிய புத்தகங்கள் மக்களால் விரும்பப்படுவதில்லை; சுலபமாக விற்க முடிவதில்லை என்றார். ரமணரையும் அவரது சீடர்களையும் பற்றிய சிறந்த புத்தகங்களுக்கு பதிப்பாளராகவும், ஆசிரியராகவும் இருக்கும் உங்களது அனுபவமும் இதே போன்றதுதானா என்று அறிய ஆவலாக உள்ளேன். அப்படியேயாயின் அது ஏன்?

டேவிட்: ஓஷோ போன்ற தற்காலத்திய குருமார்களின் புத்தகங்களைப் போல மக்களிடையே ஆதரவு பெறவில்லை. மற்றும் இன்று பல புத்தகக்கடைகளில் ஆன்மீகம் என்ற பிரிவை நிரப்புகின்ற சுய உதவி அல்லது நவீனகால தலைப்புகளில் வரும் புத்தகங்கள் பெறும் கவர்ச்சியும் அவைகளுக்கு இல்லை. நீடித்த நிரந்தரமான விற்பனை இல்லாமலில்லை. ஆண்டாண்டுதோறும், ஸ்ரீ ரமணரின் உரையாடல்கள் அடங்கிய பிரதானப் பகுதிகள் வருடத்திற்குச் சுமார் ஆயிரம் பிரதிகள் விற்பனை ஆகின்றன. அதாவது, முதல் முதலாகப் பதிப்பிக்கப்பட்ட "ஸ்ரீ ரமணருடன் உரையாடல்கள்" (Talks with Ramana Maharshi) என்ற புத்தகம் இது வரை40,000 பிரதிகளுக்கும் அதிகமாக விற்பனையாகி இருக்கும். தொடர்ந்து விற்பனை ஆகிக்கொண்டும் உள்ளது. 650பக்கங்கள் கொண்ட உறுதியான அட்டையுடன் கூடிய இப்புத்தகம் ஸ்மஸ்க்ருத மொழியில் ஆன்மீக சம்பந்தமான பிரத்யேகமான சொற்களின் பரிச்சயம் இருந்தாலன்றி சுலபமாகப் படிக்கக் கூடியதல்ல. ஒவ்வொரு ஆண்டும் புதியவர்கள் சிலர் ஸ்ரீ ரமணரையும் அவர் உபதேசங்களையும் பற்றி தெரிந்துகொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் முக்கியமான புத்தகங்கள் விற்றுக்கொண்டே உள்ளன. ஸ்ரீ ரமணரைப் பற்றிய பெரும்பாலான

புத்தகங்களை வெளியிடும் ஸ்ரீரமணாஸ்ரமம் வினியோக விஷயத்தில் ஸாத்வீக அணுகுமுறையைக் கையாளுகிறது. ஆஸ்ரமத்தில் பிரசுரித்து விற்பனை செய்யும் இலாகா, வரும் கோரிக்கைகளை ம்ட்டும் நிறைவேற்றும். ஆனால் விளம்பரம் செய்வதில்லை; மற்றும் புத்தகக்கடைகளிலும் புத்தகப் பங்கீடு செய்பவர்களிடம் சென்று தங்கள் புத்தகங்களை வாங்கிக்கொள்ளும்படி ஆதரவு தேடிப்போவதில்லை. புத்தகக்கடைகளில் ஸ்ரீ ரமணரைப் ப்ற்றி அதிகமான புத்தகங்கள் காணமுடியாததற்கு அதுவும் ஒரு காரணமாகலாம். ஸ்ரீ ரமண மஹர்ஷியைப் பற்றிய சிறந்த புத்தகங்கள் இருக்கின்றன என்று இந்தியாவிலுள்ள புத்தகக்கடை நிர்வாகிகளுக்குக்கூட தெரியாது என்றால் ஆச்சரியமில்லை!

அதுமட்டுமன்றி அவருடைய உபதேசங்களைத் தொகுக்கவோ விளக்கவோ முயற்சிசெய்யும் புத்தகங்களுக்கு ஒருபோதும் மக்களிடையே வரவேற்பிராது. அவை ஆத்ம முக்திக்கான வேட்கையுள்ள பகுத்தறியும் சிலருக்கு மட்டுமேயாகும். அத்தகையோர் எந்த தலைமுறையிலும் அதிகம் இருக்கமாட்டார்கள். ஸ்ரீ ரமணரின் உபதேசங்கள் ஒரு சுகமான தத்துவமல்ல. அல்லது உடனுக்குடன் பலன்களையும் அனுபவங்களையும் தருவதாகவோ இல்லை. மாறாக ஆழ்ந்த விருப்பத்துடன் ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபட விரும்புவோர்க்கு அது ஒரு பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட வழிகாட்டும் வரைபடமாக உள்ளன.அவ்வாறான பழமையான அணுகுமுறை தற்காலத்தில் விரும்பப்படுவதில்லை. மக்கள் உடனுக்குடன் தெரியும் பலன்களை விரும்புகிறார்கள்;. கடின உழைப்புக்கான மருந்துச்சீட்டையல்ல. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் ஒரு உற்சாகமான பேச்சாளரின் உரையைக்கேட்டேன். அதில் அவர் ஸ்ரீ ரமணரின் உபதேசங்களை உலகம் முழுவதும் லக்ஷக்கணக்கானவர்க்குத் தெரியும்படி செய்யவேண்டும் என்றார். அதற்கு ஒருவர், 'இந்தக் கருத்து தவறானது. எத்தனைக்கெத்தனை திருத்தமாக ஸ்ரீ ரமண மஹர்ஷியின் உபதேசங்களை விளக்குதிறீர்களோ அத்தனைக்கத்தனை குறைவான பேர்கள் அதில் நாட்டம் செலுத்துவதைக் காண்பீர்கள். அப்படி ஸ்ரீ ரமணருக்கு லக்ஷக்கணக்கான புதிய பக்தர்களை நீங்கள் உருவாக்கினால், அது நீங்கள் அவருடைய உபதேசங்களை எவ்வளவு தரக்குறைவாக்கிவிட்டீர்கள் என்பதைக் குறிக்கும் ஒரு அளவுகோலாகவே இருக்கும்' என்று பதிலளித்தார்.

இது எனக்குச் சரியாகவேபடுகிறது. கணக்கற்றவர்களின் வாழ்க்கையை மாற்றிய ஸ்ரீ ரமண மஹர்ஷி ஒரு உதாரண சிரேஷ்டமான புண்ணிய புருஷர். அவரைக்காண வந்தவர்கள்மீது அவருக்கிருந்த மாற்றங்கள்

செய்யும் வன்மை ப்ற்றிய புத்தகங்கள் நல்ல முறையில் விற்பனை ஆகலாம். ஆனால் அவரது உபதேசங்களைப்பற்றியப் புத்தகங்களை வெளியிட்டால் வெகு சிலரே அதை வாங்க முற்படுவர். அதையும்விட மிகச்சிலரே, அதிலுள்ள உபதேசங்களை நடைமுறையில் பயன்படுத்துவர்.

கேள்வி: இதைப்பற்றிப் பேசும்போது, தற்போது நீங்கள் ஆசிரமத்தையோ அல்லது வேறு சங்கங்களையோ சாராமல் தனிப்பட்ட முறையில் புத்தகங்களை வெளியிடுவது என் கவனத்திற்கு வந்தது. இந்த மாற்றம் எதனால்? என் அபிப்பிராயத்தில் 'The Power of Presence' என்ற தலைப்பில் வெளிவந்த மூன்று தொகுதிகளும் மிக உணர்வுபூர்வமாக இருந்தன. தெளிவாகத் தெரியும் இத்தகுதி அவைகளுக்கு இருந்தும் நீங்களாகவே இப்புத்தகங்களை விற்பனை செய்வது கடினமாக இருந்ததா?

டேவிட்: 1980களிலும் 1990யின் ஆரம்ப காலத்திலும் நான் பதிப்பித்த அல்லது எழுதிய அநேக புத்தகங்கள் ஆசிரமம் அல்லது ஆன்மீக சங்கங்களின் ஆதரவுடன் வெளிவந்தன. நான் ஒரு சேவையாகக் கருதி, குருவுக்கு ஒரு காணிக்கையாக இப்புத்தகங்களை வெளியிட்டேன். அதற்கான உரிமைகளையும், கொடுக்கப்படும் எல்லா பங்குத்தொகைகளையும் கொடுத்துவிட்டேன். 1990களின் மத்திய காலத்தில், ஸ்ரீ ரமணரின் நேர் சீடரான பாபாஜி, எனக்கு ஜீவனாதாரமாக உதவும் என்று புத்தக விற்பனைகளில் வரும் உரிமைப்பங்குத் தொகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு எனக்கு தைரியமூட்டினார். அதுவரை நான் வேலை பார்த்த கழகங்கள், நான் அவர்களுக்கு வேலை செய்யும்வரை எனக்கு ஆதரவு அளித்துவந்தனர். பாபாஜி இல்லறம் மேற்கொண்டவர். அவர் தொழிலிலிருந்து ஓய்வுபெற்ற 1950களின் மத்திய காலம் வரை தம் ஊதியத்தைக் கொண்டே தமது குடும்பத்தை நடத்திவந்தார். மனிதர்கள் சுயதேவைகளைப் பூர்த்திசெய்து கொள்பவர்களாக இருப்பதை அவர் விரும்பினார். தங்களைத் தாங்களே தாங்கி நிற்பதற்கு அவர் ஊக்கமளித்தார். கடந்த சில ஆண்டுகளாக, நானே என் எழுத்து, பதிப்புகள் மூலம் வாழ்க்கை நடத்துகிறேன். நான் எந்த சங்கத்தாலும் ஆதரிக்கப்படுவதில்லை.

என் எழுத்துக்களை நானே வெளியிடுவதை நான் விரும்புகிறேன். ஏனெனின், எனக்கு விருப்பமான தலப்பை நான் தேர்ந்தெடுக்க முடியும்;விவரமாகவோ சுருக்கமாகவோ எழுதமுடியும்; குறித்த நேரத்தில் முடிக்கவேண்டும் என்ற கட்டாயமும் இருக்காது. இருந்தாலும் நான் சொல்லியே ஆக வேண்டியது என்னவென்றால் ரமண மஹர்ஷி, அவர் சீடர்கள், அவருடைய குருவான அருணாசலம் என்ற

விஷயங்களைப்பற்றியே நான் வெளியிட்டு வருகிறேன். வேறு தலைப்புகளில் எனக்கு ஆர்வமில்லை.

இவற்றை வாங்கக்கூடியவர்களுலகம் முழுவதிலும் ஆங்காங்கே இருப்பதால் விற்பனையும் விநியோகமும் ஒருசில சமயங்களில் தலைவலியாக முடியலாம். 80களின் பின்பகுதியிலும் 90 களின் முன்பகுதியிலும் இருந்ததைவிட தற்போது ஒரு சிறந்த ஆன்மீகப் புத்தகத்தை விற்பனை செய்வது கடினமென்று, ஆன்மீக புத்தக வியாபாரத்தில் நான் ஏறத்தாழ 20 ஆண்டுகள் ஈடுபட்டிருந்ததால்  நான் சொல்வது,  சரியாக இருக்குமென்றே எண்ணுகிறேன். ஆன்மீக புத்தக விற்பனையாளர்களுக்கு பணம் கட்டுவதற்கு தீராத பற்றாக்குறை; பல பிரபல புத்தகக்கடைகளுக்கோ அதிகமாக் விற்பனையாகும் புத்தகங்களின் மேல் கவனம். அமேஜான், பார்ன்ஸ் அண்ட் நோபில் இவை நிறைய நல்ல விற்பனை நிலையங்களை வியாபாரம் இல்லாமல் செய்துகொண்டிருக்கின்றன.

விளம்பரத்திற்கு என்று நான் பணம் ஏதும் ஒதுக்கவில்லை. புத்தகத்திற்காக பிரயாணங்கள் மேற்கொள்வதில்லை.கடைகளில் அமர்ந்து புத்தகங்களில் கையொப்பமிடுவதில்லை. ஊரூராய்சென்று வானொலியில் பேட்டி தருவதில்லை. மேல்நாடுகளில் சாதாரணமாக வியாபார விருத்திக்காக மேற்கோள்ளும் வழிமுறைகள் இவை. புத்தக ஆசிரியரே சென்று தன் புத்தகத்தின் விற்பனைக்காக, பிரசுரிபவர்க்கு உதவ விருப்பமில்லாவிடில் பல பதிப்பாளர்கள் அவ்வாசிரியருக்கு ஒப்பந்தம் தருவதே இல்லை. கடந்த 18 மாதங்களில் நான் மூன்று புதிய புத்தகங்களை வெளியிட்டுள்ளேன். அந்த நாட்களில் ஒரு இரவுகூட நான் திருவண்ணாமலையில் என் சொந்தப் படுக்கையிலேயே உறங்காமல் இருந்ததில்லை

என் புத்தகங்களில் ஆர்வமுள்ளவர் என்று நான் அறிந்துள்ளவர்களுக்கு தபால்மூலம் அனுப்பப் பட்டீயல் ஒன்று என்னிடம் உள்ளது. புதியதா ஏதேனும் வெளியிடும்போது நான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஈ-மெயில் (email) மூலம் தெரிவிப்பேன். மற்றவர்களுக்கு நண்பர்கள் மூலம் அல்லது வெப்பில் (web) வரும் அறிவிப்புகள் மூலம் என் புத்தகங்கள்பற்றி தெரியவரும். தற்போது பல பிரத்யேகமான வெப் இடங்கள் வந்துள்ளன. ஸ்ரீ ரமணரைப் பற்றி புதிய புத்தகம் ஒன்று வெளியானால், அச்செய்தி அத்வைதம், குருமார்கள், ஆன்மஞானம் அல்லது ரமண மஹர்ஷி என்ற தலைப்புகளில் இயங்கும் வெப் அமைப்புகளில், சிறிது நாட்களிலேயே வந்துவிடும்.

வெகுசில புத்தகக் கடைகளே எனது புத்தகங்களை வைத்திருப்பதால்

தற்போது கடைகளில் யாரும் என் புத்தகங்களைக் காண முடியாது. அது என்னை பாதித்தது இல்லை. ரமண மஹர்ஷியைப் பற்றி அல்லது அவருடைய உபதேசங்களைப் பற்றி வரும் ஒரு புதிய புத்தகத்தை வாங்கும் அளவிற்கு ரமண மஹர்ஷியை மதிக்கும்  அன்பர்கள் உலகத்தில் பல ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். ஆகையால் எப்படியும் என் புத்தகங்கள் அவர்கள் கனத்திற்கு வந்து அவர்களும் அவற்றை வாங்குவார்கள். வாடிக்கையாளர்களைத் தேடுவதற்கு நான் சிரமப்படுவதில்லை. யாராவது ரமணரைப் பற்றிய புத்தகத்தின் மதிப்பை உணருவாரேயாயின், அப்புத்தகம் அவரை எவ்வாறாவது சென்றடையும் என்று எனக்குத் தோன்றுகிறது. விருப்பமில்லாதவர்களிடம் என் புத்தகத்தை சுமத்த முயல்வது என் பொறுப்பென்று நான் கருதவில்லை. நான் ரமணரின் வார்த்தைகளுக்குத் தயாரானவனாக ஆனபோது எனக்காக அதற்கான புத்தகம் காத்திருந்தது. வேறு யாருக்காவது அவரைப் பற்றியும் அவர் உபதேசங்களைப் பற்றியும் படிக்கும் தேவை ஏற்பட்டால் இதுபோலவே நடக்கும்.

சென்ற ஆண்டு, நான் சந்தித்திராத ஒருவர் என் புத்தகங்கள் எங்கு வாங்கமுடியும் என்ற விவரங்களைத் தெரிவிக்க ஒரு வெப் பக்கத்தை அமைக்க முன்வந்தார். நான் சம்மதித்து நன்றி சொன்னேன். என் பெயரில் இடம் வாங்கி எளிய வெப் இடம் அமைத்து இரண்டு ஆண்டுகளுக்கான தொகையையும் கட்டினார். இந்த ஆண்டு எனக்கு சிறிதும் அறிமுகமே இல்லாத வேறு யாரோ ஒருவர் தன் நேரத்தை ஒதுக்கி அநேக புதிய விவரங்கள் பலவற்றை அதில் சேர்த்து உதவினார். ம்றுபடியும் சம்மதித்து நன்றி கூறினேன். தேவைப்படும்போது யாராவது வருவார்கள், வேலையும் செய்து முடிக்கப்படும்.

யாரேனும் வியாபாரியோ, பெண்களோ இதைப் படித்துக்கொண்டிருந்தால் அவர்கள் அவநம்பிக்கையில் தலையைச் சொறிந்து கொண்டிருப்பார்கள் என்றாலும் இது நடக்கிறது.. என் புத்தகங்கள் இறுதியாக வாங்குபவர்களைச் சென்றடையும். அவர்கள் தாங்கள் வாங்கிப் படித்தது குறித்து மகிழ்ச்சியே அடைகிறார்கள் என்று எனக்குத் தெரிய வருகிறது.

கேள்வி: நீங்கள் எழுதி வெளியிட்ட ஏறத்தாழ 12 புத்தகங்களில் ஏதாவது ஒன்றிரண்டு உங்களைப் பொறுத்தவரை தனிச்சிறப்புடையது என்று உள்ளதா?

டேவிட்: அப்படி ஒன்றும் இல்லை. எல்லாவற்றிகாகவும் வேலை செய்யும்போது மகிழ்ச்சியாகவே இருந்தது என்றாலும் வாழ்க்கை வரலாறுகளை எழுதும்போது மற்ற எல்லாவற்றையும்விட அதிக இன்பமும் உவகையும்

கிட்டின. ஏனென்றால் சம்பந்தப்பட்ட எல்லோருடனும் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ள வேண்டி இருந்தது. மேலும் இப்புத்தகங்களுக்கான ஆரய்ச்சிப் பகுதியை நான் மிகவும் ரசித்தேன்; தெரியவராத உண்மைகளையும் சம்பவங்களையும் தேடிக் கண்டுபிடிப்பதை நான் எப்போதும் ரசிப்பேன். இறுதியாக, ஆராய்ச்சி முடிந்ததும், அவைகளை முழுமையாக இணைத்துப் படிப்பவரை ஒரு விந்தைமிக்க வேறுபட்ட உலகத்தில் பிரவேசித்து மூழ்கிவிடச்செய்யக்கூடிய ஒரு விவரணத்தை அமைத்துத் தருவதில் ஒரு ஆக்கபூர்வமான சவால் உள்ளது. இதைச் செய்யும்போது உண்மையை ஒட்டியே இருக்க இயன்றவரை முயல்வேன். ஆனால் அதே சமயம் அவர்கள்மேல் எனக்குத் தோன்றும் பயபக்தி, அச்சம், மதிப்பு இவற்றையும் உணர்த்த விரும்புவேன். நான் இவர்களைப் பற்றி எழுதுவது ஏனென்றால் என்னைப் பொறுத்தவரை இவர்கள் மனித வாழ்க்கையை எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கான அற்புதமான உதாரணமாவார்கள்.

கேள்வி: நீங்கள் எழுதிய வரலாற்றுப் புத்தகங்களுக்கான விவரங்களை எவ்வாறு சேகரித்தீர்கள்? அவர்களுடன் பேசும்போது டேப் ரெகார்டர் (tape recorder) போன்ற சாதனங்களை உபயோகித்தீர்களா? நான் இவ்வாறு கேட்பது ஏனென்றால் நீங்கள் எழுதியவற்றைப் படிக்கும்போது ஒவ்வொன்றிலும் காணப்படும் விவரங்களின் விரிவைக்கண்டு நான் மிகுந்த வியப்புக்குள்ளானேன். அவர்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் இவை எழுதப்பட்டதால் மேலும் ஆச்சரியப்படும்படியாகின்றது.

டேவிட்: சாரதம்மாவையும் லக்ஷ்மணஸ்வாமியையும் பேட்டி கண்டபோது என்னிடம் ஒலிப்பதிவு செய்யும் கருவி ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை[7]. நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விவரம்தான் ஆனால் சரியாக நினைவுக்கு வரவில்லை. அவர்கள் பேசுகையில் குறிப்புகள் எடுத்துக்கொண்டேன் என்று நினைக்கின்றேன். சுமார் ஒரு மாதகாலமும் தினமும் காலையில் ஒருமணிநேரம் அவர்களுடன் இருந்தது நினைவிருக்கின்றது. சாரதம்மாவிற்கு அத்தனை சீரிய நினைவாற்றல் இருந்தபடியால்தான் அப்புத்தகத்தில் நிறைய விவரங்கள் இருந்தன. அற்புதமான நினைவுக்குக் கொண்டுவரும் திறன் அவருக்கு இருந்தது. சாரதாம்மா சாதனை செய்து கொண்டிருந்த ஆண்டுகளைக் குறித்து லக்ஷ்மணஸ்வாமிக்கு சரியாக ஞாபகமில்லை. ஆனால் புகைப்படம் பிடித்தாற்போல் அந்த நாட்களைப் பற்றிய ஞாபகம் அதை ஈடுகட்டிவிட்டது. லக்ஷ்மணஸ்வாமிக்கு

---

[7] இங்கு டேவிட் குறிப்பிடும் புத்தகம் No Mind - I am the Self

அவருடைய இளமைக்காலம், ரமணருடன் அவர் கழித்த நாட்கள், அவர் தனிமையில் துறவியாக இருந்த ஆண்டுகள் பற்றி மட்டும் நன்றாக நினைவிருந்தது. இவ்விரண்டு விவரங்களும் ஒன்றை ஒன்று பூர்த்தி செய்துவிட்டன. வயதாகிவிட்டது என்ற காரணத்திற்கு இடமில்லை. ஏனென்றால் அப்போது லக்ஷ்மணஸ்வாமி 50 களிலும், சாரதம்மா 20 களின் ஆரம்பத்திலும் இருந்தனர். அநேகமாக ஐந்திலிருந்து எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றைப்பற்றி சாரதம்மா விவரித்துக் கொண்டிருந்தார்.

அண்ணாமலை ஸ்வாமியுடன்[8] ஒவ்வொரு மதியமும் சந்திப்பு கொண்டேன். தினமும் அநேகமாக 90 நிமிட ஒலிநாடாவை நிரப்புவேன். இரவே அதை எடுத்து எழுதிவிட்டு, அதே ஒலிநாடாவை மறுநாள் மதியம் சொல்லப்போகும் விவரங்களுக்காக அதே ஒலிநாடாவை உபயோகிப்பேன். அது சிக்கனத்திற்காகச் செய்தது. ஏனென்றால் அப்போது என்னிடம் அதிகம் பணம் இருக்கவில்லை. ஆனால் இப்போது எண்ணிப் பார்க்கும்போது தனித்தனி ஒலிநாடாக்களை உபயோகித்து எல்லாவற்றையும் வைத்துக் கொண்டிருகலாமே என்று தோன்றுகிறது. ஒரு சுவையான தொகுதியாக இருந்திருக்கும். அவர் கதைகள் சொல்வதைக் கேட்டு மகிழ்பவர்கள் தற்போது பலர் இருப்பார்கள் என நினைக்கின்றேன். அவர் கதை சொல்வதில் வல்லவர்;அவருக்கு மனதைக் கவரக்கூடிய கதை கூறும் பாணி இருந்தது. தேதிகளையும், சம்பவங்களின் வரிசைக் கிரமங்களையும் பற்றி அவருக்கு சரியாகத் தெரியவில்லை. எந்த கதைக்கு முன்னும் பின்னும் எது வந்தது என்று அதனால் அதை நானே சரிசெய்ய வேண்டியிருந்தது. அவருடைய அந்த ஒரு உலகத்தை கற்பனை செய்வதுமவர் எனக்குக் கூறிய பாத்திரங்களையும் சம்பவங்களையும் அதில் அமைத்துப் பார்ப்பதும் அனக்கு மிகவும் பிடித்த சுவையான நிறைவான சவாலாக இருந்தது. ஆசிரம கட்டிடங்களின் புகைப்படங்களை ஆழ்ந்து ஆராய்ந்தும், ஆசிரமத்தின் பழைய கணக்குப் புத்தகங்களைப் பார்த்தும் அவர் சொல்லும் கதைகளுக்கும் அவர் கவனித்துக் கட்டிக் கொண்டிருந்த கட்டிடங்களின் தோற்றமளித்த சாட்சியையும் இணைத்துப் பார்த்தும் நான் ஷெர்லக் ஹோம்ஸ் என்ற துப்பறியும் நிபுணரைப்போல நிறைய துப்பறியும் வேலை செய்துள்ளேன்.

---

[8] இங்கு, Living By The Words of Bhagavan என்ற புத்தகத்தைக் குறிக்கின்றார். இது குரு - சிஷ்யரின் உறவைப்பற்றின மிக வியப்பூட்டும் விவரங்கள் அடங்கியது. மிக அழகாக , ஸ்ரீ ரமணரின் உபதேசங்களையும் , வாழ்க்கையையும் பற்றின சம்பவங்கள் பல நிறைந்த இப்புத்தகம், என் அபிப்பிராயத்தில், படிக்க வேண்டிய ஒன்று.

அவரிடம் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் அவரே அறிந்த விவரங்களையும் அவ்வாறு அல்லாதவற்றையும் பிரித்துக் காட்டிடுவார். ஒரு சம்பவத்தின்போது அவர் இருந்தாரெனின் அதைச் சொல்லுவார். கதையை மற்றவர் சொல்லிக் கேட்டிருந்தால் அவர் தான் நேராக அறிந்த ஒன்றல்ல என்று குறிப்பிடுவார். அவர் ஒரு கல்வியாளரல்ல ஆனால் உயர்கல்வியின் தேவையை அறிந்திருந்தார். அவர் குருவைப்பற்றி எழுதிக்கொண்டிருந்தோம். அவருக்கு அவர் குருவின் வாசகங்களும் செயல்களும் பவித்திரமானவை. முடிந்தபோதெல்லாம் பரிபூரணமான பிழையின்மை இருக்கவேண்டுமென்பார். சில சமயம் அரசியல்வாதியின் மொழியில் சொல்லப்போனால் அறிவிக்கப்படாத குறிப்புகளைக் கொடுப்பார். அவ்வாறு நடந்துகொள்ளும் விதத்தை, ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என்று தன் அபிப்பிராயங்களைக் கூறுவார். ஆனால் கூடவே, 'இதை அச்சிடாதே ஏனென்றால் இது வெறும் என் அபிப்பிராயம்தான். ஆசிரமம் அந்த சமயத்தில் எப்படி இருந்தது என்று உனக்கு ஒரு பின்னணியைத் தருவதற்காக மட்டுமே இதை உனக்குச் சொல்கிறேன்' என்பார். அடிப்படை உண்மைகளை எவ்வாறு மதிப்பிட வேண்டும் என்று அறிந்திருந்த ஒருவருடன் பழகுவது இன்பகரமாக இருந்தது.

எண்பது வயதுக்காரர்களுடன் அவர்கள் இளமைக்காலத்தைப் பற்றிப் பேசும்போது தவறான நினைவுகள் இருப்பது சாத்தியம். ஆனால் வேறு வழிகளில் சரிபார்க்கமுடிந்த விஷயங்கள் அநேகமாக உண்மையாகவே இருந்தன. அது அவர் எனக்குக் கூறிய எல்லவற்றினுடைய பிழையின்மையயையும், உண்மையையும் நம்புவதற்கு ஒரு தைரியத்தைத் தந்தது.

நான் முன்பே கூறியதுபோல அவரால் சரியான தேதிகளை உறுதியாகச் சொல்லமுடியவில்லை. உதாரணமாக, ஸ்ரீ ரமணரிடம் தான் 1930ஆம் ஆண்டு வந்ததாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 1929-ன் முற்பகுதியில் காலஞ்சென்றுவிட்டார் என்று அவருக்கு நிரூபித்தபோது, அவர் சொன்னதை மாற்றவேண்டிவந்தது. ஏனென்றால் அவர் ஸ்ரீ  சேஷாத்ரி ஸ்வாமிகளை சில தருணங்களில் சந்தித்திருந்தார். எனினும் இத்தகைய தவறுகள் மிகச்சிலவே இருந்தன.

பாபாஜியின்[9] வாழ்க்கைப்பற்றிய குறிப்புகளை நான் சேகரித்தபோது 80 வயதுகளில் இருந்தார். நான் கேட்டிருந்த மிகப்பெரிய சுயசரிதம் பற்றிய 16 பக்கக் கேள்வித்தாள்களுக்குப் பதிலளிக்கும் வகையில் 200 பக்கங்களில் தம் பதில்களை எழுதியிருந்தார். அக்காலத்தில் அவருடைய

[9] இங்கு குறிப்பிடப்படும் புத்தகம் - Nothing Ever Happened

உபந்யாசங்கள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு மணிநேரம் தன்னைக் காண வந்தவர்களுடன் இருந்தபோது, பலமுறை, தன் கடந்த காலத்தின் சம்பவங்களைப் பற்றி குறிப்பிடுவார். ஆதலால் நான் அவர் பேச்சுக்களை நேராகப் பதிவுசெய்யவில்லை என்றாலும், தன் வாழ்க்கையின் கடந்த நாட்களில் நடந்த பலவற்றைப் பற்றி அவர் சொல்லியிருந்த நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து காப்பாற்றப்பட்ட ஒலிநாடாக்கள் எனக்குக் கிடைத்தன.

வெவ்வேறு நாட்களில் அவருடன பழகிய, மற்றும் அவருக்குத் தெரிந்தவர்களை அணுகினேன். அவர்கள் கூற்றும் அவர் என்னிடம் கூறியவற்றை ஊர்ஜிதப்படுத்தின. உதாரணமாக, அவர் குழந்தையாக இருந்தபோது கிருஷ்ணன் வந்து அவருடன் படுக்கைஅறையில் விளையாடுவாராம். ஆனால் அவர் குடும்பத்தினர் யாருக்கும் கிருஷ்ணரைப் பார்க்கமுடியவில்லையாம். நான் அவருடைய ச்கோதரிகள் இருவருடனும் பேசினேன். இருவருக்கும் சிறிய பாபாஜி கண்ணுக்குத்தெரியாத ஒரு தோழனுடன் படுக்கைமீதும் வீட்டிலும் விளையாடிக் கொண்டிருந்தது போன்ற நிகழ்ச்சிகள் நினைவிருந்தது. அம்மாதிரியான தருணமொன்றில் அவர் பல மணிநேரம் நீடித்த, தன்னை மறந்த நிலைக்குச் சென்றுவிட்டாராம்.

ஒரு கேள்விக்குப் பதிலாக ஒரு கதையை அவர் சொல்லும்போது, அசல் சம்பவத்திலிருந்து அல்லாமல் கடைசியாக அவர் அதைப்பற்றி பேசிய நினைவிலிருந்து சொல்வதுபோல் எனக்குத் தோன்றும். பலர் இவ்வாறெ செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆயினும், சிலசமயங்களில் தன்னிச்சையாக ஒரு நிகழ்ச்சி நினைவுக்குவர அதைப்பற்றி பேச ஆரம்பித்துவிடுவார். இவ்வாறு நிகழும்போது மிக அதிசயத்தக்க விவரங்கள் வெளிப்படும். ஒரு முஸ்லிம் மஹானைச் சென்னையில் சந்தித்ததைப் பற்றி அவர் பேசியது எனக்கு நினைவுக்கு வருகிறது. இதுபற்றி முன்பே நான் கேட்டிருந்தேன். ஆனால் அவர் சொல்ல ஆரம்பித்தபோது அந்த சமயத்தில் அவர் நிஜமாகவே 1940 யின் மத்திய பாகத்தில் சென்னையில் இருந்துகொண்டு, தெருக்களில் நடப்பது போலவும், அப்போது காணும் காட்சிகளை வர்ணிப்பது போலவும் நான் உணர்ந்தேன். குறிப்பிட்ட அந்தத் தெருவில் நடந்து கொண்டிருப்பதுபோல சில கடைகளையும், வியாபாரங்களையும் கடந்து கொண்டுருப்பதுபற்றி பேசிக்கொண்டும் வழியில் காணும் காட்சிகளை வர்ணித்துக் கொண்டும் இருந்தார். எனக்கு இந்த விவரங்கள் மிகவும் முக்கியமானவை. திரும்பத் திரும்பச் சொல்லிக் கேட்பதில் ஏற்படும் தடங்கல்களின்றி அச்சம்பவத்தை மறுபடி ஒரு விடியோவில் காட்டப்படுவதுபோல இருந்தது. இம்மாதிரியான மனோநிலையில் அவர் இருந்தபோது

அவரைத் தடை செய்யாமலிருக்க நான் பழகிக்கொண்டேன். இடையில் ஒரு வினாவோ அல்லது விளக்கமோ அல்லது சந்தேகமோ கேட்டால் அவர் கண்களில் தோன்றிய பாவம் மாறிவிடும்; அவர் அந்தத்தெருவில் தொடர்ந்து இருக்க மாட்டார். மறுபடி அவர் நினைவுகளுக்குத் திரும்பி, விவரங்களை எப்போதும் சொல்வதைப்போல் சொல்லிக்கொண்டே இருப்பார்.

மொத்தத்தில், நான் எழுதிய எல்லோரைப்பற்றியும் நான் நம்பக்கூடிய நினைவுகளையே எழுதுகின்றேன் என்று உறுதிப்படித்திக் கொண்டேன். அண்ணாமலை ஸ்வாமிகளையும் பாபாஜியையும் பற்றிய விவரங்களில் எல்லா ஆராய்ச்சிகளும் கேள்விகளும் சரிசெய்ய முடியாத சிற்சில முரண்பாடுகள் இருந்தன. அவை வெகுநாட்களுக்கு முன் நடந்ததைப் பற்றியவை. உண்மையிலேயே உயர்ந்த மனிதர்களைப் பற்றி என்னால் இயன்றவரை நம்பத்தகுந்த விவரங்களைக் கொடுத்துள்ள திருப்தி எனக்குள்ளது.

கேள்வி: பாபாஜியின் சகோதரிகள் கிருஷ்ணருடன் அவர் விளையாடியதாகச் சொன்னார்கள்; ஆனால் பாபாஜியைத் தவிர கிருஷ்ணரை யாரும் பார்க்கவில்லை என்றும் நீங்கள் குறிப்பிட்டீர்கள். பாபாஜியே இக்கதைகளை உருவாக்கித் தான் கிருஷ்ணரைப் பார்த்ததாகச் சொல்லிக் கொண்டிருக்கவும் கூடும் என்று ஒரு சந்தேகப்பிராணியானவர் சொல்லலாம். பின்பு அவர் புகழ்மிக்கவரான போது ஒருவேளை அவர் குடும்பத்தினர், 'ஆம், அவர் சிறுவனாயிருந்தபோது அவர் கிருஷ்ணருடன் விளையாடியதைப் பார்த்தோம்' என்று சொல்லலாம். இத்தகைய சாத்தியக் கூறுகளை யோசித்துப் பார்த்தீர்களா?

டேவிட்: ஆம் இது ஒரு நியாயமான கூற்றுதான். இச்சம்பவத்தை நான் குறிப்பிட்டபோது ஒரு தவறான உதாரணத்தை எடுத்துக்கொண்டேன் போலும். நிச்சயமாக, மனத்தோற்றமான அனுபவங்களை யாராலும் ஊர்ஜிதப்படுத்த முடியாது. ஏனென்றால் அத்தோற்றங்கள் பெரும்பாலும் ஒரு நபரை மட்டுமே பொருத்திருக்கும். பாபாஜிக்கு அவர் வாழ்நாள் முழுவதும் தவறாமல் மனத்தோற்றங்கள் இருந்துகொண்டிருந்தன. உண்மையில் வேறு யாரும் அவற்றைக் காணவில்லை. பாபாஜியின் முன்னிலையில் பல அன்பர்களுக்குச் சுயமாக 'மனத்தோற்றங்கள்' ஏற்பட்டன. அவைகளும் ஒரே ஒருவரால் மட்டுமே காணப்பட்டவை. பாபாஜிகூட அவற்றைக் காணவில்லை.

பாபாஜி சிறுவனாக இருந்தபோது கிருஷ்ணருடன் விளையாடியதாகக் கூறிய சகோதரிகளில் ஒருவரான லீலாவுக்கு கங்கைக் கரையில் வால்மீகி ஆசிரமத்தில் சீதை இருப்பதைப்போல ஒரு தோற்றம்

ஏற்பட்டது. அச்சமயம் பாபாஜியும் அங்கிருக்க, இருவரும் அத்தெய்வம் வெளிப்பட்டு அவர்களுடன் பேசுவதைக் கண்டனர். லீலா அதிர்ச்சியடைந்து மயக்கமுற்றாள். நிச்சயமாக அது அவளுக்கு ஒரு சாதாரண அனுபவமாக இருக்கவில்லை. ஆதலால் அவள் பாபாஜி தன் சிறுவயதில் கிருஷ்ணருடன் விளையாடியதைத் தான் பார்த்ததாகச் சொன்னபோது பாபாஜி உண்மையைத்தான் சொல்கிறார் என்று அவள் நம்பியது நியாயமானதே. பாபாஜி கூறிய மற்ற சம்பவங்கள் பலவற்றை ஊர்ஜிதப்படுத்துவது சுலபமாகவே இருந்தது. பாபாஜியிடம் நம்பமுடியாத கதைகளும் சம்பவங்களும் நிறைய இருந்தன. அவற்றில் சில அபத்தமாக இருந்ததால், 'இது உண்மையாக இருக்கமுடியாது, தானே இவற்றை இட்டுக்கட்டி நம்மிடம் விளையாடுதிறார்' என்று நம்மைச் சிந்திக்க வைத்துவிட்டன. ஆயினும் அச்சம்பவம் நடந்தபோது உடனிருந்த யாரையேனும் நான் பார்க்க நேர்ந்தால் பாபாஜி கூறியவற்றை எப்போதும் ஆமோதிப்பார்கள் அல்லது அதற்கு மிகவும் ஒத்தவாறிருக்கும் ஒரு கதையைச் சொல்வார்கள்.

கேள்வி: உண்மையில் மனம் திரும்பமுடியாதபடி இறந்துவிட்ட பின்னரே ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுமென்று நீங்கள் கூறினீர்கள். பாபாஜி முன்னரே தான் சொல்லியிருந்ததின் நினைவுகளின் அடிப்படையில் தன் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கூறுவார் என்றும் கூறியுள்ளீர். 'நினைவுகள்' 'இறந்துவிட்ட மனம்' என்பவை ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய கருத்துக்கள்போல் தோன்றுகின்றன. தயவுசெய்து இதனை விளக்க முடியுமா?

டேவிட்: புதிர்போல் தோன்றும் இதனால் பலர் குழப்பத்துக்குள்ளாகிறார்கள். இறந்துவிட்ட மனமென்பது, எண்ணங்களை எண்ணுகின்ற கர்த்தா. உணர்வுகளை உணர்பவர், நினைவுகளை நினைத்துக் கொள்பவர் என்று ஒருவர் அதில் இல்லாத மனமே ஆகும். எண்ணங்களும், உணர்வுகளும், நினைவுகளும் அங்கு இன்னும் இருக்கலாம். ஆனால் 'நான் இச்சம்பவத்தை இன்னும் நினைவில் வைத்துக் கொண்டுள்ளேன்' என்று நம்புவதற்கு யாரும் அங்கில்லை. எண்ணங்களும் நினைவுகளும் ஆத்மாவில் ஆனந்தமாகத் தொடர்ந்து இருக்கலாம். ஆனால் அறவே இல்லாதது என்னவென்றால் அது அவைகளை அனுபவிக்கவோ, சொந்தம் கொண்டாடவோ ஒருவன் இருக்கிறான் என்ற கருத்தாகும்.

பாபாஜி ஒருமுறை ஒரு நேர்த்தியான உவமையைக் கூறினார். 'நீ தெரு ஓரமாக அமர்ந்திருக்கிறாய். இரண்டு திசைகளிலும் வாகனங்கள் உன்னைக்கடந்து சென்று கொண்டிருக்கின்றன. இவைகள் உன்னுள் இருக்கும் எண்ணங்கள், நினைவுகள், ஆசைகளுக்கு ஒப்பானவை.

அவைகள் உனக்குச் சிறிதும் சம்பந்தப்படாதவை. ஆனால் நீ அவைகளுடன் ஒட்டிக்கொள்வதில் குறியாய் இருக்கிறாய். நீ ஓடும் காரின் ஒரு பகுதியைப் (bumper) பற்றிக்கொள்கிறாய். உன்னால் தாங்கமுடியாமல் விட்டுவிட நேரும்வரை அதனால் இழுத்துச் செல்லப்படுகிறாய். இதுவே ஒரு முட்டாள்தனமான செயல். ஆனால் உன் தவற்றிலிருந்து நீ கற்றுக்கொள்வதில்லை. பிறகு உன்னருகே வரும் அடுத்த காரைப் பற்றிக்கொள்ள முற்படுகிறாய். இப்படித்தான் நீங்கள் எல்லோரும் உங்களுக்குத் தேவையற்ற விஷயங்களில் பற்றுகொண்டு அதன் விளைவால் அநாவசியமாக துன்பத்தை அனுபவித்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையை நடத்துகிறீர்கள்; ஒரு எண்ணத்திலோ கருத்திலோ உணர்விலோ உன்னை இணைத்துக் கொள்ளாதே. அப்போது நீ ஆனந்தமாக இருப்பாய்'.

இறந்துவிட்ட மனம் என்றாலும் அதிலும் மன ஓட்டம் இருக்கலாம் - சாதாரணமாக மிகவும் குறைந்த அளவில்; ஆனால் ஒரு கருத்து அல்லது உணர்வின் ஒரு பகுதியைக் கூட பற்றிக் கொள்பவர் யாரும் இரார்.அமைதி காக்கும் மனத்திற்கும் இறந்துவிட்ட மனத்திற்கும் உள்ள வேற்றுமை இதுதான். மனம் அமைதியாக சலனமற்று இருக்கும்போது, புதிய கருத்தைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் ஒருவர் அங்கு உண்டு. ஆனால் மனம் என்பதே அற்றுப்போய், மனம் இறந்துவிட்ட ஒரு நிலையில், ஒரு எண்ணப்படும் பொருளுடன் தன்னை இணைத்துக்கொள்ள ஒரு நபர் இருக்கிறார் என்ற பாவனை நிரந்தரமாக அழிந்து போய்விட்டது. ஆகவே இறந்துவிட்ட அல்லது அழிந்துவிட்ட மனம் என்று அது ரமணரின் இலக்கியத்தில் குறிப்பிடப்படுகிறது. கருத்துக்களோடும், எண்ணங்களோடும் ஈடுபடுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறு நிச்சயமாக முடிந்துவிட்ட ஒரு நிலையாகும்.

பாபாஜியைப் பற்றியும் அவர் நினைவுகளைப் பற்றியும் நான் கூறியதை சிறிது பார்க்கலாம். பாபாஜி இரு அமெரிக்க பல் மருத்துவர்களுக்கு 1990-ல் கொடுத்த பேட்டியில், ' நான் பேசும்போது, என் ஞாபகசக்தியையோ அல்லது என் பழைய அனுபவத்தையோ நம்புவதில்லை' என்றார். இதைப்பற்றி நான் அவரை வினவியபோது, 'மனம்' என்று ஒன்று உள்ளவர்கள் தங்கள் அடுத்த வாக்கியத்தை உருவாக்குவதற்கு எப்போதும் தங்கள் கடந்த காலத்தை நாடுவார்களென்றும், ஆனால் ஆத்மஞானம் பெற்றவர்களின் சொற்கள் அக்கணத்திலேயே ஆன்மாவால் தூண்டப்படுமே அன்றி பழைய ஞாபகங்கள் அல்லது அனுபவங்களின் விளைவினால் அல்ல. ஒரு உரையாடலுக்கு மனத்தை உபயோகிப்பதற்கும், பேசத்தேவை ஏற்படும்போது ஆன்மாவையே தேவையான வார்த்தைகளை வாயில் வரும்படி செய்வதற்கும் உள்ள

வேற்றுமையாகும். மனமென்று ஒன்றில்லாதபோது, தேவைப்படும்போதெல்லாம் தன்னிச்சையாக வார்த்தைகள் வெளிப்படும். ஒருகால் அவை கடந்தகாலத்தின் சம்பவம் ஒன்றாக உருக்கொண்டால் கடந்த காலத்தில் மூழ்கி பழைய நினைவுகளை திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கின்ற 'நான்' என்று உண்டு என்ற தவறான முடிவுக்கு வரக்கூடாது.

ஒருமுறை வேடிக்கையாக, ஞாபகத்தையோ அல்லது அனுபவங்களின் துணையோ இல்லாமல் அவரால் எப்படி கடைகளில் சாமான்களை வாங்க முடிகிறது என்று கேட்டேன். காய்கறி வாங்குவதில் அவர் பயங்கரமாக பேரம் பேசுபவர் என்று நான் இங்கு குறிப்பிடவே வேண்டும். எப்போதும் மிகக்குறைந்த விலையில் மிக உயர்ந்த தரமான பொருள் வேண்டுமென்பார். 'ஞாபகசக்தி இல்லாமல் உங்களால் இது எவ்வாறு செய்யமுடிகிறது' என்று கேட்டேன். 'மலிவாகக் கிடைக்கிறதா என்றறிய நேற்றோ அல்லது சென்ற வாரமோ என்ன விலை இருந்தது என்று தெரிய வேண்டும். ஒரு காரட் நன்றாக இருக்கிறதா இல்லையா என்றறிய ஒரு நல்ல காரட் எப்படி இருக்கும் என்ற ஞாபகமோ அல்லது முந்தைய அனுபவமோ வேண்டும'.

முதலில் 'என்ன முட்டாள் கேள்வி?'என்று மட்டும் கூறினார். பின்பு சிரித்துவிட்டு நான் சற்றுமுன் விளக்கியவற்றை ஏறத்தாழ சுருக்கமாக்கிக் கூறினார். அதாவது கடைகளில் வாங்கச் செல்லும்போது, யோசித்து, தீர்மானித்து, தேர்ந்தெடுப்பவர் என்று யாருமில்லை. ஆன்மாவானது தன்னிச்சையாக இவற்றையெல்லாம் செய்கிறது. ஆனால் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு உடலுக்குள் யாரோ இருந்துகொண்டு முந்தைய அனுபவம் மற்றும் அறிவின் துணையோடு தீர்மானங்கள் செய்வதுபோல் தோன்றும்.

1970-களின் இறுதியில் இதே போன்ற வார்த்தைகளால் திரு. யூ.ஜி. கிருஷ்ணமூர்த்தி தான் சாமான்கள் வாங்கும் முறைகள் பற்றிப் பேசக் கேட்டேன். 'நான் தள்ளு வண்டியை பாதை வழியாகச் செலுத்திக்கொண்டு செல்வேன். ஒரு கை நீள்வதையும், சாமான்களை எடுத்துக் கொண்டு வண்டியில் வைப்பதையும் கவனிப்பேன். அது என்க்கு சம்பந்தமில்லாத ஒன்று. நான் கையை அந்த திசைக்குச் சென்று அந்த குறிப்பிட்ட பொருளைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்லவில்லை. அது தானாகவேதான் நிகழ்ந்தது. பணம் செலுத்தும் இடத்தை நான் அடையும்போது, கூடை நிறைய உணவுப் பொருட்கள் இருக்கும், அதில் எதுவும் சுயமாக நான் தேர்ந்தெடுத்ததில்லை.

கேள்வி: நீங்கள் யாரைப்பற்றி எழுதுகிறீர்களோ, அவர்கள் மேல் மிகவும்

மரியாதை வைத்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. உண்மைகளை உள்ளபடி, உமது எண்ணம் மற்றும் உணர்ச்சிகளுடன் சம்பந்தப்படாத முறையில் கையாளுவது சிரமமாக இருந்ததா? உதாரணமாக அவர்களைப் பற்றியோ அல்லது அவர்களது வாழ்க்கையைப் பற்றியோ தரக்குறைவான--படிப்பவர்களில் சராசரியானவர்களின் எண்ணப்படியாவது-- விஷயங்களைக் காண நேரிடும்போது அவர்கள்மேல் உங்களுக்கு மரியாதை உண்டு என்பதினால் அவற்றைப் புத்தகத்தில் சேர்க்காமலிருக்கும் மனோபாவம் இருந்திருக்கலாம்.

டேவிட்: ரமண மஹர்ஷியைப் பற்றி ஆரம்பிக்கலாம். கடந்த 25 ஆண்டுகளில் பெரும்பாலுமவருடைய வாழ்க்கையையும் உபதேசங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்து வந்துள்ளேன். அத்தனை காலத்திலும் மக்களுக்கு அவரைப் பற்றின தவறான அபிப்பிராயம் வரலாமோ என்று மக்களிடமிருந்து நான் மறைக்கும்படியான ஒரு சம்பவமும் கிடைத்ததில்லை. அவருடைய ஒழுக்கமும் நடத்தையும் எல்லா நேரங்களிலும் அப்பழுக்கற்றவை. புனிதத்தன்மையுடன் சம்பந்தப்படுத்தும் எல்லப் பண்புகளும் அவரிடம் பொருந்தியிருந்தன. தயை, மென்மை, எளிமை, சாந்தம், பொறுமை முதலானவை. பல பத்தாண்டுகள் (decades) முற்றிலும் பொதுமக்களின் பார்வையில் அவர் வாழ்ந்திருந்தார். அவருக்கென்று தனிப்பட்ட அறை ஒன்றும் இருக்கவில்லை. ஆகையால் அவர் செய்தது சொன்னது எல்லாம் பொதுவான ஆராய்ச்சிக்கு உட்பட்டது. ஸ்நான அறைக்குச் செல்லும்போது தவிர அவர் ஒரு மூடிய கதவின் பின் இருந்ததே இல்லை. 1940-கள்வரை காலை இரண்டு மணிக்கு அவரை தரிசிக்க வந்தாலும் அவர் வசித்த கூடத்திற்குச் சென்று அவருடன் அமரலாம். சிலர் அவர் பெயரைக் கெடுக்க முயன்று அவ்வப்போது அவரைப்பற்றிக் கதைகளைக் கற்பிப்பார்கள். ஆனால் அவருடன் நெருங்கிப் பழகிய யாரும் அவற்றை ஒருபோதும் நம்பவே மாட்டார்கள். அவரது வாழ்க்கை முறை அவ்வளவு தூயதாகவும், பகிரங்கமாக இருந்தமையால் ஒருவகையான அவதூறுக்கோ, தவறுக்கோ இடமே இருந்ததில்லை. அவர் பண நிர்வாகம் செய்ததே இல்லை; எவரையும் தூற்றியதேயில்லை; நீருக்கான பாண்டத்தையும், கைத்தடியையும் தவிர வேறு எதையும் வைத்துக் கொள்ளவில்லை; ஒருபோதும் ஒரு பெண்ணுடன் தனியாக இருந்ததில்லை. அவர் வாழும் முறையைக் கவனிக்காதவர்கள் மட்டுமே அவரைப்பற்றி அவதூறான கதைகளைக் கற்பிக்க முடியும்; மற்றவர்கள் அதை நம்புவார்கள் என்று எதிபார்க்கமுடியும்.

அவ்வாறு கதைகளை வெளிமனிதர்கள் உருவாக்கும்போது ஸ்ரீ ரமணர்

கோபம் கொள்வதைவிட வேடிக்கையாகவே எடுத்துக் கொள்வார். 1930 - களின் முற்பகுதியில் அதிருப்தி அடைந்த பழைய அன்பர் ஒருவர் மிகவும் பழிச்சொற்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டபோது, ஆசிரம நிர்வாகி நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்ரீ ரமணர் மற்றும் ஆசிரமத்தினுடைய நற்பெயரைக் காப்பாற்றுவதற்காக அறிக்கை வெளியிட்டவர்மீது வழக்குத் தொடர விரும்பினார். ஸ்ரீ ரமணர் அதைத் தடுத்து, 'மாறாக அதை வாயிலில் சென்று விற்கலாமே. உண்மையான அன்பர்கள் அதை படித்துவிட்டு அதிலிருக்கும் ஒரு வார்த்தையைக்கூட நம்பமாட்டார்கள். கெட்டவர்கள் அதை நம்புவார்கள், இங்கு வருவதைத் தவிர்ப்பார்கள். ஆகக்கூடி நமக்கு இங்கு விருந்தினர்கள் வருவது குறையும்' என்றார்.

ஆசிரம வளாகத்தில் அத்தகைய நிந்திக்கத்தக்க அறிக்கை விற்கப்படுவதை ஒருபோதும் பக்தர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் நிர்வாகி அந்த ஆலோசனைக்கு ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் இச்சம்பவம் ஸ்ரீ ரமணரின் குணநலனின் சுவைமிக்க ஒரு பகுதியை விளக்குகிறது. தன்னைப்பற்றிய விமர்சனங்களால் சிறிதும் சலனப்படாமல் இருந்தது மட்டுமல்லாமல் சில தருணங்களில் அதை ரசிக்கவும் செய்து மற்றும் சில சமயங்களில் அதைக் கொண்டாடுவது போலவும் கூட இருந்தது. புகழாலும் பழியாலும் ஏற்படும் பிரதிபலிப்பு, ஆன்மஞானம் பிறக்கு முன் இறுதியாக அகன்று செல்பவைகளுள் ஒன்றாகும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஸ்ரீ ரமணரிடம் நிச்சயமாக அது இல்லை. வெகு சிலரே கேட்டிருக்கக்கூடிய இன்னொரு கதையைச் சொல்கிறேன். ஸ்ரீ ரமணர் இருந்த கூடத்தில் ஒரு சிறிய புத்தகம் இருந்தது. பத்திரிகைகளில்  ஸ்ரீ ரமணரைப் பற்றி ஏதேனும் விவரங்கள் வெளிவந்திருந்தால் யாராவது ஒருவர் அதனைக் கத்தரித்து அப்புத்தகத்தில் ஒட்டி வைத்துவிடுவார்கள். அவை ஸ்ரீ ரமணரின் வாழ்க்கை, உபதேசம், ஆசிரமம் பற்றிய பொதுவான விவரங்களாகவோ அல்லது ஆதரவான நற்சான்றுகளாகவோ இருக்கும். ஒரு நாள் ஒரு பத்திரிகையில் மிகவும் குற்றம் சாட்டும் அறிக்கை வெளிவந்தது. ஸ்ரீ ரமணரே அன்பர்களின் திகிலடைந்த மறுப்புக்களையும் மீறி அதைக் கத்தரித்து அப்புத்தகத்தின் மேல் அட்டையில் ஒட்டிவிட்டார். 'எல்லோருக்கும் விரும்பியதைக் கூற முடியவேண்டும்' என்றார். 'நல்ல அறிக்கைகளை மட்டும் ஏன் வைத்துக் கொள்ளவேண்டும்? கெட்டவைகளை ஏன் மறைத்துவிட வேண்டும்?'. இவையெல்லாம் ஸ்ரீ ரமணரைப் பற்றிய கெட்ட விஷயங்கள் இல்லை என்பதைச் சுற்றிவளைத்துச் சொல்வதாகும். எனவே அவ்வாறானவற்றை மறைத்துவிடுதல் என்ற கேள்விக்கே இடமில்லை.

சில வருடங்களுக்குமுன், 1920-களின் முற்பகுதியிலிருந்து ஸ்ரீ ரமணருடன் இருந்த குஞ்சுஸ்வாமிக்கும் என் நண்பர் மைகல் ஜேம்ஸ் என்பவருக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கேட்டேன். குஞ்சுஸ்வாமி தன் புத்தகங்களுள் ஒன்றை ஸ்ரீ ரமணரைப் பற்றி கெட்ட அபிப்பிராயம் தரக்கூடும் என்று அவர் கருதிய சில விவரங்களை நீக்கித் திருத்தி அமைத்துக் கொண்டிருந்தார். அவ்வாறு நீக்கப்பட்டவை தேவையற்றவை. உதாரணமாக 1918-ல் ஸாது நடனானந்தா முதலில்ஸ்ரீ ரமணரைக் காண வந்தபோது, ஊர்க் கோயிலில் ஒருவரை வழிகாட்டுமாறு கேட்டார். அம்மனிதர்,'அந்த மனிதரைக் காணச்சென்று நேரத்தை வீணாக்காதீர் நான் 16 ஆண்டுகளாகச் சென்றுகொண்டிருக்கிறேன். அவர் யாரையும் சட்டை செய்வதில்லை' என்றார். குஞ்சுஸ்வாமி இந்த பதிலை நீக்கிவிட வேண்டுமென்று விரும்பினார். ஏனெனில் ஒருவர் பதினாறு ஆண்டுகள் பகவானைச் சென்று பார்ப்பதில் கழித்துவிட்டு ஒரு நன்மையும் உணரவில்லையே என்று மக்கள் நினைத்துவிடக்கூடாது என்று கருதினார். என்னைப்பொறுத்தவரை இது காண வந்தவரின் முதிர்ச்சியற்ற நிலையின் ஒரு பிரதிபலிப்பே அன்றி ஸ்ரீ ரமணரின் மாற்றத்தை ஏற்படுத்தும் திறனைக்குறை கூறுவதாகாது. இச்சம்பவம் ஸ்ரீ ரமணரின் பெருமையை உணரமுடியாத அவரை மோசமாகத் தோற்றுவிக்கின்றதே அல்லாமல் ஸ்ரீ ரமணரை அல்ல. மழையானது நாளுக்கு 24 மணிநேரமும் பெய்யலாம். ஆனால் தரிசு நிலத்தில் ஒன்றுமே விளையாது.

இருப்பினும் மைகல் குஞ்சுஸ்வாமியைக் கேட்டார்,'நீங்கள் ரமணருடன் பழகிய அந்த 30 வருடங்களில் (1920-50) பொதுமக்களிடையே அவரது ப்ரக்யாதியைப் பாதிக்கும் என்பதால் நீங்கள் யாரிடமும் சொல்லமுடியாத அல்லது விளம்பரப்படுத்தத் துணியாத அளவுக்கு மோசமாகவும், சங்கடத்தைத் தருவதுமான வகையில் அவர் ஏதாவது செய்வதையோ அல்லது சொன்னதையோ கண்டதுண்டா?' குஞ்சுஸ்வாமி சிறிது நேரம் யோசித்துவிட்டு 'இல்லை' என்றார். 'அப்படியானால் சம்பவங்களைத் தணிக்கை செய்து யாரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம்' என்று மைகல் கேட்டார். அவருக்கு பதில் கிடைக்கவில்லை.

ஸ்ரீ ரமணர் தன்னிடம் வரும் ஒவ்வொருவரையும் மாற்றியமைக்கும் சர்வவல்லமை உள்ளவரில்லை என்று படிப்பவர்களை நினைக்க வைக்கக்கூடிய எந்த ஒரு சம்பவத்தையும் விலக்கிவிடுவது தன் குருபக்தியின் வெளிப்பாடு என்று குஞ்சுஸ்வாமி நினைத்தார். என் கருத்து மாறுபட்டது. ஸ்ரீ ரமணரின் உருவத்தை நான் மெருகேற்றுவது அவ்சியம் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அவர்

வாழ்க்கையில் தணிக்கை செய்யப்படாத உண்மைகளே அதற்கு சாட்சி கூறும். இருப்பினும், இவற்றையெல்லம் கூறியபிறகு, ஞானம் பெறுதல் மனிதரை நற்பண்பின் ஒருருவாக மாற்றிவிடுவதில்லை என்று ஸ்ரீ ரமணரே தயங்காமல் ஒப்புக்கொண்டார் என்று இங்கு நான் கூற வேண்டும். அவருக்கு முன்பிருந்த சில மஹான்களைப்போலவே ஸ்ரீ ரமணரும், ஒருவர் செய்வதையும் சொலவதையும் வைத்து அவர் ஞானம் பெற்றவரா இல்லையா என்று அறுதியிட்டுக் கூறுவது கடினம் என்று சொல்லியுள்ளார். தூய்மையான பண்பும் ஞானம் பெறுதலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் பலரும் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். ஸ்ரீ ரமணர் தூய்மையும் ஞானமும் கலந்த ஒரு அபூர்வமான இணைப்பு. ஆனால் வேறு பல ஆசான்களும் ஞானம் பெற்றவர்களும் அவ்வாறு இருக்கவில்லை. அவைகள் காலத்தின் சமூக, ஒழுக்க நெறிமுறைகளை அனுசரிக்காதமையால் அவர்கள் ஞானத்தில் குறைந்தவரென்று ஆகாது. நிறைவேற்ற வேண்டிய வெவ்வேறு கர்மங்கள் அவர்களுக்கு இருந்தன.

ஒரு தேவதாசியுடன் உறவு கொண்டதற்காக மக்களால் பழிக்கப்பட்ட கடுவேலி சித்தர் என்ற ஒரு நெறிதவறாத துறவியின் கதையை ஸ்ரீ ரமணர் 'Talks with Sri Ramana Maharshi' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவ்வூர் அரசன் அவர் உண்மையில் துறவியா இல்லையா என்று நிரூபிப்பவருக்கு வெகுமதி அளிப்பதாக அறிவித்தான். அவ்வறிவிப்பு செய்யப்பட்ட நாட்களில் கடுவேலி சித்தர் மரங்களிலிருந்து விழும் காய்ந்த இலைகளை மட்டுமே உணவாகக்கொண்டு உயிர்வாழ்ந்திருந்தார். கடைசியில் நடனமாடும் அப்பெண் கடுவேலி சித்தரின் குழந்தையை ஈன்றெடுத்தாள். அவள் தன் காரியம் நிரூபணமாகிவிட்டதென்று எண்ணி பரிசைப்பெற்றுக்கொள்ள அரசனிடம் சென்றாள்.

அவர்களுடைய நெருக்கமான உறவைப்பற்றி பகிரங்கமாக உறுதிபெறவேண்டி அரசன் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தான். அது நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அவள் தன் கால் சலங்கைகளில் ஒன்று தளர்ந்துவிட்டதால் தன் காலை கடுவேலி சித்தரை நோக்கி நீட்டினாள். அதை அவர் முடித்து சரி செய்தபோது சபையோர் அவரைப் பரிகசித்தனர். கடுவேலி சித்தர் அதனால் பாதிக்கப்படவில்லை. அவர் தமிழில் ஒரு செய்யுள் பாடினார். அதில் ஒரு பகுதி ' நான் இரவும் பகலும் ஆன்ம ஞானத்தில் லயித்து உறங்குவது உண்மையானால், இங்குள்ள இக்கல் இரண்டாக வெடித்துப் பரந்தவெளியாகட்டும்' என்பதாகும். உடனே சபையோர் ஆச்சரியமடையும்படி அருகிலிருந்த ஓர் கற்சிலை பெரும் சப்தத்துடன் பிளந்தது. இக்கதைக்கு ஸ்ரீ ரமணரின் தீர்ப்பு, 'தான

நேர்மை தவறாத ஒரு ஞானி என்று அவர் தன்னை நிரூபித்துவிட்டார். ஒரு ஞானியின் வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடக்கூடாது' என்பதாகும். இத்தகைய நடத்தயை கடுவேலி சித்தர் ஞானம் பெற்றவரல்ல என்று காட்டுவதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று அப்பழுக்கற்ற தூய்மையான ஸ்ரீ ரமணரால் சொல்லமுடிந்தது என்பது என்னை வெகுவாகக் கவர்கின்றது.

கேள்வி: ரமண மஹர்ஷியைப்பற்றிச் சரி .நீங்கள் எழுதியுள்ள மற்றவர்களைப்பற்றி?

டேவிட்: நல்லது. கடுவேலி சித்தரின் கதை பாபாஜியை நினைவுறுத்துகிறது. முதல்மனைவி உயிருடன் இருக்கும்போதே மீரா என்ற பெல்ஜிய நாட்டு மங்கையை இரண்டாவது மனைவியாக்கிக்கொண்டு முக்தி என்ற பெண்மகவுக்கும் தந்தையானார். அப்போது அவருக்கு வயது 60-க்கும் மேல்; மீராவுக்கு 20-க்கு மேல் இல்லை. இந்த உறவு அவர் சிஷ்யர்கள் பலரை வெகுவாகப் பாதித்தது. உயர்ந்த நிலையிலிருந்து அவர் விழுந்துவிட்டதாக எண்ணிய பலர் அவரைவிட்டு விலகினர். பாபாஜி இந்த உறவை மறைக்கவில்லை. குழந்தை பிறந்ததும் முக்தியைத் தன் பெற்றோரின் வீட்டிற்கு, அவள் பாட்டான் பாட்டிக்கு அறிமுகப்படுத்த லக்னௌக்கு மீராவையும், முக்தியையும் அழைத்துச் சென்றார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை அமைத்துக் கொண்டிருந்தபோது புத்தகத்தில் இச்சம்பவம் சேர்க்கப்படலாமா வேண்டாமா என்பது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது என்று அவரிடம் கூறினேன். பதிலுக்கு அவர் அந்த உறவைப்பற்றின விவரத்தை எனக்காக எழுதித்தந்தார். அது,தான் மறைக்க வேண்டிய ஒன்று என்று அவர் நினைக்கவில்லை. அந்த உறவால் அவரைப்பற்றி பலர் தாழ்வாக எண்ண நேர்ந்தாலும், புத்தகத்தில் அதைச் சேர்க்கவேண்டாமென்ற கேள்விக்கோ மறைப்பது என்ற கேள்விக்கோ இடமில்லை.

கேள்வி: இந்த உறவை ஏன் மேற்கொண்டார் என்று எப்போதாவது விளக்கியுள்ளாரா? ஏதாவது காரணங்கள் கொடுத்தாரா?

டேவிட்: பாபாஜிக்கும், பொதுவாக ஞானம் கைவரப் பெற்ற எவருக்கும் அவர்கள் மேற்கொள்ளும் செயல்களுக்குக் காரணங்கள் இருப்பதில்லை. அலசிப்பார்த்து தீர்மானத்திற்கு வரும் மனங்கள் அவர்களுக்கு இல்லாததால் அவர்கள் தங்கள் எதிர்கால செயல்முறைக்குக் காரணங்கள் கற்பிப்பதில்லை.

ஒரு பெரிய வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொள்ள இருந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. பயணச்சீட்டுகள் வாங்கியாயின. வெளிநாட்டில்

நுழைவுக்கான அனுமதி (visa) கிடைத்துவிட்டன. பயணப்பிரதிநிதி பயணசீட்டுகளுடன் வந்தபோது, 'நான் எங்கும் போகப்போவதில்லை' என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். பயணம் ரத்து செய்யப்பட்டது. சில வாரங்களுக்குப் பிறகு யாரோ ஒருவர் கடைசி நிமிடம் திடீரென்று ரத்து செய்ததற்குக் காரணம் கேட்க, அவர் 'காரணாங்கள்? நான் செய்யும் எதற்கும் காரணங்கள் கிடையாது' என்றார்.

நீ ஆத்மாவாக இருக்கும்போது, ஆத்மா எதைச்செய்யுமாறு தூண்டுதிறதோ அதனை யோசிக்காமல் ஏனென்று தெரியாமல் நீ செய்வாய். அங்கு 'நான் இதைச் செய்ய வேண்டும்; அதைச் செய்யக் கூடாது' என்று சொல்வதற்கு யாரும் இல்லை. ஏனென்றால் இத்தகைய தீர்மானங்கள் செய்வதற்கு அங்கு யாரும் மிஞ்சியில்லை.

ஒரு முறை ஹரித்வாரில் அவருடன் வசித்த ஒருவரைச் சந்தித்தேன். அவர்கள் அநேகமாக தினந்தோறும் கங்கை நதியின் ஓரம் நடப்பதறகு, அனேகமாக ஒரே வழியாகச் செல்வார்கள். சில சமயம் பாபாஜி ஒரு வழியில் செல்ல ஆரம்பித்து ஒரு காரணமுமின்றி வலமோ இடமோ திரும்பி வேறு எங்காவது செல்லத் தொடங்குவார். பின்வரும் உரையாடல் ஒரு முறை நிகழ்ந்தது:

'நாம் எங்கு சென்று கொண்டிருக்கிறோம்?'
'எனக்குத் தெரியாது'
'பாதையிலிருந்து ஏன் திரும்பிவிட்டீர்கள்?'
'எனக்குத் தெரியவில்லை ஏதோ ஒன்று இத்திசையில் நடக்கத் தூண்டிற்று'
'எவ்வளவு தூரம் நாம் செல்லவேண்டும்?'
'எனக்குத் தெரியவில்லை. அங்கு சென்றதும் எனக்குத் தெரியவரும்'
'அங்கு' என்பது எங்கு?'
'தெரியாது. அங்கு சென்றடைந்ததும் ஏன் இந்த வழியாக நடக்கத் தொடங்கினேன் என்பது தெரியவரும்'

இறுதியில், காட்டுப்பகுதியில் ஒரு மனிதனைச் சந்தித்தனர். அவன் பாபாஜியினால் ஒரு விழிப்புணர்ச்சி அனுபவத்தைப் பெற்றான். அம்மனிதன் அத்தகைய அனுபவத்திற்குத் தயாராக இருக்கிறானென்று ஆன்மாவுக்குத் தெரிந்து,. பாபாஜியை அவனை நோக்கிச் செல்ல வைத்தது. அம்மனிதனைச் சந்திக்கும்வரை பாபாஜிக்கு இச்சந்திப்பிற்காகத்தான் திசை திருப்பப்பட்டார் என்று தெரியாது. ஆத்மா தன்னை குறிப்பிட்ட அத்திசையில் போக வைத்தது என்பதை சாதாரணமாக ஏற்றுக்கொண்டார். பாதை மாற்றத்தைப் பற்றி அவர் சந்தேகமோ, ஆக்ஷேபணையோ கொள்ளவில்லை. உண்மையில் அவர்

அதைப்பற்றி எந்தவிதமாகவும் நினைக்கவோ, கவலை கொள்ளவோ இல்லை. அவர் எங்கு தேவைப்பட்டாரோ அங்கு ஆத்மா தன்னை அழைத்துச்செல்ல அனுமதித்தார்.

அந்த மனிதனுடன் பாபாஜியின் சந்திப்பு விதிக்கப்பட்டிருந்தது என்று நினைக்கிறேன். மீராவுடன் பாபாஜிக்கு ஏதோ ஒரு விதிக்கப்பட்ட கர்மவினை தீர்க்கவேண்டியிருந்தது. விழிப்புணர்ச்சியின் அனுபவத்தைத் தரக்கூடிய ஆத்மாவின் அருளைச் செலுத்துதல் அன்றி அந்த விவகாரம் பாலியலையும் குழந்தை ஒன்றினையும் சம்பந்தப்பட்டதால், பலர் அவர் ஒழுக்கம் தவறி நடந்துகொண்டாரென்று சொல்லக்கூடும். ஆனால் நியமிக்கப்பட்ட விதியை அவருடைய உடல் நிறைவேற்றியது என்றே நான் கூறுவேன்.

கேள்வி: மேற்கூறிய விளக்கத்தைப் படித்த பிறகு, பெரும்பான்மையோர், முக்கியமாக சந்தேகப் பிரகிருதிகள், 'திருமணமின்றி தன்னைவிட 40 வயது குறைந்த ஒரு பெண்ணுடன் உறவுகொண்டு ஒரு குழந்தைக்குத் தந்தையான ஒருவரைப்பற்றிய அசாதரணமான கருணை காட்டும் அபிப்பிராயம்' என்பார்கள்.

டேவிட்: சமீபத்தில் நான் ரமணஸ்ரமத்திற்காகப் பதிப்பித்த 'ஸ்ரீ ரமண தர்சனம்' என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியரான சாது நடனானந்தா, 19 - ஆம் நூற்றாண்டின் சிறந்த, வங்காளத்து மஹானான ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி பின்வரும் வார்த்தைகளை எடுத்துக்காட்டுகிறார். 'எனது குருவானவர் மது விற்கும் கடைக்கு வழக்கமாகச் செல்பவராயினும், நான் அவர் மீது களங்கத்தைச் சுமத்த மாட்டேன். ஏன்? ஏனென்றால் அதனால் மட்டும் அவர் தன் குருத்துவத்தை இழந்துவிட மாட்டாரென்று நான் அறிவேன். அவருடைய் வெளியுலக வாழ்க்கையைப் பரீக்ஷிக்கவோ, புலனாராயவோ நான் அவரிடம் அடைக்கலம் புகவில்லை. அது என் கடமையுமில்லை. ஆதலால் என்ன நடந்தபோதிலும் அவரே என் குரு'. 'குரு' என்ற சொல் 'இருளை அகற்றுபவர்' எனப் பொருள்படும். குருவின் இயல்பையுடைய ஒருவர், தானே வருவித்துக்கொண்ட அறியாமை என்ற இருளிலிருந்து மக்களை எழுப்பி ஆத்மஒளியை அவர்களுக்குக் காட்டும் ஆற்றல் படைத்தவர். பாபாஜிக்கு அந்த குரு இயல்பு இருந்தது. அவருடைய வாழ்க்கை வரலாற்றை நான் ஆய்வு செய்து எழுதிக்கொண்டிருந்த அந்த நான்கு ஆண்டுகளில் அவருடன் ஏற்பட்ட ஒரு சந்திப்பில் நேரடியான ஆத்ம அனுபவத்தைப் பெற்றோம் என்று உறுதிகூறிய உலகம் முழுவதும் கணக்கற்றவர்களைச் சந்தித்தேன். அந்த அனுபவங்கள் நிலைக்கவில்லை. ஆயினும் அவை நிகழ்ந்தன என்பதே மக்களுக்கு

ஆத்மாவை தரிசிக்கவைக்கும் ஆற்றலான அந்த குருத்வம் பாபாஜிக்கு இருந்தது என்று சில சமயங்களில் எனக்குத் தோன்றுகின்றது. அவர் விசித்திரமாகவும். கோபம் மிகுந்தும் நடந்துகொண்ட போதிலும் அவருடன் பழகிய ஒருவராலும் அவரிடமிருந்து ஒரு மாபெரும் மாற்றத்தைச் செய்யவல்ல சக்தி ஒளி வீசிக்கொண்டிருந்தது என்பதைச் சந்தேகிக்க முடியாது.

கேள்வி: உங்கள் அபிப்பிராயத்தில், அறிவு விளக்கம் பெற்ற குருவானவரை அவருடைய நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் பொறுப்பாக்கக் கூடாது என்று ஊகிப்பது சரிதானா?

டேவிட்: என்னைப் பொறுத்தவரை, உண்மையான குருவானவர் மனித உருவத்தில் அவதரித்த கடவுளாவார். செய்கைகளைத் தேர்ந்தெடுக்கவோ, தீர்மானிக்கவோ குருவின் உடலினுள் யாரும் இல்லை; அவற்றிற்கான பொறுப்பை ஏற்கவும் ஒருவருமில்லை. அவர் சொல்வதெல்லாம் இறைவனின் சொற்கள்; அவர் செய்வதெல்லாம் இறைவனின் செயல்கள். அவரது சொற்களையும் செயல்களையும் வைத்து அவரை எடை போட விரும்புபவர், வெறும் உடலை மட்டுமே காண்கிறார்கள். தாங்கள் செய்வது போலவே எண்ணமிடவும், தீர்மானிக்கவும் அவ்வுடலில் ஒரு மனம் இருக்கின்றதென்று நினைக்கின்றனர். அவ்வுருவத்தின் பின்னுள்ள தெய்வீகத்தன்மையை அவர்களால் காணமுடியவில்லை. அவ்வுருவத்தினின்று வெளிப்படும் கதிர் வீச்சினை உணரவோ அனுபவிக்கவோ முடியவில்லை.

சாரதம்மா 1970-களில் லக்ஷ்மணஸ்வாமியின் ஆசிரமத்தில் ஸாதனை செய்துகொண்டிருந்தபோது சில சமயங்களில் அவர் மிகவும் கொடுமையாக நடந்துகோண்டு அவளைப் பலவித சோதனைகளுக்கு உள்ளாக்கினார். பல ஆண்டுகளுக்குப்பின் சுயமாக ஆத்மானுபவம் பெற்றபிறகு சாரதம்மா என்னிடம் 'சாரதாவை இப்படிச் சோதிக்கலாம் அவள் என்ன செய்கிறாள் என்று பார்க்கலாம்' என்று யோசித்துத் திட்டமிட்டுக் கொண்டு ஸ்வாமி இருக்கவில்லை ஞானிக்கு இவ்வாறு எண்ணிப்பார்த்து, திட்டம் வகுத்து தீர்மானிக்க மனம் என்று ஒன்று இல்லை. நான் ஆத்மாவினால் சோதிக்கப்பட்டேன். ஏனென்றால் நான் சோதிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது. ஸ்வாமியே செய்ததுபோலத் தோன்றினாலும் இச்சோதனைகளை யாரும் திட்டமிடவில்லை' என்று கூறினார்..

1920-களின் பிற்பகுதியில் அண்ணாமலை ஸ்வாமி ரமணாச்ரமம் வந்தபோது ஸ்ரீ ரமணர் அவரைப் பல ஆண்டுகள் கடின உழைப்புக்கு ஆளாக்கினார். அண்ணாமலை ஸ்வாமி செய்வதற்கு ஒன்றுமின்றி

அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போதெல்லாம் அவரை சுறுசுறுப்பாக வைப்பதற்கு ஏதாவது ஒரு வேலையைக் கண்டுபிடிப்பார். ஆசிரம நிர்வாகியுடன் அண்ணாமலை ஸ்வாமி தீவிரமாக சண்டை போட வேண்டும்படியான சந்தர்ப்பங்களை அமைத்துவிடுவார். இது சுமார் 12 வருடங்களாக நடந்து வந்தது. இறுதியில் ஸ்ரீ ரமணர், 'உம் கர்மவினை முடிந்துவிட்டது' என்றார். அச்சொற்களை இருமுறை கூறினார். அப்போதிலிருந்து அண்ணாமலை ஸ்வாமிகள் தனித்து அமைதியுடன் தியானம் செய்ய அனுமதிக்கப்பட்டார். இதைப்பற்றி யாரால் தீர்ப்பு கூற முடியும்? . ஆத்மாவானது ஸ்ரீ ரமணர் மூலம் செயல்பட்டு, அண்ணாமலை ஸ்வாமியைப் பல வருடங்கள் எதிர்ப்பைச் சமாளிக்கும் சூழ்நிலையில் பாடுபட வைத்தது. அதே சமயம் மற்றவர்களுக்கு அதைவிட சுலபமான வாழ்க்கை அமைந்தது. சில சமயங்களில் குரு கடுமையாக இருக்கவேண்டும். ஏனென்றால் மற்ற வழிமுறைகள் பலன் அளிப்பதில்லை. ஒருமுறை நிஸர்கதத்த மஹராஜ் 'நீங்கள் எல்லோரும் நதியின் கரைகளை கெட்டியாகப் பற்றிக்கொண்டுள்ளீர்கள். நான் உங்களை நதியின் ஓட்டத்துடன் மிதந்துசெல்ல அதன் மத்தியில் உங்களைத் தள்ளி விடுவதற்கு முயன்று கொண்டிருக்கிறேன். நான் உங்களை விட்டுவிடும்படி சொல்கிறேன், நீங்கள் அதைச் செய்வதில்லை. ஆனால் விட்டுவிடுவதைச் செயல்படுத்த ஒரு வழி என்ன என்று கேட்கிறீர்கள். நான் விட்டுவிடுங்கள் என்று வேண்டுகிறேன் ஆனால் நீங்கள் கேட்பதில்லை இறுதியில் நான் சோர்ந்துவிட்டு விட்டு உங்கள் விரல்களை மிதித்துமட்டும் விடுகிறேன்' என்றார். பக்தர்களை விடுவிப்பது நோக்கமாக இருக்கும்போது வெளிப்பார்வைக்குக் கடுமையாகத் தோன்றும் நடத்தையைப் பற்றி எப்படி தீர்ப்பு கூற முடியும்?. ஒரு விஷயம் தெரியாத பார்வையாளனுக்கு தகாத நடத்தை என்று தோன்றுவதே உண்மையில் குறிப்பிட்ட அந்த பக்தனுக்குத் தேவையானதாக இருக்கலாம்.

1980-களிலும் 1990-களின் முற்பகுதியிலும் பாபாஜி மீராவையும் முக்தியையும் மிகவும் கொடூரமாக நடத்தினார் என்று தோன்றியது. அவர்களிருவரும் அவரால் மிகவும் துன்பப்பட்டார்கள். ஆனால் 1998 - ன் ஆரம்பத்தில், பாபாஜி இறந்தபிறகு நான் அவர்களிடம் பேசியபோது அவர் நடத்திய விதம் ஒரு ஆன்மிகநோக்கில் மிகவும் உபயோகமாக இருந்ததென்று இருவரும் ஒப்புக்கொண்டனர்.

சமூகம் ஒப்புக்கொள்ளும் வழியென்று சாதாரண மனிதர்கள் மதிக்கும் முறையில் குருவானவர்கள் நடப்பதில்லை என்று அனுபவம் எனக்குக் கற்றுக்கொடுத்துள்ளது. ஒழுங்காக இல்லாததுபோல் தோன்றும் அவர்கள் நடத்தை பக்தர்களின் அகங்காரத்தைஅடக்குவதற்கு அவசியமானது

என்பது என்னுடைய கருத்து. நான் அவர்களை சீர்தூக்கிப் பார்ப்பதில்லை. திட்டமிடாமல், தேர்ந்தெடுக்காமல், தீர்மானங்களைச் செய்யாமல், சூழ்நிலைக்குத் தேவையானவற்றை அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

கேள்வி: ஆரம்பித்த கேள்வியிலிருந்து சிறிது விலகிவிட்டோம். நீங்கள் எழுதிய மனிதர்களைப் பற்றிய ஏதாவது விவரங்களை. அவர்களைப்பற்றித் தவறான அபிப்பிராயம் ஏற்படுத்தக்கூடியவை என்று தவிர்த்ததுண்டா?

டேவிட்: முக்கியமாக தணிக்கை செய்தவர்கள் வரலாற்று நாயகர்களே. ஆனால் எல்லாவற்றிலும் தணிக்கை செய்யப்பட்டது மற்றவர்களைப் பற்றிய விவரங்கள், அவர்களைப் பற்றினவையல்ல. ஸ்ரீ ரமணர் கூட இவ்வாறு செய்தார். 1931-இல் 'ஆத்ம ஸாக்ஷாத்காரம் (self realization)' முதலில் பதிப்பிக்கப்பட்டபோது, ஸ்ரீ ரமணர் மலைமேல் வாசம் செய்த காலத்தைப்பற்றி விரிவான அத்தியாயம் இருந்தது. அந்த காலகட்டத்தில் பல பொறாமைகொண்ட ஸாதுக்கள் அவரை அங்கிருந்து போகச்செய்ய முயன்று அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். அவர்கள் உரிமைகளைத் திருடிக்கொண்டிருந்தாராம். ஏனென்றால் அவர் அதிக அளவு பக்தர்களைக் கவர்ந்து கொண்டிருந்தார். மலையிலிருந்து கற்களை உருட்டித் தள்ளி ஒரு ஸாது அவரைக் கொல்ல முயன்றார். வேறொருவர் விஷம் கொடுக்க முயன்றார். புத்தகம் முதன்முதல் வெளிவந்தபோது ஸ்ரீ ரமணர் அடுத்த பதிப்பில் இந்த விவரங்களை நீக்கி விடுமாறு கூறினார். ஏனென்றால் அவர்களுள் பலர் இன்னும் உயிரோடிருந்தனர். அவர்கள் கொடுத்தத் தொல்லைகளைப் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன என்று தெரிந்தால் வருத்தமடைவார்கள் என்று அவர் நினைத்தார். பிற்பாடு 1940-களில் அவர்கள் எல்லோரும் இறந்துவிட்ட பிறகு, வருத்தமடையக்கூடிய ஒருவரும் உயிருடன் இல்லை என்பதால், அவ்விவரங்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளலாம் என்றார்.

நான் லக்ஷ்மணஸ்வாமியின் சரிதத்தை எழுதியபோது அவரும் இதே காரணத்திற்காக சில விவரங்களை நீக்கிவிட்டார். 'குறிப்பிட்ட அந்த நபர் இன்னும் உயிருடன் உள்ளார்' என்று கூறி 'அவளும் அவளுடைய கணவரும் இவ்விவரம் வெளியிடப்பட்டதை அறிந்தால் மனம் வருந்த நேரிடும்' என்றார். அந்த புத்தகத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்றும், தவிர்க்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் விரும்பிய விவரங்கள் எவை என்று தீர்மானிப்பதை லக்ஷ்மணஸ்வாமிக்கும் சாரதம்மாவுக்கும் விட்டுவிட்டேன். விடப்பட்ட செய்திகளில் ஒன்றுகூட அவர்களைத் தவறான முறையில் பிரதிபலிப்பதாக இருக்கவில்லை. மாறாக,

அவற்றில் பல அவர்கள் புகழைப் பெருக்கியிருக்கும் என்று நினைக்கிறேன். சில மிகவும் அதிசயிக்கத்தக்க சம்பவங்கள் நீக்கப்பட்டன என்பதில் எனக்கு வருத்தமே.ஆனால் அவை என்னவென்று என்னைக் கேட்கவேண்டாம். ஏனென்றால் வெளியிட வேண்டாமென்ற அவர்கள் தீர்மானித்தின்படி நடக்கிறேன்.

ஸ்ரீ ரமணரின் அடியார்களில் சிலரை நல்லவிதமாகக் காட்டாத சில விவரங்களை விட்டுவிடும்படி அண்ணாமலை ஸ்வாமி கூட என்னைக் கேட்டுக்கொண்டார். அவர்களில் சிலர் அப்போது உயிருடன் இருந்தனர். சிலர் எனக்கே நன்றாகத் தெரிந்தவர்களாதலால் அவருடைய வேண்டுகோளின் நியாயத்தை நான் உணர்ந்துகொண்டேன். நாம் விளக்கிக்கொண்டிருக்கும் விஷயம் எத்தகையது என்பதைப் பற்றிச் சிறிது புரியவைக்கும் ஒரு சம்பவத்தை சொல்கிறேன். 1920-களில் ரமணரைச் சுற்றிக் கூடிய ஸாதுக்களில் பலர் கஞ்ஜாவை உபயோகிக்கும் பழக்கமுடையவர்கள். ஸ்ரீ ரமணர் இப்பழக்கத்தைத் தடைசெய்ய முயன்றார். ஆனால் அவர்கள் அவர் சொல்வதைக் கேட்கவில்லை. அவர்கள் ஆசிரமத்திலிருந்து 300 கஜ தூரத்திலிருந்த ஒரு சிறிய திரௌபதி கோயிலில் கூடுவது வழக்கம். அவர்கள் ஸ்ரீ ரமணரிடம் வந்து 'நாங்கள் திரௌபதி தரிசனத்திற்குப் போகிறோம்' என்பர். அது 'நாங்கள் பிகைப்பிடிக்கச் செல்கிறோம' என்பதன் ரகசிய சங்கேதமென்று எல்லோருக்கும் தெரியும்.

ராமஸ்வமி பிள்ளை கஞ்ஜா பிடிக்கும் குழுவில் ஒருவர். திரௌபதி கோயிலிலிருந்து திரும்பிவரும் அவர் அதிகமாகப் பேசுகின்ற மனநிலையில் இருப்பார். கூடத்தில் நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் வினா-விடை கூட்டங்களுக்கு பலமுறை இடையூறு செய்வார். யாரேனும் ஸ்ரீ ரமணரைக் கேள்வி ஒன்று கேட்பார்கள். ராமஸ்வாமி பிள்ளை அக்கேள்விக்கு மிகவும் பொருத்தமான விடை என்றெண்ணிக்கொண்டு நீண்ட, போதையுடன் கூடிய, ஒரு அத்வைத உளறலில் இறங்கிவிடுவார். இத்தகைய தடங்கல்களைச் சமாளிக்க, ஸ்ரீ ரமணருக்கும் அவரைக்காண வந்தவர்களுக்கும் இடையே நிகழும் உரையாடலை, அவர்கள் இருவரில யாராவது ஒருவர் கேட்டுக்கொண்டாலே அன்றி யாரும் இடைமறிக்கக்கூடாது என்ற நியமம் ஏற்படுத்தப்பட்டது,

ஒருநாள், கூடத்திற்குள் ஒருவன் வந்து ஸ்ரீ ரமணரை மிகவும் வாதம் செய்யும் வகையில் கேள்வி கேட்க ஆரம்பித்தான். ஸ்ரீ ரமணர் முதலில் அவரைப் பொறுத்துக் கொண்டிருந்தார். ஆனால் சில நிமிடங்களுக்குப் பின் உடனிருந்தவனை அழைத்து, 'இந்த மனிதன் இங்கு எதையும்

கற்றுக்கொள்ள வரவில்லை. வாதாடவும் சண்டையிட மட்டும் தான் வந்துள்ளான். நீ சென்று ராமஸ்வாமி பிள்ளையை அழைத்து வா. அவரால் இவனுடன் வாதாடி சண்டை செய்ய முடியும்' என்றார்.

இது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. 1920-களின் ஆசிரம வாழ்க்கையின் ஒரு அங்கம் என்று எண்ணினேன். ஆனாலும் இதனை வெளியிடப்படாமலிருந்த நியாயத்தையும் நான் உணர்ந்துகொண்டேன். ராமஸ்வாமி பிள்ளை அப்போது உயிரோடிருந்தார். அவர் எனக்கு நல்ல நண்பராகவும் இருந்தார். நான் அவரைக் காண அடிக்கடி சென்று வந்தேன். அடுத்தமுறை நான் அவரைக் கண்டபோது, அது உண்மைதானா என வினவினேன் அவை சிரித்துவிட்டு உண்மை தான் என்று ஒப்புக்கொண்டார். தான் மிகவும் போதையிலிருந்தபோது அரிவாளை எடுத்துக்கொண்டு ஆத்திரத்துடன் ஆசிரமத்திலிருந்த எல்லா வாழை மரங்களையும் வெட்டித் தள்ளியதாகவும் ஒப்புக்கொண்டார். இத்தகைய நினைவுகளால் அவர் சிறிதும் கலவரப்படவில்லையானாலும் அவர் உயிருடன் இருக்கும்போது அவற்றை வெளியிடவேண்டாம் என்று தீர்மானித்தேன். நான் இப்போது சொல்லநேர்ந்தது ஏனென்றால் ஸ்ரீ ரமணரின் கொள்கையின்படி அவற்றால் வருத்தமோ, கோபமோ அடையக்கூடிய ஒருவரும் இப்போது உயிருடன் இல்லை.

சுவாரஸ்யமானது என்னவென்றால் அவரைக் கஞ்ஜா பழக்கத்திலிருந்து குணமடையச் செய்தது ஸ்ரீ ரமணரல்ல, ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆவார். சேஷாத்ரி ஸ்வாமிகள் அவரைப் பார்த்து கஞ்ஜா பிடிப்பதற்காக சினந்து கொண்டார். அந்த வினாடியிலிருந்து ராமஸ்வாமி பிள்ளை புகைபிடிக்கும் ஆசையை உணரவில்லை. இதைப்போன்ற பல விவரங்கள் வெவ்வேறு காரணங்களுக்காக எனது புத்தகங்களில் சேர்க்க வேண்டாமென்று நான் தீர்மானித்தவை இருக்கின்றன. எழுதப்பட்டவரைக் குறையுள்ளவராகக் காட்டக் கூடுமென்று எந்த ஒரு விவரமும் நீக்கப்படவில்லை.

கேள்வி: உங்கள் புத்தகங்களில் எதைச் சேர்ப்பது எதை சேர்க்கக்கூடாது என்பதை நீங்கள் தீர்மானம் செய்ய வேறு ஏதாவது நிர்ப்பந்தங்கள் இருந்தனவா?

டேவிட்: 'Nothing ever happened' என்ற புத்தகத்தை நான் எழுதியபோது பக்தர்களாலேயே எழுதப்பட்ட பல விவரங்களைச் சேர்த்தேன். பாபாஜியை அறிந்தவர்கள் பலரைப் பேட்டிகண்டு அப்பேட்டிகள் பலவற்றை புத்தகத்தில் சேர்த்திருந்தேன். அவ்வாறு நான் செய்தபோதெல்லாம், பூர்த்தியான பிரதியை அந்த ஆசிரியரிடமும், பேட்டி கொடுத்தவரிடமும் தவறாமல் காண்பிப்பேன். மாற்றங்கள் செய்ய

அவர்கள் விரும்பினால் அதைச்செய்ய எல்லா உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. அவர்களுடைய கருத்துக்களையும் விவரங்களையும் ஒரு நேர்மையான பிழையற்ற முறையில் கொடுத்துள்ளேன் என்று விஷயதானம் செய்த எல்லோரும் திருப்தி அடையவேண்டுமென்று விரும்பினேன். ஒரு குருவுக்கும் சிஷ்யனுக்கும் ஏற்படும் சந்திப்பு பலருக்கு மிகவும் புனிதமானது. அறியாமையினாலோ அஜாக்கிரதையாலோ அதைத் தவறான முறையில் வர்ணிக்கும் அல்லது பதிவு செய்யும் குற்றவாளியாக நான் விரும்பவில்லை.

'Living by the words of Bhagavan' என்ற புத்தகம் வெளிவந்தபோது, ரமணாச்ரமத்திலிருந்து சிலர் அண்ணாமலை ஸ்வாமியிடம் வந்து, பிற்பாடு வரும் பதிப்புகளில் சில விவரங்களை நீக்கிவிடும்படி அல்லது மற்றிவிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர். மற்றவர்களைப் பற்றிய சங்கதிகளை விட்டுவிடுவதில் அவருக்குத் தடை ஏதுமில்லை. ஆனால் அவருக்கும் ஸ்ரீ ரமணருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்களின் விவரங்களை மாற்றுவதைப் பிடிவாதமாக மறுத்துவிட்டார். 'என் குருவின் வார்த்தைகள் புனிதமானவை, அவர் எனக்குச் சொன்னது எல்லாம் புனிதமானது. நான் கண்ட அவர் செய்கைகள் எல்லாம் எனக்குப் புனிதமானவை. அவர் சொற்களையும் அவர் உதாரணத்தையும் பின்பற்றி நான் வாழ்ந்துள்ளேன். இவையெல்லாம் எனக்குப் புனிதமானவை, அதை மாற்ற யாருக்கும் உரிமை இல்லை. எனக்கு அவர் கொடுத்த பரிசுகள். நான் அவற்றைப் பிரசாதமாக ஏற்றுக்கொள்வேன். இதில் எதையாவது மாற்றுவது அவரது பிரசாதத்தை நிராகரித்து அதை வெளியே எறிந்து விடுவதாகும். அவ்வாறு நான் ஒருகாலும் செய்யமாட்டேன்' என்றார். எல்லா அடியார்களும் தங்கள் குருவுடன் ஏற்பட்ட சந்திப்புகளைப் பற்றி நினைப்பது இவ்வாறே. அதனால் தான் அச்சந்திப்புகளை தவறாக வெளியிடும் குற்றத்தைச் செய்ய நான் விரும்பவில்லை.

கேள்வி: ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்குப் போவோம். நீங்கள் எழுதியவர்கள் மேல் உங்களுக்கு உள்ள மரியாதை அவர்கள் வரலாற்றை உண்மையான முறையில் (உங்கள் உணர்ச்சிகளுக்கு சம்பந்தப்படாத வகையில்)பதிவு செய்வதற்கு தடையாக இருந்தது என்று நீங்கள் நினைத்ததுண்டா?

டேவிட்: லக்ஷ்மணஸ்வாமி, சாரதம்மா, அண்ணாமலை ஸ்வாமி, பாபாஜி இவர்களின் வரலாற்றை நான் எழுதியபோது அவர்கள் உயிருடன் இருந்தார்கள். விவரங்களைப் பற்றி எழுத அவர்களுடன் நெருக்கமாகப் பழகி, சேர்க்க வேண்டியதையும், நீக்கவேண்டியதற்குமான இறுதி உரிமையை ஒவ்வொருமுறையும் கொடுத்துள்ளேன். நான் அவர்கள் எல்லோர்மீதும் அளவுகடந்த மரியாதையும், உள்ளார்ந்த வியப்பும்

கொண்டிருந்தேன். அவர்களைப்பற்றித் தீர்ப்பு வழங்கும் ஒருவனாக அன்றி அவர்கள் வாழ்க்கை விவரங்களை வெளிக்கொணரும் ஒரு சாதனமாக என்னைக் கருதினேன். அவர்களுடைய வாழ்க்கை மற்றும் ஸாதனைகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டபோது, ஏற்பட்ட பணிவும் அச்சமும் கலந்த ஆச்சரியத்தை வெளியிடும் பொருட்டு என் எழுத்துத் திறமைகளை உபயோகித்தேன். அவை உயர்வு நவிற்சி கலந்த வரலாறுகளல்ல. ஏனென்றால் எனக்குக் கிடைத்த ஆதாரங்களை ஆய்ந்து, உறுதியும் செய்துகொள்ள என்னால் இயன்ற பரிபூரண முயற்சிகளைச் செய்தேன். ஆனால் அதே சமயமொரு விதத்தில் இப்புத்தகங்கள் எனக்கு ஒரு ஆராதனை போன்றது. இறைவனுக்கான காணிக்கை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். 'Nothing ever Happened' என்ற புத்தகத்தை நான் எழுதி முடித்ததும், கீழ்கண்ட துகாராமின் பாடலை நூன்முகத்தில் சேர்த்துள்ளேன்.

வார்த்தைகள் ஒன்றே
எனக்குள்ள அணிகள்
வார்த்தைகள் ஒன்றே
நான் அணியும் வஸ்திரம்
வார்த்தைகள் ஒன்றே
என் உயிரோட்டத்தின் உணவு
வார்த்தைகள் ஒன்றே
நான் மக்களுடன்
பகிர்ந்து கொள்ளும் செல்வம்
துகா (துகாராம்) சொல்கிறான்
வார்த்தையைப் பார் (witness)
அவன் இறைவன்
அவனை வணங்குகிறேன்
வார்த்தைகளால்

என் எழுத்துக்களைப் பற்றி இப்படித்தான் நான் உணர்கிறேன். பூமியில் இறைவனின் அவதார உருவங்களை நான் தொடுக்கும் வார்த்தைகளால் பூஜிக்கிறேன்.விவரங்களைக் கற்பித்தோ, அவைகளைத் தவிர்த்துவிட்டோ நான் ஆராதனை செய்வதில்லை. மோட்சம் அடைய வேண்டும் என்ற ஆர்வத்தையும் ரமண மஹர்ஷி மற்றும் அவர் வழிவந்த ஏனைய ஆசான்கள், அடியார்கள் பால் மரியாதையையும் படிப்பவர் மனத்தில் ஊறச்செய்யும் என்று தான் நம்புகின்ற உண்மையான, அதிகாரபூர்வமான, படிக்கத்தக்க விவரங்களைச் சேர்ப்பதற்கு என் அறிவை உபயோகிக்கிறேன்.

கேள்வி: ரமண மஹர்ஷியைப்பற்றி அதிகம் தெரியாத பலரிடையே, அவர் பேசுவது அரிதென்ற ஒரு ஆதாரமற்ற எண்ணம் உலவுகிறது.. இவர்கள் 'ரமணருடன் உரையாடல்கள்'(Talks with Ramana Maharshi) போன்ற பற்பல புத்தகங்களில் எழுதப்பட்டதைப் பார்க்கும்போது அப்புத்தகங்களின் உணமையைச் சந்தேகிக்கின்றனர். இவ்வுரையாடல்கள் உண்மையானவைதானா? இவற்றின் ஆதாரங்கள் எத்தனை நிஜமானவை?

டேவிட்: ரமண மஹர்ஷி அதிக நேரம் மௌனமாகவே இருந்தார். ஆனால் கேட்பதற்கு ஆன்மிகச் சம்பந்தமான கேள்வி ஒன்று உள்ளதாயின் மகிழ்ச்சியுடன் மிகவும் விரிவாகக்கூட பதிலளிப்பார். 'ரமணருடன் உரையாடல்கள்' என்று சிறிது முன் குறிப்பிட்டேன். அதை எடுத்துப்பார்ப்பவர் அவர் சதா பேசிக்கொண்டு இருப்பவர் என்ற முடிவுக்கு வரலாம் ஏனென்றாலதில் 600 பக்கங்களுக்கு மேலான உரையாடல்கள் இருக்கின்றன. ஆனால் அதிலுள்ள தேதிகளைப் பாருங்கள். அப்புத்தகம் 1930-களின் இறுதிப்பாகத்தில் நான்கு வருட காலத்தை விவரிக்கின்றது. அதனைச் சராசரியாகப் பகிர்ந்தால் ஒரு நாளைக்கு அரைப்பக்கம் என்றாகும். ஒவ்வொரு நாளும் 18 மணிநேரம் பொதுமக்களுக்குக் காட்சி தந்த ஒருவருக்கு இது அதிகப்படியான பேச்சு என்று ஆகாது.

ஸ்ரீ ரமணரின் வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் பற்றிய புத்தகங்கள் எவ்வளவு உணமையானவை என்ற கேள்வி சிறிது சிக்கலானது.. நேரத்தின் நிர்ப்பந்தம் இருப்பதால் ஒவ்வொரு புத்தகமாக விமர்சிப்பதைத் தவிர்க்கிறேன். ஸ்ரீ ரமணரின் காலத்திலேயே. உரையாடல்கள் தாங்கிய பல புத்தகங்கள் வெளிவந்தன. அவை எல்லாமே ஸ்ரீ ரமணராலேயே பார்வையிட்டு பதிப்பிக்கப்பட்டன. இவையாவன, Maharshi's Gospel, Spiritual Instructions, ஸ்ரீ ஸத்தர்ஷன பாஷ்யத்தின் முற்பகுதியான உரையாடல்கள். இந்தப் பட்டியலில் முருகனார் தமிழ்க் கவிதைகளாகப் பதிவு செய்த ஸ்ரீ ரமணரின் உபதேசங்களையும் சேர்க்கவேண்டும். இவை 'குருவாசகக் கோவை' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீ ரமணரின் முறையான அனுமதி பெற்றிருந்தாலும், வெளிவந்துள்ள உரையாடல்களில் அவை ஒரு சிறு பகுதியே ஆகும்.

ஸ்ரீ ரமணர் பேசியதை ஒருவரும் பதிவு செய்யவில்லை ஏனெனில் எந்த பதிவு செய்வதையும் அவர் மறுத்துவிட்டார். பல வருடங்கள் ஆசிரம நிர்வாகியும் ஸ்ரீ ரமணரின் முன்னிலையில் குறிப்புகள் எடுத்துக்கொள்வதைத் தடுத்து வந்தார். அதனால் உரையாடல்களில் பலவும் பல மணிநேரங்களுக்கு பின் ஞாபகத்திலிருந்து எழுதப்பட்டவை.

இவ்வகையில் சிற்சில தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் முக்கியமான தவறுகள் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவருடைய எழுத்துக்களிலும் அவர் காலத்தில் அவர் விமர்சித்த உரையாடல்கள் அடங்கிய சில புத்தகங்களிலும் ஸ்ரீ ரமணருடைய உபதேசங்கள் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. திருத்தப்படாத மற்ற நூல் தொகுதிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட உபதேச மொழிகளோடு ஒத்தே இருக்கின்றன.

## பாகம் 3

கேள்வி: வெவ்வேறு பக்தர்களின் கேள்விகளுக்கு மஹர்ஷியின் பதில்கள், எப்போதும் ஒன்றாக இருந்ததில்லை. ஏனென்றால் அவை கேள்விகளை அல்லாமல் கேள்விகேட்பவரின் மனநிலையை ஒட்டியிருந்தன என்று நீங்கள் எழுதியோ பதிப்பித்தோ உள்ள புத்தகங்கள் ஒன்றில் படித்த நினைவுள்ளது. ஞான விளக்கம் பெற்றவர்கள் போதிப்பதைப் பார்த்திருக்கும் உங்களுடைய சொந்த அனுபவத்தின் ஆதாரத்தைக் கொண்டு விளக்க முடியுமா?

டேவிட்: பத்து நபரை ஒரு பெரிய நகரத்தில் அங்குமிங்குமாக விட்டுவிட்டு, அவைகளை அண்மையிலுள்ளவர்களிடம் 'நகரத்தின் மையத்திற்கு போவதெப்படி?' என்று கேட்க வைத்தீர்களானால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான மார்க்கங்கள் சொல்லப்படும். சொல்லப்பட்டவை எல்லாம் சரியாகவே இருக்கும். வெவ்வேறு இடங்களிலிருந்து புறப்படுபவர்களுக்கு ஒரே சேருமிடத்தை அடைய வெவ்வேறு குறிப்புகள் தேவை.

ஒரு ஞானியின் அருகே அமர்ந்து 'ஞானம் பெற நான் செய்யவேண்டியது என்ன?' என்று நீங்கள் கேட்டால், அந்த ஆசானான ஞானி நீங்கள் ஆன்மிகப் பாதையில் எங்குள்ளீர்கள் என்றும் மேலும் வளர்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் உட்னே உணர்ந்து கொள்ள முடியும் . அவருடைய பதில் அவர்(அவள்) உங்கள் மனதில் என்ன பார்க்கின்றாரோ அதை ஒட்டியே இருக்குமே அல்லாது எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய ஒரு குறிப்பிட்ட சூத்திரத்தை ஒட்டி அல்ல. சில சிகிச்சைக்கான முகாம்களில் (கூட்டங்களில்) எல்லோருக்கும் கொடுக்கப்படுகின்ற சில பரிசோதித்து நிரூபிக்கப்பட்ட வழி முறைகள் உள்ளன. குடிப்பழக்கத்திலிருந்து மீட்பதற்காக 12-நிலை அணுகு முறை ஒரு நல்ல உதாரணமாகும். ஆனால் அறிவு விளக்கம் பெற்ற ஆசான்களிடம் அவ்விதமான அணுகு முறை காண முடியாது.

உங்கள் கேள்விக்கு அது ஒரு பதில். ஞானிகள் தம் எதிரிலுள்ளவர்களின்

மனநிலைக்குத் தக்க பதிலளிப்பார்கள். அது கேட்கும் கேள்விக்கு மட்டும் அல்ல. கண்ணியமான மரியாதை நிறைந்தது போல் தோன்றும் கேள்வியைக் கேட்கும் ஒருவன் தன் உண்மையான உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டிருக்கலாம். ஆசானைச் சோதிக்க முயன்று கொண்டிருக்கலாம். எரிச்சலுண்டாக்க முயன்று கொண்டிருக்கலாம் இன்னும் பல. அநேகமாக ஆசான் அந்த உள்ளுணர்வுகளுக்கே பதிலளிப்பார். கேள்விக்கு அல்ல. ஆசானுக்கு மட்டுமே மக்கள் மனதில் நடந்து கொண்டிருப்பதை அறிய முடியுமாதலால் கேட்டுக் கொண்டும் அல்லது கவனித்துக்கொண்டும் இருக்கும் மற்றவர்களுக்கு, பதில்களும், பிரதி உத்தரங்களும் குறிப்பிட்ட இலக்கற்றது போலவும் தன்னிச்சையாக அளித்தது போலவும் தோன்றும். ரமண மஹர்ஷி ஒரு முறை ரசனையுடன் ஒரு பாடலை மேற்கோள் காட்டினார். " ஞானியானவன சிரிப்பாலும் துக்கத்தாலும் பாதிக்கப்படாமலிருந்து கொண்டு ஹாஸ்யம் புரிபவருடன் கூடவே நகைப்பார், துக்கப்படுபவருடன் அழுவார்."

ஆசானுடன் உரையாடும் போது, உணர்ச்சிகளின் தன்மையை நிர்ணயிப்பது கேள்வி கேட்பவரின் மனநிலையாகும். சாதாரணமாக அமைதியாக இருப்பவரும் கோபம் கொள்ளாதவருமான ரமண மஹர்ஷி இருக்கையை விட்டுக் குதித்து எழுந்து அறையை விட்டு சிலரைத் துரத்தியது பற்றி குறிப்புகள் உள்ளன. ஏனென்றால் அவர்கள் மறை முகமான எண்ணத்துடன் , ஒரு கால் கோபத்துடன் அல்லது அவர்க்ளுடைய கருத்துக்களின் உயர்வைக் காட்டும் ஆசையுடன் வந்திருந்தார்கள் என்று அவர் தெரிந்து கொள்ள முடிந்தது...நன்றாக் மறைக்கப்பட்டிருந்ததால் மற்றவர்கள் இந்த ஆக்ரமிப்பைக் காண முடியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் அறிவு பூர்வமான ஆன்மிகக் கேள்வியைப் போல் தோன்றிய கேள்வியுடன் ஒரு பெண் பாபாஜியை நெருங்கினாள். அவர் கோபத்துடன் வெடித்து அவள் பாலியலில் மட்டும் விருப்பம் கொண்டவளென்று அவளை வெளியேறச் சொன்னார்.நாங்கள் எல்லோரும் அதிர்ச்சி அடைந்தோம். ஏனென்றால் அது தான் அவள் வந்த முதல் நாள். முதல் சந்திப்பு. அன்று பிற்பாடு அவளுடன் வந்திருந்த பெண்ணிடம் பேசினேன். மிகக் கடுமையான பதிலை அவள் தோழி எப்படி எடுத்துக்கொண்டாள் என்று கேட்டேன். அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள், " பாபாஜி அவ்வாறு நடந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி. ஓவ்வொரு வருடமும் இந்தியாவுக்கு வருகிறாள். வந்து புதிய ஆச்ரமம் ஒன்றிற்கு அங்குள்ள மஹானிடமும் அவர் உபதேசங்களிடமும் பெரும் ஆர்வமுள்ளதாக நடித்துகொண்டு செல்கிறாள். ஆனால் ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒரு சிஷ்யருடன் உறவு கொள்ள ஆரம்பிக்கிறாள். அவள் வருவதன் உண்மையான காரணம் அது தான். சில

மாதங்களுக்குப் பிறகு அவள் சலிப்படைந்து விட்டுவிடுகிறள். யாரோ ஒருவர் அவள் சொரூபத்தை முடிவாகக் கண்டு விட்டாரென்று நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். இவ்வாறான விசித்திரமான எண்ணிறந்த பிரதிபலிப்புகளை பல ஆசான்களிடம் பார்த்துள்ளேன். எல்லாமே மறைத்து வைத்த, எங்கள் ஒருவராலும் காண முடியாத எண்ணங்களாலும் ஆசைகளாலும் ஏற்பட்டவை.

ஒரு உண்மையான ஆசானின் எதிரே நீங்கள் அமரும் போது வேறு ஏதோ ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கும். மனத்தைச் சமனப்படுத்தி இதயத்திற்குப் பேரானந்தத்தைத் தரும் ஒரு அமைதி தன்னிச்சையாகப் பரவிக் கொண்டிருக்கும். உங்கள் இருவருக்குமிடையே நடந்து கொண்டிருக்கும் உரையாடலில் இவை யாவும் பதிவு செய்யப்படாது. அது மிகவும் பிரத்யேகமானது. நீங்கள் இருவர் மட்டுமே பங்கேற்கும் ரகசியம். வார்த்தைகள் பரிமாறப்படலாம். ஆனால் உண்மையான் செய்திப் பரிமாற்றம் பேச்சற்றது. இத்தகைய சமயங்களில் சில நிமிடங்களுக்கு முன் நீங்கள் எழுப்பிய வினாவை விட உங்கள் தற்காலிகமான மனோலயத்திற்குப் பதிலளித்துக்கொண்டிருப்பார்.ஆனால் வேறு யாருக்கு இது புரியும்?

என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து ஒரு உதாரணம் சொல்கிறேன். 1970களின் இறுதியில் பம்பாயின் வடக்குப் பகுதியில் வசித்த குஜராத்தைச் சேர்ந்த டாக்டர் பாய் என்ற பிரசித்தி மிக இல்லாத ஒரு ஆசானுடன் இருந்தேன். என் முதல் சந்திப்பில் நான் அவருடைய உபதேசங்களைப்பற்றிக் கேட்டேன். அவர்" உபதேசங்கள் என்று ஒன்றுமில்லை. மக்கள் கேள்விகள் கேட்பர். நான் பதில் அளிப்பேன். அவ்வளவு தான். என்று பதில் அளித்தார். நான் விடாது தொடர்ந்தேன். "யாரேனும் நான் அறிவு விளக்கம் பெறுவதெப்படி என்று கேட்டால் நீங்கள் அவர்களுக்கு என்ன சொல்வது வழக்கம்?" என்று கேட்டேன். "எது தக்கதோ அது" என்றார். இவ்வாறான இன்னும் சில கேள்விகளுக்குப் பின் உபதேசம் என்று ஒன்று அவருக்கு இருக்கும் என்று எண்ணும் பக்ஷத்தில் அவருடைய உபதேசங்களின் தக்கதொரு விளக்கம் பெற முடியாதென்று உணர்ந்து கொண்டேன். நான் இப்போது பேசிக்கொண்டிருந்த விஷயத்திற்கு இவர் ஒரு நல்ல உதாரணம். காண வந்தவருக்கெல்லாம்அளிக்கும் வகையில் கொள்கை அல்லது பயிற்சி என்று ஒன்றும் அவரிடம் இருக்கவில்லை. எல்லா கேள்விகளுக்கும் அவ்வப்போது பதிலளித்து வந்தார். நான் பத்து நிமிடங்கள் மௌனமாக அமர்ந்திருந்தேன். அப்போது காண வந்திருந்த வேறு இருவருடன் டாக்டர் பாய் குஜராத்தியில் பேசிக்கொண்டிருந்தார். அந்த சில நிமிடங்களில் மிக ஆழ்ந்த புரிந்து கொள்ள முடியாத, என்னை

ஸ்தம்பிக்கச் செய்த ஒரு அமைதியை உணர்ந்தேன்.

அவர் என்னை நோக்கிப் புன்னகைத்து "உங்கள் அடுத்த கேள்வி என்ன ?" என்றார். என்னால் பதிலளிக்க இயலாதென்று அவருக்குத் தெரியும். அவருடைய கேள்வி எங்களிடையே நடந்த தனிப்பட்ட ஒரு வேடிக்கையான விஷயம். அங்கிருந்த வேறு எவரும் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள். என் உடல் முழுதும் ஒரு 'நோவேகெயின்' மருந்தை உட்செலுத்தினது போல் உணர்நதேன். அசைய முடியாத பரவசமான நிலையில் நான் ஸ்தம்பித்துப் போனதால் அவருடைய சொல்லுக்கு என்னால் புன்னகை செய்யக் கூட முடியவில்லை. அவர் என்னை நோக்கிச் சொன்னார், "சரியான முறை என்று ஒன்றும் கிடையாது. சரியான முயற்சி தான் உண்டு. எந்த வழிமுறையைத் தேர்ந்தெடுத்தாலும் அதைப் போதுமான அளவு தீவிரமாக அனுசரித்தால் அதற்குப் பலன் கிடைக்கும். என்னுடைய போதனைகளைப் பற்றிக் கேட்டாய். இதோ இவை தான். ""பகுதி நேர சாதுக்கள் ஞானம் பெறுவதில்லை"".

ஒரு வகையில் பார்த்தால் இது ஒருவர் த்ன்னுடைய சாதனைக்காக கடினமாக உழைக்க வேண்டுமென்ற ஒரு செய்தியாகும் ஆனால் அதே சமயம் எனக்கு அங்கு ஏற்பட்ட அனுபவம் தெரிவித்தது என்னவெனில்; ஒரு ஆசானின் சக்தி வாய்ந்த சந்நிதானமே ஒரு முயற்சியுமின்றி மனதை.அமைதியடையச் செய்வது. ஒரு ஆசிரியர் மாணவர் சந்திப்பில் , அச்சந்திப்பைக் கண்டு கொண்டிருப்பவர்கள் தெரிந்து கொள்ளாத என்னென்னவோ பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. ஏறத்தாழ எனக்குத் தெரிந்த ஒவ்வொருவருக்கும் ஒரு உண்மையான ஆசானிடம் இருந்த போது இதே மாதிரியான முன்னும் பின்னுமாக, நிகழ்ந்து கொண்டிருக்கும் வார்த்தைகளுடன் சிறிதும் சம்பந்தமில்லாத அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. .

கேள்வி: ஒரு ஞானியின் அருகாமையில் கிடைக்கும் அமைதி என்று நீங்கள் எழுப்பிய கருத்து சுவாரஸ்யத்தைத் தருகிறது. சிலர் அன்னார் முன்னிலையில் ஏற்படுவது அமைதியைக் காட்டிலும் மகிழ்ச்சியும் உற்சாகமும் என்று கூறுகிறார்கள். நீங்கள் புரிந்து கொண்ட வகையில் அமைதியும் மகிழ்ச்சியும் சமமானவையா?

டேவிட்: ஆத்மாவின் தன்மையை ஸ்ரீ ரமணர் சில சமயங்களில் அமைதி என்றும் சில சமயங்களில் மகிழ்ச்சி என்றும் வர்ணித்துள்ளார். உங்களுடன் பேசுகையில் நான் இச்சொற்களை அதிகமாக உபயோகித்துள்ளேன். ஏனெனில் பெரும்பான்மையோரால் புரிந்து கொள்ள முடியும். சந்தோஷத்தையும் அல்லது அமைதியையும் ஏதோ ஒரு சமயத்தில்

அனுபவித்ததாகப் பலர் கூறுகின்றனர். ஆனால் ஸ்ரீ ரமணர் ஆன்மாவை மகிழ்ச்சி அல்லது அமைதி என்னும்போது குறிப்பிடுவது இதுவல்ல. அனுபவிப்பவர் என்று ஒருவரற்ற ஒரு நிலையை விவரிக்க முயன்று கொண்டிருக்கிறார். அந்த நிலையை வார்த்தைகளால் அறிவிக்க முடியாது. அந்த இறுதி நிலையின் தன்மையைக் குறிப்பதற்கு அவர் அடிக்கடி உபயோகித்த வார்த்தைகள் 'அமைதி', 'நிசப்தம்", 'சாந்தம்', மகிழ்ச்சி போன்றவை. உற்சாகமான அனுபவங்களென்றும் பரவசம் ஆனந்தம் பொன்ற உணர்வுகள் என்றும் நீங்கள் குறிப்பிடுவனவெல்லாம் இன்பகரமான மன நிலைகள். மனமே பூரணமாக அழிந்த பிறகு மிஞ்சி இருப்பதைப் பற்றி யதார்த்தமாக அறியக்கூடியவை அவைகள் அல்ல.

கேள்வி: மற்ற எல்லா குணநலங்களைக் காட்டிலும் வினயத்தையே ஸ்ரீ ரமணர் வலியுறுத்துவார். ஆனால் அதைப் பெறுவது மிகவும் கடினமானவைகளில் ஒன்று. உண்மையில், பணிவுடன் இருக்க முயன்றால் அனேகமாக அதற்கு நேரெதிரான விளைவே ஏற்படுகிறது. இந்த வகையில் ஒரு சாதகனுக்கு உதவக்கூடிய, உங்கள் ஆய்வு மற்றும் ஞானிகளுடன் ஏற்பட்ட சந்திப்புகளிலிருந்து அவர்களுடைய உபதேசங்களில் சிலவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

டேவிட்: மஹர்ஷி வினயத்தை உயர்வாக மதித்தாரென்பதை ஒப்புக்கொள்கிறேன். இயல்பான, தன்னிச்சையான பணிவு அவரிடம் குடிகொண்டிருந்தது. ஆன்ம எழுச்சிக்கு பணிவு மிகவும் அவசியம் என்று பல முறை வலியுறுத்தியுள்ளார். ஆனால் அதை எப்படி அனுஷ்டிப்பது? இது ஒரு சிக்கலான பிரசனை. ஏனென்றால் பணிவுடன் இருக்க முயல்வது அகம் கையாளும் வேறொரு மாதிரியான நடத்தை முறை. வேண்டுமென்றே செய்யப்பட்டால் அது உண்மையான பணிவல்ல.

ஸ்ரீ ரமணரின் நேர் சீடரான லக்ஷ்மண ஸ்வாமியும் பணிவின் உயர்வைப்பற்றி வலியுறுத்துகிறார். ஆத்மானுபூதி பெற பணிவு ஒன்றே போதுமானதென்றும் சில சமயம் கூறியுள்ளார். ஆனால் பணிவு என்பது "ஆத்மாவின் முன்பாக மனம் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதல்" என்று விவரிக்கிறார். என்னைப் பொறுத்தவரை இதுவே பணிவாகும். உள்ளிருக்கும் ஆத்மாவினிடம் எவ்வளவு மனம் பணிந்து விட்டதோ அந்த அளவு நீங்கள் பணிவுள்ளவர். மற்றவர்களிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் எதுவுமில்லை. அடங்கிய மனத்தின் வெளிப்பாடான உள்ளார்ந்த பணிவு இருக்குமாயின் வெளிப்புற நடத்தையிலும் உண்மையான பணிவு தெரிய வரும். பணிவு என்பது அகங்காரமின்மை. அகங்காரமின்மை மனத்தை அதன் மூலமான ஆத்மாவிடம் அடங்கிவிடச் செய்வதால் பெறப்படும்.

நான் சமீபத்தில் பதிப்பித்த ஸ்ரீ ரமண தர்சனம் என்ற புத்தகத்திலிருந்து சிறிது சொல்கிறேன். இது ஸ்ரீ ரமணர் வினயத்தின் அவசியம் பற்றிப் பேசியது. :-

"அழிவற்ற தன்மையை அளிக்கும் பணிவு என்னும் சக்தி கிடைத்தற்கரிய சக்திகளில் தலையாயது. கல்வி மற்றும் அது போன்ற பண்புகளால் விளையும் ஒரே நன்மை பணிவு ஒன்றே என்பதால் , அது ஒன்றே சாதுக்களின் உண்மையான அணிகலன். அது மற்ற எல்லா நற்பண்புகளுக்கும் இருப்பிடம். அதனால் அது புனிதமான இறை அருட்செல்வமாகச் சிறப்பிக்கப்படுகிறது. பொதுவாக அறிஞர்களுக்குப் பொருந்திய குணச் சித்திரமென்றாலும் குறிப்பாக சாதுக்களுக்கு இன்றியமையாதது."

விநய பாவமின்றி எவரும் பெருமை அடைவது இயலாத ஒன்றாகையால் , ஆன்மிக மார்க்கத்தைக் குறிக்கோளாக உடையவர்களுக்கென்றே நியமிக்கப்படுகிற 'யம', நியம' போன்ற எல்லா ஒழுக்க முறைகளும் விநயத்தைப் பெறுவதையே லக்ஷியமாகக் கொண்டுள்ளன. நிச்சயமாக, 'பணிவு", அகங்காரம் அழிந்ததற்கான அறிகுறி . இதனால் தங்களுக்குப் பொருத்தமான ஒழுக்க நியதியாக 'பணிவு' சாதுக்களாலேயெ சிறப்பிக்கப்படுகிறது.

மேலும் அருணாசலத்தில் வசிப்பவர்களுக்கு எல்லாவிதத்திலும் இன்றியமையாதது. கடவுள் ஸ்வரூபமான பிரம்மா, விஷ்ணு, தேவியும் கூட பணிவுடன் தணிந்து போகும் புண்ணிய பூமி அருணாசலம். அடங்காதவர்களைக்கூட பணியச் செய்யும் சக்தி அருணாசலத்திற்கு உள்ளதாதலால் அருணாசலத்தில் பணிவுடன் தாழ்ந்து போகாதவர்கள் வேறு எங்கேயும் இந்த ஈடேற்றும் பண்பைப் பெறமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலான அந்த ஈசன் இணையற்று மிஞுசப்படாமல் ஒளிர்கிறான் என்றால் அது தாழ்ந்தவனுக்கும் தாழ்ந்திருப்பதனால் தான். பணிவு என்கின்ற தெய்விகப் பண்பு முற்றும் சுதந்திரனான இறைவனுக்கே அவசியம் என்றால் அத்தகைய சுதந்திரமற்ற சாதுக்களுக்கு நிச்சயமாக இன்றியமையாதது என்று வலியுறுத்தவும் வேண்டுமா? ஆதலால் தங்கள் உள்ளடங்கிய வாழ்க்கையிலிருப்பது போல சாதுக்கள் வெளி வாழ்க்கையிலும் முழுமையான விநயத்தைப் பெற்றிருக்க வேண்டும். அடியார்களுக்கு மட்டும் பணிவு அவசியமென்பதில்லை. இறைவனுக்கே அது பிரத்யேகமான ஒரு பண்பு.

இச்சுருக்கத்தின் கடைசி ப்ர்ராவில் ஸ்ரீ ரமணர் கடவுள் கூட தன் சிறப்பைத் தனது பணிவால் பெறுகிறார் என்று குறிப்பிடுகிறார். இந்தக் க்ருத்தை வேறு ஆசான்கள் வெளியிட்டதை நான் கண்ட்தில்லை. அளவற்ற

சக்தியுடையவனாக இறைவனை நாம் எல்லொரும் கற்பனை செய்கிறோம். சிறிது விசித்திரமான முறையில் ஸ்ரீ ரமணர் இறைவன் பிரபஞ்சத்திலேயே மிகுந்த  பணிவுடையவனாதலால் தான், அவன் அப்பதவியைப் பெற்றானே அன்றி அவன் சக்தி வாய்ந்தவன் என்பதாலல்ல.  இதைப் பற்றி அவர் கூறிய கருத்துக்களாவன :-

ஒருவருடைய மஹிமை அவர் எவ்வளவு தாழ்மையுடன் இருக்கிறாரோ அந்த அளவுக்கு உயரும்.  பிரபஞ்சம் முழுதும் வணங்கும் அளவுக்கு இறைவன் பெருமை உடைத்தவனாக இருப்பதன் காரணம் ஏமாற்றப்பட்டு அடங்கிய ஆணவம் ஒரு போதும் எதிர்பாராமல் தலை தூக்காத ஒரு மேன்மை பொருந்திய பவ்யமான ஸ்திதி ஆகும். எல்லா உயிரினங்களுக்கும் எப்போதும் சேவை செய்யும் வகையில் மிகவும் பணிவுடன் நடப்பதாலல்லவோ உலக முழுதும் கொண்டாடும் ஆராதனைகளுக்கு இறைவன் உரித்தாகிறான்?  எல்லோரிடமும் தன்னையே கண்டு எல்லோரையும் வணங்கும் பக்தர்களிடமும் பணிவு காட்டி விநயத்தின் உச்சியிலேயே , தன்னைவிட அதிக பணிவுடன் இருப்பது இயலாத ஒன்றென்ற நிலையில் இயல்பாகவே இருப்பதால் இறைவனுக்கு அந்த உயர்ந்த ஸ்தானம் கிடைத்தது.

ப்ணிவென்பது ஆணவமின்மையே அன்றி இனிமையாக சமூகம் ஏற்கும் வகையில்  நடந்து கொள்வதல்ல என்று புரிந்துகொள்ளவில்லை எனின் இவையெல்லாம் விசித்திரமாகவே தோன்றும்.  இறைவன் இறைவனாக இருக்கிறான்.  அதற்குக் காரணம் முற்றும் ஆணவமற்றவன், பூரணமான பணிவுள்ளவன்.   சர்வ வல்லமையுள்ளவன் என்றோ எல்லாமறிந்தவன் என்பதாலோ அல்ல..

கேள்வி :  ரமண மஹர்ஷிக்கு பௌதிக குரு என்று ஒருவரும் இருந்ததில்லை. அதாவது மனித் வடிவில்.வெளியே குருவை நாடாமல் தம் உள்ளேயுள்ள குருவான ஆத்மாவையே சேர்ந்திருங்கள் என்று அவர் மக்களை ஊக்கப்படுத்தினார் என்பது சரியா?  மாறக ரமணரின் முன்னிலையில் ஆத்மானுபூதி பெற்ற அவருடைய நேர் சீடரான லக்ஷ்மண ஸ்வாமியோ, ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற ஒரு மனித குரு தேவை என்கிறாரே. இந்த முரண்படுவது போன்றுள்ள கருத்துக்களை விளக்க முடியுமா? இந்த பிரசினையைப் பற்றின உங்கள் சரியான அனுமானமென்ன?

டேவிட்:  ஸ்ரீ ரமணருக்கு மனித் உருவில் குரு இருந்ததில்லை. ஆனால் அருணாசலம் என்ற மலை தன்னுடைய குரு என்று அவர் குறிப்பிட்டதுண்டு. அவருடைய  பக்தி நிரம்பிய பாடலில் அருணாசலமே அவரது குரு, ஆன்மா, மற்றும் இறைவனென்கிறார். ஆகவே குரு மனித உருவில் இல்லை.  என்றாலும் அவருடைய குருவிற்கு ஒரு பௌதிக

வடிவம் உண்டு. ஆத்ம அனுபூதி அடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு குரு அவசியமென்று ஸ்ரீ ரமணர் சொல்லியுள்ளார். இவ்விஷயத்தைப் பற்றி பேசும் போது ஸாதகனுக்கு அறிவூட்டி அவன் முன்னேற்றத்தை மேற்பார்வையிட் ஆன்மா குருவின் உருவில் காணப்படும் என்று ஸ்ரீ ரமணர் சொல்வது வழக்கம். அதே சமயம் உள்ளுறையும் ஆன்மாவும் குருவேயாம். உள்ளே உறையும் ஆன்மா - அந்த உள்ளுறையும் குரு மனத்தைத் தனக்குள்ளே ஒடுக்கி அம்மனம் வேண்டிய அளவு முதிர்ச்சி அடைந்த பின் , மனத்தைப் பூரணமாக கரையச் செய்து விடுவார். உள்ளே உறையும் குரு, வெளியே உள்ள குரு இருவருமே அவ்வேலையைச் செய்து முடிக்கத் தேவைப் படுவர். நீங்கள் லக்ஷ்மண ஸ்வாமியை ஆத்மானுபூதியைப் பெற விரும்புபவர்களுக்கு ஒரு மனித குரு அவசியமானதென்று சொல்பவ்ராகக் குறிப்பிட்டீர்கள். அபூர்வமாக சிலருக்கு உள்ளேயுள்ள ஆன்மா ஒன்றே குருவாக இருந்து ஆன்ம எழுச்சியை உருவாக்க முடியுமென்றும் அவர் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. ரமண மஹா்ஷியை அவர் இந்த வகையில் சேர்க்கிறார். பெரும்பான்மையோருக்குப் பௌதிக குரு தேவை என்கிறார். ஸ்ரீ ரமணர் பல சந்தர்ப்பங்களில் சொல்லியுள்ளதிலிருந்து இது பெரிதும் வித்தியாசப்படுவதாக எனக்குத் தெரியவில்லை.

தென்னிந்தியாவின் சைவ சமயம் மூன்று வகையான ஆன்மிக நாட்டமுள்ளவர்களை விவரிக்கிறது. மிகப் பெரிதான முதல் வர்கத்தைச் சார்ந்தவர்களுக்கு பரிசுத்தமின்மையாலும் ஆன்மிக மேம்பாட்டிற்குத் தடைகள் பல இருப்பதாலும் ஒரு குரு தேவையாக இருக்கும். இரண்டாவது வகையினர் இதை விட மிக்க பரிசுத்தமானவர். அறிவு புகட்டி ஞான விளக்கம் தருவதற்கு குரு வடிவில் இறைவன் தோன்றுவதால் , இவர்கள் ஆத்மானுபூதி பெற முடியும். சைவ சமயத்திற்கு தற்போது ஓர் அங்கமான நூல்களையும் கதைகளையும் தந்தருளிய பல புராதன சைவக் குரவர்கள் இவ்வகையைச் சார்ந்தவர்.மிக உயர்ந்த வக்கையில் தன்னுள் இயங்கும் ஆத்மாவின் சக்தியாலேயே ஆத்ம சாக்ஷாத்காரம் பெரும் ஒரு சில அபூர்வமான ஆன்மாக்கள் உள்ளன.என்னுடைய கருத்தில் ஒரு மனித குருவின் உதவியின்றி ஆத்ம அனுபூதி பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவானது.

கேள்வி: தற்காலத்தில் இறைவனிடமோ குருவிடமோ சரண் அடைவது வெகு அரிது. உங்கள் வாழ்க்கையில் பல முறை சரண் அடைந்தே தீர வேண்டியிருந்தது என்று நீங்கள் கூறியுள்ளீர்கள்.உங்கள் வாழ்க்கையிலிருந்து விதிக்கு அடி பணியும் உணர்வை விளக்கக்கூடிய

சில சம்பவங்களைக் கூற முடியுமா?

டேவிட்: நம் வாழ்க்கை நம் கையிலுள்ளதென்றும் , நம்முடைய நலத்திற்கும் நம்மைச் சார்ந்தோரின் நலத்திற்கும் நாமே பொறுப்பென்றும் நாமெல்லோரும் நினைக்கின்றோம். இறைவன் தான் உலகத்தை இயக்குபவன், எல்லாமே அவன் செயல் என்று ஒரு வாதத்திற்காக ஒப்புக்கொள்கிறோம். ஆனாலும் அதனால் நாம் திட்டமிடுதல், வழி வகுத்தல், செயல் படுதல் ஆகியவைகளை நிறுத்துவதில்லை.. சில சமயம் நம்மால் கட்டுப்படுத்த இயலாத ஒன்றைக் காண்கிறோம். சிறந்த மருத்துவ சிகிச்சை இருந்தும் ஒரு குழந்தை புற்று நோயால் இறக்கப் போகையில் - கடவுளை நினைத்து தெய்வத்தின் உதவியை நாடுகிறோம். இது சரணாகதி அல்ல. இது வெறும் , அதிகமாகச் செயல் படுதல். இது, வழக்கமாகச் செய்யக்கூடிய எல்லா முறைகளும் தோற்ற பின் வேறு புதிய உபாயத்தைத் தேடுவதாகும்.

சரணடைதல் வேறானது. அது, நாளின் ஒவ்வொரு நிமிஷமும் இறைவனே இந்த உலகத்தை நடத்திச் செல்கிறான் என்றும் அவன் தேவைப்பட்ட போது தேடிக்கொள்ளும் ஒரு உபரியான ஸாதனமல்ல என்றும் ஒப்புக்கொள்வது. சரண் புகுதல், நிலைமை வேறு விதமாக இருக்க வேண்டுமென்று கேட்பதல்ல. எவ்வாறுள்ளதோ அதை ஏற்றுக்கொண்து நன்றி செலுத்துதலே ஆகும். அது பல்லை கடித்துகொண்டு இருக்கும் கடுமையான பொறுமையுமல்ல. இறைவன் நிர்வாகதில் , அது எத்தன்மைத்தாயினும் ஆனந்தத்தை அனுபவிப்பது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு "Thank you God" என்ற கிறித்துவ புத்தகத்தைப் படித்தேன். அதிலிருந்த அடிபடை விஷயம் என்னவெனில் , தற்போதுள்ள நிலைமைக்காகவே தொடார்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டுமேய்ன்றி அது வேறு விதமாக இருக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கக் கூடாது. அதாவது உன் வாழ்வில் நடக்கும் எல்லா பயங்கரமான சம்பவங்களுக்காகவும் நன்றி செலுத்த வேண்டும்; நடைபெறும் நல்ல விஷயங்களுக்காக மட்டும் நன்றி கூறுவதல்ல என்று பொருள். இது வெறும் வாய் வார்த்தையாக மட்டும் இருக்கக் கூடாது. "இறைவனே நன்றி உமக்கு" என்று நன்றியின் ஜ்வலிப்பை உணரும் வரை திரும்பத் திரும்பத் தனக்குத் தானே கூறீகொண்டிருக்க வேண்டும். இது நடக்கும் போது எதிர்பாராத குறிப்பிடாத்தக்க விளைவுகள் உண்டாகும். உதாரணம் ஒன்று சொல்கிறேன்.

அப்புத்தகத்தில் ஒரு பெண்ணைப் பற்றி விவரித்திருந்தது. அவள் கணவன் ஒரு குடிகாரன். உள்ளூர் மாதா கோயிலில் (church) அம்மனிதனைக் குடிப் பழக்கத்திலிருந்து மீட்கும்படி இறைவனை

எல்லோரும் வேண்டிக்கொள்வதற்காக  அப்பெண்  பிரார்த்தனைக் கூட்டங்களை ஏற்படுத்தியிருந்தாள். பயனொன்றும் இருக்கவில்லை. பின்பு, (Thank you God) "இறைவா நன்றி" என்பதைக் கேள்வியுற்றாள். "வேறு எந்த உபாயமும் பயனளிக்கவில்லை. நான் இதை முயன்று பார்க்கிறேன்" என்று எண்ணினாள். "என் கனவாஇக் குடிகாரனாகச் செய்ததற்கு உனக்கு நன்றி இறைவா" என்று துவங்கி, தன் உள் மனத்தில் உண்மையாகவே  நன்றி உணர்ச்சியைப் பெற ஆரம்பிக்கும் வரை தொடார்ந்து சொல்லிக்கொண்டிருந்தாள். அதன் பின் சீக்கிரமே தன்னிச்சையாக அவள் கணவன் குடிப்பதை நிறுத்தி விட்டான்.  பின்பு ம்துவைத் தொடவே இல்லை.இது தான் சரணடைத்ல். " மன்னித்துக்கொள்ளுங்கள் இறைவா ஆனால் உம்மைவிட எனக்கு நன்றாகத் தெரியும் .  ஆகவே இவ்விதம் நடக்குமாறு செய்யுங்கள் " என்று சொல்வதல்ல.  "உலகம் உன்னிசசை போல் நட்க்கிறது.அதற்கு நான் நன்றி சொல்கிறேன்" என்று ஒப்புக்கொள்வதாகும்.

உங்கள் வாழ்க்கையிலும் இது நடக்கும் பொழுது உங்களைச் சுற்றிலும் அதிசயங்கள் போன்றவை நடை பெற ஆரம்பிக்கும்.  உங்கள் சரணாகதியின் சக்தி , உங்கள் சுயமான நன்றி உணர்ச்சி உங்களைச் சுற்றிலும்  மாற்றங்களை ஏற்படுத்தும்.  நான் இதை முதலில் படித்தவுடன் :"இது விநோதமாக உள்ளது,ஆனாலும் நடக்கக்கூடும் முயன்று பார்க்கலாம்" என்று நினைத்தேன்.  அச்சமயம் வியாபாரம் செய்ய முயன்று கொண்டிருந்த நான்கைந்து பேர்களுடன்  எனக்குப் பிரசனைகள் இருந்தன.  தினமும் ஞாபகம் ஊட்டியும் கூட அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தபடி செயலாற்றவில்லை.  "இந்த வேலையைச் செய்யாததற்காக , Mr. X  உங்களுக்கு நன்றி;  Mr.Y முன்பு நீங்கள் வியாபார விஷயமாக  என்னை ஏமாற்ற முயன்றதற்காக நன்றி"  என்று நான் சொல்ல ஆரம்பித்தேன். சுமார் இரண்டு மணி நேரம்  இவர்கள் பால் இறுதியில் அழுத்தமான நன்றி உணர்ச்சி  உண்டாகும் வரை இவ்வாறு செய்தேன்.  அவர்கள் உருவம் மனதில் தோன்றியபோது அவர்கள்ள்ள்ளால் நான் அனுபவித்த  ஏமாற்றங்கள் என் நினைவுக்கு வரவில்ல.  அவர்கள் பால் நன்றியையும், அவர்களை ஏற்றுக்கொள்ளும் எண்ணத்தையுமே நான் உணர்ந்தேன்.

ம்று நாள் காலை நான் வேலைக்குச் சென்ற பொழுது இவர்கள் எல்லோரும் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.  வழக்கமாக நான் தான் அவர்களைத் தேடிச் சென்று அவர்கள் கூறும் நொண்டிச் சாக்குகளைக் கேட்க வேண்டியிருந்தது.  அவர்கள் எல்லோரும் புன்னகையுடன் இருந்தனர்.  நான் பல நாட்களாக அவர்களைத் தொந்தரவு செய்து கேட்டுககொண்டிருந்த எல்லா வேலைகளையும்

செய்து முடித்திருந்தனர். அன்புடன் ஏற்றுக்கொள்ளும் சக்திக்கு இது ஒரு அதிசயிக்கத்தக்க சான்று. ":செய்கை-செய்கை" என்று உலகத்தில் எல்லோரையும் போல் நான் இன்னும் கட்டுண்டுள்ளேன். ஆனால் நான் தவறாகக் கணித்த செயல்கள் அடக்க முடியாத குழப்பத்தை ஏற்படுத்தும் போது பிரசனையைத் தீர்க்க "நான் ஏதாவது செய்ய வேண்டும்" என்ற என் எண்ணத்தை விடுத்து, நான் உண்டாக்கிய குழப்பங்கலுக்காக கடவுளுக்கு நன்றி கூற ஆரம்பிப்பேன். மிகவும் சிக்கலான பிரசனையையும் தீர்ப்பதற்கு அனேகமாக இவ்வாறு சில நிமிடங்களே போதுமானதாக இருக்கும்.

நான் பதினாறு வயதினனாக இருக்கும் போது ஒரு வித விமான மூலம் ஆகயத்தில் ஊர்ந்து செல்லும் (glide) முறையைக் கற்றுக் கொள்ளலானேன். முதல் முறை செலுத்தும் போது , கருவிகளை கையாளுகையில், விமானம் அங்கும் இங்கும் ஆடிகொண்டிருந்தது. ஏனெனறால் இயந்திரத்தின் சிறிய ஏற்ற இறக்கத்திற்கும் நான் பிரதிபலித்துக்கொண்டு, அல்லது அதிகமாகவே கவனித்துச் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். இறுதியில், சொல்லிக் கொடுப்பவர் , ஓட்டும் கருவிகளை என்னிடமிருந்து எடுத்துகொண்டு "இதைக் கவனி" என்று விமானத்தை ஒரு நிலையான ஓட்டத்தில் செலுத்தி கருவிகளை மையமான இடத்தில் நிலையாக வைத்து விட்டார். விமானம், அதிர்வே இல்லாமல், கருவிகள் மேல் யார் கைகளும் இல்லாமல் தானே பறந்தது. என்னுடைய எல்லா முயற்சிகளும் விமானத்தின் இயல்பான பறக்கும் சக்தியை எதிர்த்துக் கொண்டிருந்தது! நம் எல்லோருடெளய வாழ்க்கையும் இது போலவே தான். நாம் ஏதோ செய்ய வேண்டுமென்ற நினைப்பில் விடாப்பிடியாக இருக்கிறோம். ஆனால் நாம் செய்வதெல்லாம் பிரசனைகளையே உருவாக்குகின்றன.

வாழ்க்கையைச் செலுத்தும் பொறிளை விட்டு என் கைகளை எடுத்து விட்டு இறைவனையே என் வாழ்க்கையை ஓட்டுமாறு செய்யக் கற்றுக்கொண்டதாக நான் சொல்லவில்லை. பிரசனைகள்(எல்லாம் நானே ஏற்படுத்திகொண்டவை) திடீரென்று தோன்றும் போது , வேடிக்கையாக இவை எல்லம் ஞாபகத்திற்கு வரும். உதாரணமாக, இரு வாரங்களுக்கு முன், சிறிதும் தீர்வு காண முடியாது போன்றிருந்த , ஒரு பிரசுரம் பற்றிய நாடகத்தின் நடுவில் மாட்டிக்கொண்டேன். து மிகப் பெரிய குழப்பமாகி , சம்பந்தப்பட்டவர்களுடன் நான் பேசக் கூட முயலவில்லை. மாறக ஸ்ரீ ரமணரின் சமாதிக்குச் சென்று எழுதியவற்றை அதன் எதிரில் வைத்து என்ன நடந்ததென்று விவரித்தேன். அந்நாடகத்திற்காக அவருக்கு நன்றி செலுத்திவிட்டு , "இது உங்கள் பொறுப்பு; என்னுடையதல்ல." என்றும் சொன்னேன்.

இதைச் சொல்லும் போது நான் கண்களை மூடிக் கொண்டேன். நான் கண்களைத் திறந்த போது ஒரு பழைய நண்பர் அங்கு சாக்லெட் கலந்த பிஸ்கட்டுகளை எனக்குக் கொடுக்க வைத்துக் கொண்டிருந்தார். இதற்கு முன் இது எப்போதும் நடக்காத ஒன்று. நான் அதை ஸ்ரீ ரமணரின் பிரசாதமாக எடுத்துக்கொண்டேன். பின்பு அன்று ஐந்தே நிமிடங்களில் அப்பிரசனை தீர்வடைந்தது. ஆதரித்தவர்கள் எல்லோரும் ( முதல் நாள் மாற்றமுடியாத எதிர்ப்பைத் தெரிவித்தவர்கள்) ஒன்று சேர , நல்ல விதமாக வெகு சீக்கிரமாக வேலை பூர்த்தியாயிற்று.

கேள்வி: நீங்கள் கூறிய உதாரணங்களிலிருந்து , (எல்லா உதாரணங்களும் விரும்பத்தக்க முடிவுகளுக்கு வழி காட்டின). நாம் விரும்பும் விதமாகவே காரியங்கள் நடக்க வேண்டுமாயின்கடவுளிடம் விட்டு விடும் இந்த தந்திரத்தைப் பின்பற்றலாமென்று, ஒரு வேளை,தவறாக முடிவு செய்யலாமென்று நான் நினைக்கிறேன். நீங்கள் குறிப்பிட்டது அது அல்ல தான். நீங்கள் விவரித்த அந்நிலையில் எந்த விதத்தில் எண்ணீயது நடக்குமென்று தேர்ந்தெடுக்கும் உரிமை உண்மையாகவே கிடையாது. சரி தான்?

டேவிட்: ஆம். எப்படி நடக்கின்றதோ அதற்காக நன்றியுடன் இருப்பது தான் குறிக்கோள். அது நாம் விரும்புவதைப் பெறுவதற்கான தந்திரம் அன்று. நடப்பன நன்றாக இருப்பின் அது தானாகக் கிடைத்த ஒரு பக்க பயன், சரணாகதியின் முக்கிய நோக்கம் அது அல்ல. சரணாகதியே நமது நோக்கம் ; அதுவே முடிவாகும். சரணடைதலைப் பற்றி வினவிய ஒரு பக்தருக்கு ஸ்ரீ ரமணர் அளித்த இரு பதில்களை நான் படித்துக் காட்டுகிறேன். Day by day with Bhagavan என்ற புத்தகத்தில் 1940களில் தேவராஜ முதலியாரால் குறித்து வைக்கபட்டவை.

கேள்வி: பூரண சரணாகதிக்கு, மோக்ஷத்திற்கும் இறைவனுக்காகவும் கூட ஆசைப்படக் கூடாது என்பது அவசியமா?

டேவிட்: பூரண சரணாகதிக்கு உனக்கென்று ஒரு விருப்பமும் கிடையாது என்பது அவசியம் தேவைப் படுகிறது. இறைவன் எதைக் கொடுப்பினும் நீ திருப்தி அடைய வேண்டும். அப்படியென்றால் உனக்கென்று ஆசைகளே இல்லாமை.

கேள்வி: புரிந்து கொண்டேன். அதனால் என்ன முயற்சிகளால் சரணாகதியை நிறைவேற்ற முடியுமென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

டேவிட்: இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, "நான்" என்பதின் மூலஸ்தானத்தை தெரிந்து கொள்ள முயன்று அதில் லயித்து விடுவது. மற்றொன்று "நான்

தனியாக ஏதும் செய்ய முடியாது. இறைவன் ஒருவனே சக்தி வாய்ந்தவன். அவனைப் பரிபூரணமாக சரணடைவதன்றி வேறு கதி ஒன்றும் எனக்கில்லை" என்று உணர்வது. இந்த முறையின்படி சிறிது சிறிதாக இறைவன் ஒருவனே உளன், அகந்தை ஒரு கணக்கில்லை; என்ற திட நம்பிக்கை ஏற்படும். இரு வழிகளும் ஒரே இலக்கை நோக்கிச் செல்வன. பரிபூரண சரணாகதி "ஞானம்". "மோக்ஷம்" என்பனவற்றிற்கு வேறு பெயர்கள்.

முதல் பதிலில் ஸ்ரீ ரமணர், இறைவன் அளித்தவற்றை திருப்தியுடன் ஏற்று, நமது வாழ்க்கை வேறு விதமாக அமைவதற்கான எந்தத் தனி விருப்பமும் இன்றி இருப்பதே உண்மையான சரணாகதி என்கிறார். இரண்டாவது பதிலில், இந்த இலக்கை நோக்கி நிதானமாகச் செல்லலாம் என்கிறார். யாராலும் தம் எண்ணங்கள், கருத்துக்கள், விருப்பங்கள் மற்றும் பொறுப்புகளை உடனே துறந்து விட முடியாதென்று. ஸ்ரீ ரமணருக்குத் தெரிந்திருந்தது. அதனால் படிப்படியாகச் செயல் படுமாறு தம் பக்தர்களை ஊக்கப் படுத்தினாரென்று நான் நினைக்கிறேன். நம்முடையது என்று நாம் நம்பும் மிகச் சிறிய பொறுப்புகளில் சிலவற்றை இறைவனிடம் விட்டுவிடுவதென்று சரண் புகும் பாதையில் அடி வைக்கலாம். அவற்றைச் சரிவர இறைவன் நிறைவேற்றிவிட்டான் என்றுணர்ந்ததும் அவர் மேல் நம்பிக்கை வளர்ந்து, நம் வாழ்க்கையை மேலும் மேலும் அவரிடாம் ஒப்படைக்க தைரியம் பெறுவோம் நான் மேற்கூறிய விவரங்கள் சரணாகதியின் இந்தக் கட்டத்தைச் சேர்ந்தவை.

சில சமயம், ஸ்ரீ ரமணர் பக்தர்களை, தங்கள் எல்லா பிரச்சனைகளையும் தம்மிடம் விட்டுவிடுமாறு ஊக்கப்படுத்தினார். அதாவது, அவற்றைப் பற்றி அவரிடம் விவரித்து விட்டு பின்பு மறந்துவிடும்படி. அவர் எப்போதும் கூறும் உருவகம்- ரயில் பிரயாணி ஒருவன் தன் சுமையைக் கீழே வைத்துவிட்டு ஓய்வடைவதை விடுத்து மூட்டையைத் தன் தலை மேலேயே தான் வைத்துக் கொள்வேன் என்று பிடிவாதமாக இருப்பது போல என்பது. இதன் கருத்து என்னவெனின், இறைவ்ன் இந்த உலகத்தை நடத்தி, அதன் செயல்களையும் பிரச்சனைகளையும் கவனித்துக் கொள்கிறான். நம் தலை மீது அப்பிரச்சனைகளில் சிலவற்றைச் சுமப்பதால் நாம் அனாவசியமான துன்பத்தை நம்மீதே திணித்துக்கொள்கிறோம். இந்தப் பூமியில் நம் வாழ்க்கை என்ற ரயிலை இறைவன் ஓட்டுகிறான் என்று ஸ்ரீ ரமணர் சொல்கிறார். இறைவன் நாம் போக வேண்டிய இட்த்திற்கு அழைத்துச் செல்கிறான் என்றுணரந்து தலையிடாமல் , சுகமாக அமர்ந்து கொண்டு பயணிக்கலாம். அல்லது, நாம் தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பானவர்கள் என்று எண்ணி, நூறு பவுண்டு கனத்தைத் தலையில் சுமந்து கொண்டு ரயிலின்

உட்பாதைகளில் மேலும் கீழுமாக உலவலாம். அது நம் விருப்பம்!!

பக்தர்கள் தங்கள் துன்பங்களை ஸ்ரீ ரமணரிடம் ஒப்புவித்தது இறைவனிடம் சரண் புகுந்தது போலத்தான். அதே தெய்விகச் சக்திக்கு அவர்கள் அடிபணிந்தனர். அதே சக்தியின் உயிருள்ள அவதாரத்தை அவர்கள் சரணடைந்தனர். இவ்விஷயத்தைக் குறித்து ஸ்ரீ ரமணர் குறிப்பிட்டுள்ளவை இவை:- நான் தற்போது எழுதிக்கொண்டுள்ள புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டன. ஒவ்வொரு வாக்கியமும் முருகனாரால்[10] தமிழ்ப் பாக்கள் வடிவத்தில் முதலில் பதிவு செய்யப்பட்டது.

1. ஒரு சக்கரவர்த்தியின் குழந்தைகள் போல என் பக்தர்கள் அபரிமிதமாக மகிழ்ச்சியில் திளைக்கத் தகுதியுள்ளவர்கள்.

2. உலக நாடகத்தை விடுத்து உன்னுள்ளுறையும் ஆன்மாவைத்தேடு. உள்ளுறைந்து நான் உன்னை ஒரு தீங்கும் அணுகாவண்ணம் காப்பாற்றுவேன்.

3. விசாரத்தின் மூலம் உள்ளுறையும் என்னை அறிவாயானால் அந்நிலையில் உலகத்தைப் பற்றின கவலை உனக்கிராது.

4. எரிக்கும் சம்சாரம் என்னும் கொடிய நோய் தீர்வதற்கு சரியான முறை உன் எல்லாச் சுமைகளையும் என்னிடம் ஒப்படைத்து விடுதல்.

5. உன் அனாவசியமான கவலைகள் முடிவடைய அருளையே பூரணமாக நம்பும் தீரச்செயலால் உன் சுமைகள் என் மேல் வைக்கப்பட்டன என்று நிச்சயப்படுத்திக்கொள்.

6. உன் பொறுப்புக்களை சம்பூர்ணமாக என்னிடம் ஒப்படைத்தால் நான் அவை என்னுடையவை என்று ஏற்றுக்கொண்டு நிர்வகிப்பேன்.

7. எல்லாச் சுமைகளையும் தாங்குதல் என் பொறுப்பென்றான பின் உனக்குக் கவலைகள் எதற்காக?

8. என்னிடம் உன் உடல், பொருள், ஆவியை எப்போதோ என்னுடையதெனக் கொடுத்தவிட்டாய். பின் எதற்காக இன்னும்

---

[10] ஸ்ரீ ரமணரின் சீடர்களில் மிகவும் மதிக்கபட்டவரும், நெருங்கியவரும் ஆவர், அவரது உணர்ச்சி பூர்வமான வாழ்க்கை வரலாறு, டேவிடின், புத்தகமான, The Power of Presence- Part Two வில் உள்ளது

இவற்றை "நான்", "எனது" என்று கருதி உன்னை அவற்றுடன் சம்பந்தப்படுத்திக் கொள்கிறாய்?

9. உன் இதயத்துள் என் அருளை நாடு. உன் இருளை அகற்றி ஒளியைக் காட்டுவேன். இது என் பொறுப்பு.

"பகவானின் உறுதி மொழிகள்" என்று நான் தலைப்பிட்ட பிரிவில் இப்பாடல்கள் வருகின்றன. பக்தர்கள் பூரணமாக அவரிடம் சரணடைந்த போது அவர்கள் வாழ்க்கையை அவர்களுக்காகச் சமாளிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். ஏறத்தாழ எல்லோருமே, தன் வாழ்க்கைப் பொறுப்பென்னும் சுமையை ஸ்ரீ ரமணரிடம் விட்டுவிட்டால் பிரசனைகள் குறைந்தன அல்லது பூரணமாகத் தீர்ந்து விட்டன என்று புரிந்து கொண்டனர்.

குருவானவர் முக்கியமாக உண்மைகளைப் போதிக்கவும், தனது சிஷ்யர்களுக்கு அருள் புரியவும், தன்னிடம் வரும் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு மோக்ஷம் அளிப்பதற்குமே இருக்கின்றார். ஆனால் பக்தர்களின் வாழ்க்கை விவகாரங்களை அவர்களை விடச் சிறந்த முறையில் நிர்வகிக்கும் நல்ல உபசெயலும் அவருக்கு உண்டு.

கேள்வி: மானிட வடிவில், பற்றற்ற தன்மைக்கு ஒரு சிறந்த உதாரணமாக ஸ்ரீ ரமணர் இருந்தார். ஆனால் அவருக்கு ஒன்றின் மேல் பற்று என்று உண்டானால் அது அருணாசலமென்று சொல்லப்படுகிறது. சிறு வயதில் அருணாசலத்தை அடைந்தவர் அங்கிருந்து ஏன் அகலவேயில்லை என்று உங்களால் விளக்க முடியுமா?

டேவிட்: அதனைப் பற்றிய குறிப்புகள் கிடைத்த காலம் தொட்டு அருணசலம் ஒரு ஆன்மிகக் காந்தக்கல் பொன்றிருந்துள்ளது. குறைந்தது 1500 ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாகவே பல சாதுக்களும் யோகிகளும் ஆன்மிக நாட்டமுள்ளவர்களும் அருணாசலத்தின் அழைப்பை உணர்ந்துள்ளார்கள். இனம் புரியாத ஒரு சக்தி மக்களை ஆகர்ஷித்து இங்கேயே இருக்க வைக்கின்றது. இதை நோக்கின் இந்த இடத்தின் ஆகர்ஷணத்தை உணர்ந்தவர் மிகவும் பெயர் பெற்ற அண்மைக் காலத்து ஞானியான ஸ்ரீ ரமண மஹர்ஷியாவர். அவர் மிகச் சிறியவனாக இருந்த போது அருணாசலம் என்ற சொல் இறைவனைக் குறிக்கும் அல்லது தெய்விகம் நிறைந்தது என்ற உள்ளுணர்வு அவருக்கு இருந்தது. ஆனால் அதே சமயம் அவர் நேரில் சென்று காணக்கூடிய் ஒரிடமென்று அவருக்குத் தெரியவில்லை. இளைஞராகும் வரை அவர் இதைத் தெரிந்துகொள்ள வில்லை. தனது பதினாறாவது வயதில் ஆத்மானுபூதி பெற்ற சில வாரங்களுக்குப் பின்னர் அவர் வீட்டை விட்டு வெளியேறி

அருணாசலத்தை அடைந்து தனது வாழ்நாள் முழுவதும் அங்கிருந்தார்.

ஏன் இந்த இடம்? அவருக்கு அதுவே அவருடைய பிதா, குரு , தெய்வமான சிவன். ஒரு மலை இவ்வாறெல்லாம் இருக்க முடியுமென்பது அதிசயமாகத் தோன்றும். ஆனால் அருணாசலத்தை இக்கண்ணோட்டத்தில் பார்த்தது ஸ்ரீ ரமணர் மட்டுமல்ல. சில நூற்றாண்டுகளுக்கு முன் அவ்வூரைச்சார்ந்த குரு நமசிவாயரென்ற புகழ் மிக்க மஹான் எழுதியது இது தான்.:

"ஆன்மிக அறியாமை என்ற இரவைத் துரத்தும் மலை
பக்தர்களுக்கு உண்மை ஞானத்தின் விளக்காய் விளங்கும் மலை
பேரறிவாய் உரு எடுத்த மலை, வெறும் நாயேன் என்னிடம்
த்ந்தை தாய் சத்குருவாய் வந்த மலை ,அண்ணாமலை"

அண்ணாமலை என்பது அம்மலைக்கு உள்ளூரில் வழங்கும் தமிழ்ப் பெயர். பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட அருணாசல புராணமென்ற தமிழ் நூல் இந்த இடத்தின் புனிதத்தைப் பற்றி சொல்வது இது தான்:-. முதலில் அங்கிருந்தவர்களிலிருந்து , தொடர்ந்து இன்று வரை, அருணாசலத்தை எண்ணங்களில் இருத்திக் கொள்வ்தன் மூலம், அதன் புகழை அன்பொடு பேசுவதனால், அதைப்பற்றிக் கேட்பதால், பின்பு அதைக் கண்ணாறக் காண வருவதால், மலையைச் சுற்றி நடந்து தூய்மையுடன் பிரதக்ஷிணம்[11] செய்வதால், அங்கு வாழ்வதால், உண்மையைக் கடைப்பிடித்துக் கொண்டு இருப்பதால், அதன் அகன்ற நீர் நிலைகளில் குளிப்பதால், செம்மையான செயல்களைச் செய்து கொண்டிருப்பதால், ஆலயத்தில் புனித சேவைகளைப் புரிவதால் , அச்சுடரொளியின் பாதங்களில் வணங்குவதால், நிரந்தரமான அழிவற்ற முக்தி நிலையை அடைந்தவர்கள் எண்ணற்றவர். அது தான் இந்த ஸ்தலத்தின் பாரம்பரியம். அருணாசலம் தன் வரலாறு முழுவதும் ஆர்வமுள்ள சாதகர்களை ஆகர்ஷித்து முக்தி அளித்துள்ளது. ஆனாலும் அதிசயமாக, இந்தியாவிலும் கூட யாரும் சரியாக அறியாத ஒன்றாயுள்ளது.

அருணாசலம் சிவனின் அவதாரமாகவே எப்போதும் மதிக்கப்பட்டுள்ளது. அவனுடைய அடையாளமான பிரநிதியாகவோ அல்லது அவனுடைய உறைவிடமாகவோ அல்ல. மலையே சிவனுடைய பரிபூரண சக்தியும் அதிகாரமுமுள்ள ஒரு லிங்கம். இப்படித்தான் கோடிகணக்கான தென்னிந்தியர்கள் நம்புகிறார்கள். அவர்கள் நம்பிக்கை ஆதரிக்கப்பட்டு,

---

[11] ஒரு புனிதமான உருவையோ , கோயிலையோ சுற்றி , எப்போதும் அதனைத் தன் வலப்பக்கமாகவே இருக்கச் செய்துகொண்டு வலம் வருவது பிரதக்ஷிணம் எனப்படும்

மலையின் சக்தியே தங்கள் ஆன்ம முக்திக்குக் காரணமாயிருந்ததென்று கூறிச்சென்ற பல பெருமை மிக்க மஹான்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ரமண மஹர்ஷி அவர்களுள் ஒருவர். அருணாசலமே அவருடைய குரு என்றும் அருணாசலமே ஆத்மானுபூதியைப் பெற ஏதுவாயிருந்தது என்றும் மிகவும் தீர்மானமாக தெரிவித்திருந்தார். இவ்வாறிருக்க, தன் எஞ்சிய வாழ்நாளை அவர் அதனருகில் ஏன் கழிக்கக்கூடாது?

ஸ்ரீ ரமணர் இம்மலையை தீவிரமாகவே நேசித்தார். அதனைக் குறித்து பரவசத்தின் வரம்பைத் தொடும் வகையிலான பக்திப் பாடல்களை எழுதினார். அவர் அங்கு வாழ்ந்த ஐம்பத்து நான்கு ஆண்டுகளிலும் மலையடிவாரத்திலிருந்து ஒரு மைலுக்கு மேல் போவதற்கு அவரை ஒரு போதும் இண்ங்கச் செய்ய முடியவில்லை.

கேள்வி: அருணாசலம் எவ்வாறு அத்தகைய சக்தி வாய்ந்த இடமாயிற்று? நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அங்கு வந்து அதனை வணங்கிக்கொண்டிருந்த யாத்திரிகர்களாலா?

டேவிட்: என்னை யோசிக்க வைக்கும் கேள்வி இது. ஆனால் என்னிடம் அதற்கு விடையில்லை. ஸ்ரீ ரமண்ர் தனது பாடல் ஒன்றில் , "மனித அறிவுக்கெல்லாம் எட்டாமல் அது செயல் படும் முறை மர்மமானது" என்கிறார். சந்தேகமின்றி அதன் சக்தியை அவர் புரிந்து கொண்டார். ஆனால் அவரிடம் அதற்கு விளக்கம் எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன் லக்ஷ்மணஸ்வாமி மலையைப் பற்றி பின்வருமாறு கூறியதைக் கேட்டேன். "நான் அருணாசலத்தை உற்று நோக்கும் போது ஞானத்தின் சந்நிதானத்தில் நான் இருப்பதை அறிகிறேன். பகவானின் சமீபத்திலிருக்கும் போது நான் உணர்ந்த அதே சக்தி அம்மலையிலிருந்தும் வெளிப்படுகின்றது". இத்தகைய சக்தி பக்தர்களின் பிரார்த்தனை மற்றும் பூஜைகள் பலவற்றிலிருந்தும் சேர்ந்து குவிந்த ஒன்று என்று நான் நினைக்கவில்லை.உண்மையில் இது முற்றிலும் எதிர்விதமானது. மலையிலிருந்து வெளிப்படும் சக்தியை ஒருவித உணர்ச்சி பூர்வமான முறையில் அறிவதால் மக்கள் இங்கு வழிபட வருகிறார்கள்'. லக்ஷ்மணஸ்வாமி எதிர்பாராத இடங்களில் ஆன்மிக சக்தியிருப்பதை உணர்ந்ததாகத் தெரிகிறது. அவரைச் சுலபமாக நெருங்க முடிந்த நாட்களில் , அவர் தன் இருப்பிடத்திலிருந்து சென்றுகொண்டிருந்த போது, சில இடங்கள், விலங்குகள், மரங்கள், மற்றும் உயிரற்ற பொருட்களிலிருந்தும் கூட சிறிய அளவில் ஆன்மிக சக்தியை உணர்ந்ததாக அவர் சொல்வதுண்டு. இத்தகைய வெளிப்பாடுகளை உணர்ந்து கொள்ளும் தனித் திறமை அவருக்கு

இருந்தது போலும். ஆயினும் அருணாசலம் என்ற மலையிலிருந்து வீசிக்கொண்டிருந்ததென்று அவர் உணர்ந்த சக்தியுடன் ஒப்பிடும் போது அவை மிகக் குறைவே. அவரும், ஸ்ரீ ரமணரும் , மற்றும் இங்கு ஈர்க்கப்பட்ட பல ஏனைய மஹான்களும் வேறு எந்த இடத்திலும் காணப்படாத அளவு இந்த மலை ஆன்ம சக்தியைப் பரப்பிக் கொண்டிருப்பதை உணர்ந்தனர். ஆறாம் நூற்றாண்டில் இங்கு வந்த புகழ் பெற்ற தமிழ்க் குரவராம் ஞானசம்பந்தர் தன் பாடல்கள் ஒன்றில் இம்மலையை "ஞானத்திரள்" என்று வர்ணித்துள்ளார். அவ்வர்ணனை எனக்குப் பிடித்தமான ஒன்று. அது சிவன் தன்னை ஒரு பிரகாசமான - ஒளிப்பிழம்பான தூண் உருவிலிருந்து, தங்கள் தொழுகைக்கு அத்துணை கண் கூசாத உருவம் வேண்டிய பக்தர்கள் பொருட்டு ஒரு மலை வடிவமாகச் சுருக்கிக் கொண்டனர். என்ற அருணாசலத்தைப் பற்றிய பிரபல புராணக் கதையை எதிரொலிக்கின்றது. சம்பவங்களின் இந்தக் கூற்றைத் தொடர்ந்து நோக்கும் போது, முதலிலிருந்த ஒளி ஸ்தம்பம் என்ற உருவம் மறாதிருந்து விட்டாலும் சிவ ஞானத்தின் திரண்ட ஆன்மிக ஒளி இன்னும் அங்குள்ளது. அம்மலையினின்றும் வெளிப்படும் சக்தி மிகவும் தீக்ஷணமாகவும் பயபக்தி ஊட்டுவதாகவும் உள்ளதால் ஸ்ரீ ரமணரைப் போன்ற மஹான்கள் கூட வியப்பு மேலோங்க அதைப் பார்த்த வண்ணம் உள்ளனர்.

ல்க்ஷ்மணஸ்வாமி, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் அருணாசலத்திற்கு வாசம் செய்ய வந்த போது முதலில் மலையை நோக்கி ஒரு ஜன்னலும் இல்லாத அறையில் இருந்தார். பக்கத்து ஜன்னல்கள் ஒன்றிலிருந்து மலையின் மேற்குத் திசையின் அடிவாரத்திலிருந்து வெளியே தெரிந்த கற்களின் சிறு பாகம் மட்டுமே காண முடிந்தது. ஆனாலும் அதுவே அவருக்கு அதிகமாக இருந்தது. அவர் அந்த ஜன்னலின் அருகமர்ந்து மலையின் அந்தச் சிறிய பகுதியை ஒரு பரவச நிலையில் மனிக்கணக்காக நோக்கிக் கொண்டிருப்பாரென்று சாரதம்மா சொல்வார்கள். தன் குரு ஸ்ரீ ரமணருக்கு நேர்ந்தது போல மலையினின்றும் வெளிப்பட்ட சக்தியானது அவர் கவனத்தை ஈர்த்துத் தன்னிமே தங்க வைத்துக்கொண்டது.

ஒரு முறை அருணாசலத்தைப் பற்றிய தன் பாடல்கள் ஒன்றில் ஸ்ரீ ரமணர் எழுதினார்:

"நான் ஒரு புதினத்தைக் கண்டு கொண்டேன்! உயிர்களின் வழிகாட்டியான இம்மலை தன்னைச் சிறிதேனும் நினைப்பவர்களின் இயக்கத்தை நிறுத்திவிடும்; தன்னிடம் நேருக்குநேர் ஈர்த்து தன்னைப் போல் அசைவற்றிருக்குமாறு செய்யும் இவ்வாறு பரிபக்குவப்படுத்திய

ஆன்மாவை உட்கொள்ள!! இது என்ன அதிசயம்!!!"

நான் ஒரு மலையென்னும் வடிவத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று நம்பும்படி ஏமாற்றுவதற்கு, 'மனம்' என்ற ஒன்றில்லாதபோது, அருணாசலத்தின் சக்தி , வேறு எங்கேயும் பார்ப்பது மிகக் கடினமாகி விடும் அளவுக்கு, நம் கவனத்தைத் தன் பால் பெரும் அளவிற்குக் கவர்ந்து விடும்.

நான் ஒரு முறை லக்ஷ்மணஸ்வாமியின் பொது தரிசனம் ஒன்றின் போது மக்கள் உட்காருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தேன். அவருடைய நாற்காலியை , மலையை நோக்குமாறு வைத்திருந்தேன். சாரதாம்மா நான் செய்ததைப் பார்த்துச் சிரித்து விட்டு "அதை அங்கு வைத்தால் அவர் யாரையும் பார்க்க மாட்டார். முழு நேரமும் மலையைப் பார்த்துக்கொண்டே தான் இருப்பார். வரும் ஜனங்களை அவர் பார்க்க வேண்டுமென்றால் அவர் நாற்காலியை மலையின் எதிர்ப் புறம் நோக்குமாறு போடுங்கள். அப்போது அவர் கவனத் தடைகள் ஏதும் இருக்காது.

ஒரு முறை நான் அவரை "இம்மலை எப்படி ஞானம் பெற்றது?" என்று கேட்டேன். கேட்டது விசித்திரமான கேள்வி போலுள்ளது. ஆனால் வேறு விதமாக அமைப்பதற்கு எனக்குத் தெரியவில்லை.. ஒரு திடமான் கருங்கல் திரட்சி இவ்வாறு ஒரு ஆன்மாவின் சக்தியைப் பரப்பிக் கொண்டுள்ளது.. எப்படி அவ்வாறாயிற்று? அவர் தனக்குத் தெரியாதென்றும், ஊகிக்க முடியாதென்றும் சொன்னார். அதன் சக்தியை நிச்சயமாக உணர்ந்தார். ஆனால் அது எவ்வாறு உண்டாயிற்றென்பதை விளக்கக் கூடிய எந்த வரலாறு பற்றியும் யோசிக்க முடியவில்லை.

இரண்டொரு சமயோசிதமான கேள்விகளை , அதாவது, "ஞான விளக்கம் பெற்ற யாராவது இம்மலையின் வடிவத்தை எடுத்து அல்லது ஏதோ ஒரு விதத்தில் இம்மலையாகவே நின்று விட்டாரா?" என்று கேட்ட போது, அவர் அதற்கும் , நான் அளித்த மற்ற எல்லா யோசனைகளுக்கும் "இல்லை" என்றார். இறுதியின் ஸ்ரீ ரமணர் குறிப்பிட்ட"அது செயல் படும் விதம் விந்தை மிக்கது. மனித புத்திக்கு அப்பாற்பட்டது"" என்னும் அதே விமர்சனத்திற்கு வந்தடைந்தோம்.

அதற்கு முன்புள்ள வாக்கியம் , "காண்பாய், உணர்வற்றது போல அங்கே நிற்கின்றது" என்பதாகும். சதாரண மக்கள், மனத்தின் பிடியில் உள்ளவர்கள். இம்மலையைப் பார்த்து உணர்வற்ற கற்களைக் காண்கிறார்கள். உண்மையான பார்வையுள்ளவர்கள், இங்கு வந்து பார்த்து சிவஞானமென்ற கதிர் வீச்சை உணர்கிறார்கள்.

கேள்வி: புனிதமான அருணாசலத்தைச் சுற்றி, முடியும் போதெல்லாம் பிரதக்ஷிணம் செய்யும்படி ரமண மஹர்ஷி ஊக்குவித்தாரென்பது உண்மையா? இம்மாதிரியான செயல்களைப் பரிந்துரைப்பது அவர் பொதுவாகப் போதித்த "அசைவற்றிருத்த"லுடன் சிறிது ஒவ்வாமலுள்ளது, அல்லவா? இந்த பிரதக்ஷிணத்தின் முக்கியத்துவத்தையும் விளக்க முடியுமா?

டேவிட்: ஆர்தர் ஆஸ்பர்ணின் மனைவி லூஸியா ஆஸ்பர்ண் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு "The Mountain Path" என்ற பத்திரிகையில் சுவாரச்யமான கருத்தொன்றை எழுதினார். அறிவுரை வேண்டுமென்று முதலில் அவரைக் கேட்டால் ஒழிய , ஸ்ரீ ரமணர் யாருக்கும் எந்த ஆன்மிகப் பயிற்சியும் செய்யச் சொன்னதில்லை. ஆயினும் இந்த நியதிக்கு ஒரு விலக்கு இருந்தது. பல முறை மக்களை , அவர்கள் வேண்டுமா வேண்டாமா என்று கேட்டிருக்காவிடினும் மலையைச் சுற்றி நடக்கும் படி ஊக்குவித்தார். ஸ்ரீ ரமணர் அசையாதிருத்தலைப் பற்றிப் பேசிய போது , தரையில் சலனமற்று வீற்றிருப்பதைக் குறிக்கவில்லை. மாறாக, அவர் மனத்தின் நிச்சலனத்தைப் பற்றிக் கூறினார். இத்தகைய அமைதியை அடைவதற்கு ஒரு மார்க்கமாக அருணாசலத்தின் பிரதக்ஷிணத்தைப் பரிந்துரைத்தார். பிரதக்ஷிணம் செய்யும் போது நம்மைப் பற்றிக் கொள்ளும் ஒரு வித "நடந்து கொண்டிருக்கும் சமாதி" யைப் பற்றி ஸ்ரீ ரமணர் சொன்ன விவரத்தை குஞ்சு ஸ்வாமி பதிவு செய்துள்ளார். இவை புரிந்துகொள்ள முடியாதவை.. ஸ்ரீ ரமணரும் அது எப்படி, ஏன் நடக்கிறதென்று விளக்கவில்லை. நம்பிக்கை இல்லாதவர்கள் , பிரதக்ஷிணத்தின் பயனைப் பற்றிய சந்தேகங்கள் அகல அவரை அணுகி அதைப் பற்றிக் கேட்டால், அவர் "முயன்று பார்" என்று சொல்வார். ஒரு பிரதக்ஷிணம் செய்தவர்கள் எப்போதும் அதை ரசித்து , விரைவில் மறுபடியும் செய்ய விரும்புவார்களென்று தன் நீண்ட கால அனுபவத்தில் கண்டறிந்தார். மலையைச் சுற்றி சில முறை வந்தவுடன் பலர் தமக்கு நன்மை நல்கியதென்று நம்பத்தொடங்குவர். அறிவு பூர்வமான விளக்கத்தினால் விட அனுபவத்தால் நம்பிக்கை பெற்றனர். ஸ்ரீ ரமணர் பிரதக்ஷிணம் செய்ய மக்களை அனுப்பிய போது, தன்னுடைய சுய் குருவுடன் சில மணி நேரம் அவர்கள் தொடர்பு கொள்வதற்காக அனுப்பினார். அடிவாரத்தைச் சுற்றி நடக்கும் போது ஒருவன் அதனுடைய பிரம்மாண்டத்தை எப்போதும் உணர்ந்து கொண்டே இருக்கிறான். அதைச்சுற்றி ஒருவன் நடக்கும் போது மாறிக்கொண்டே வரும் மலையின் வடிவத்தை உணருவதால், மிகவும் சக்தி வாய்ந்த தெய்விக வடிவத்தின் மீது அவன் கவனத்தைச் செலுத்துகிறான். அத்தெய்விக உருவினுடன் மனம் தொடர்பு கொண்டவுடன்,

அவ்வுருவத்தின் சக்தியும் அருளும் பெருக ஆரம்பிக்கின்றது, அம்மலையின் சக்திக்கு தன்னை இழக்கும் போது.! இது தான் மக்களை மௌனமாக்கி விடுகின்றது.

இம்மலையின் சக்தி, ஒருவன் இந்த மலை தெய்விகமானதென்று நம்புகிறானா இல்லையா என்பதைப் பொறுத்தல்ல என்று ஸ்ரீ ரமணர் போதித்தார் என்பதையும் நான் சொல்ல வேண்டும். ஸ்ரீ ரமணர் இது ஒரு நெருப்பு போன்றதென்றார். நம்பினாலும் இல்லாவிட்டாலும் அதை அணுகினவர் சுடப்படுவார் என்றார்.

கேள்வி: உங்களைப்பற்றி --எல்லாவற்றையும் விட்டுவிலகி இளவயதிலேயே திருவண்ணாமலைக்கு வருவதற்கு குறிப்பாகக் காரணமாயிருந்ததென்ன? இந்த மாற்றத்திற்கு வழி வகுத்த சுற்றுச் சூழ்நிலை, உங்கள் மனநிலை மற்றும் சம்பவங்கள் குறித்து சிலவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

டேவிட்: மேல்நாட்டில் பிரசுரமாகியிருந்த ஸ்ரீ ரமணரைப் பற்றிய சில புத்தகங்களில் ஒன்றினைப் படித்து முதன் முதலில் 1974ஆம் ஆண்டு அவருடைய போதனைகளைத் தெரிந்து கொண்டேன். இப்புத்தகத்தை சில மணி நேரங்களில் நான் படித்தேன். உடனே உலகத்தைப் பற்றிய என் எல்லா கருத்துக்களும் மாற்றமடைந்தன. நான் முன்னரே என் மூளையில் சேமித்து வைத்திருந்த பல விஷய ஞானங்களுடன் சேர்த்துவிடக் கூடிய வெறும் ஒரு புதிய செய்தியாக அது இல்லை. நான் என்னைப்பற்றியும் என்னைச் சுற்றிலும் இருந்த உலகைப்பற்றியும் வைத்திருந்த கருத்துக்களை அடியோடு மாற்றிய ஒரு உயிரோட்டமுள்ள செய்தி அனுப்புதல் போன்றது அது. போதனைகளைப் பற்றி நினைத்துப் பார்க்கவோ, அவை உண்மைதானா என்று உறுதிப்படுத்திக்கொள்ளவோ தேவை இருக்கவில்லை. அவற்றைப் படித்த உடனேயே அவற்றில்லுள்ள உண்மையை நான் புரிந்து கொண்டேன். அது, வெறும் ஒரு வகைத்தான நம்பிக்கைகளை மாற்றி வேறு நம்பிக்ககளை அமைப்பது போன்றிருக்கவில்லை. எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் ஆராய்ந்து கொண்டும் உள்ள ஒரு மனம் மிக உயர்ந்த ஒளியின் சக்தியால் அடியோடு அடங்கிவிட்ட ஒரு நிகழ்ச்சி!. ஸ்ரீ ரமணரை நான் கண்டு பிடிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பிருந்தே நான் பல ஆன்மிக புத்தகங்களை வாங்கிப் படித்திருந்தேன். அதிலிருந்த விஷயங்கள் என் ஞாபகத்தில் இருந்தன. ஆனால் எதுவும் என்னை உண்மையில் பாதிக்கவில்லை .ரமண மஹர்ஷியின் சொற்களை நான் முதல் முறையாகப் படித்த போது என் மனம் நின்றேவிட்டது. நான் ஆராய்வதையும் ஆன்மிகப் புத்தகங்களைப் படிப்பதையும்

நிறுத்திவிட்டேன். அவ்வார்த்தைகளுக்கு என் மனத்தை அடக்கக்கூடிய சக்தியிருந்தது. அவ்வார்த்தைகளை நான் சீர்தூக்கிப் பார்த்து அவை சரியானவை தான் என்று தீர்மானிக்கவில்லை. அவ்வார்த்தைகளே நேரே என்னுள் சென்று, ஆராயும் என் மனத்தின் ஓட்டத்தை நிறுத்தி, "இது தான் உண்மை" என்ற நிச்சயத்தை உள்ளடக்கிய அமைதியான நிலையைக் கொடுத்தது.

சில மாதங்களுக்குப் பிறகு கலாசாலையை விட்டு நீங்கி ஐர்லாந்திற்கு தியானம் செய்வதற்காகச் சென்றேன். தொலை தூரத்திலிருந்ததாலும் மலிவான இடமாதலாலும் மேற்கு ஐர்லாந்தை தேர்ந்தெடுத்தேன். நான் செய்துகொண்டிருந்த எல்லாவற்றிலுமிருந்தும், நான் பழகிக் கொண்டிருந்த எல்லோரிடமிருந்தும் ஒரு பூரணமான் மாற்றம் வேண்டுமென்று விரும்பினேன். என் வாழ்க்கையில் குவித்திருந்த அற்பமான எல்லாவற்றையும் ஒழித்துவிட நினைத்தேன். லிமெரிக் என்ற இடததில் (யாராவது தெரிந்து கொள்ள விரும்பினால்) சுமார் ஒன்பது மாதங்கள் என் உணவை நானே பயிர் செய்துகொண்டும், தியானம் செய்துகொண்டும் நான் தனியாக இருந்தேன். அதன் பிறகு வீட்டின் உரிமையாளருக்கு வீடு திரும்ப வேண்டியிருந்ததால் அதை விட் வேண்டியதாயிற்று. மீண்டும் அடுத்த வஸந்த காலத்தின் போது ஐர்லாந்துக்குத் திரும்பி விட்லாம் என்று நினைத்து தற்காலிகமாக பனிக்காலத்தின் போது இஸ்ராயில் நாட்டிற்குச் சென்றேன். மறுபடியும் ஐர்லாந்தில் குடியேறு முன் ஏன் இந்தியாவிற்கு ஒரு விரைவான சிறு பயணம் சென்று வரக்கூடாது என்ற எண்ணம் எழுந்தது. சில வாரங்களுக்கு இங்கு வருவதென்று தீர்மானித்தேன்.

வாரங்கள் மாதங்களாயின. பின்பு மாதங்கள் வருடங்களாக மாறின. 26 வருடங்களுக்குப் பின்னும் நான் இங்கேயே இருக்கின்றேன். நான் ஸ்ரீ ரமணரின் சமாதியை வலம் வரும் போது அந்த முக்கியமான கணம் வந்தது. அது 1976இல் இருந்திருக்க வேண்டும். நான் "வீடு" திரும்பு முன் இன்னும் எத்தனை நாட்கள் இங்கிருக்க முடியுமென்று யோசித்துக்கொண்டிருந்தேன். நான் நடந்துகொண்டிருக்கும் போதே திடீரென்று எனக்கு எல்லாம் புரிந்தது. "நான் வீட்டிற்குப் போக வேண்டியதில்லை.இது தான் வீடு. நான் ஏற்கெனவே வீட்டில் தான் உள்ளேன்" புதிதாக அறிந்த இவ்வுண்மை என்னை நடந்து கொண்டிருந்த பாதையில் நிறுத்திவிட்டது. நான் நடப்பதை நிறுத்தினேன். திடீரென்று பேரின்பத்தாலும் நிம்மதியாலும் நிரப்பப்பட்டேன்.என்னுள் ஏதோ ஒன்று, நான் உடலால், ஆன்மாவால், உணர்ச்சியால் வீட்டை அடைந்துவிட்டேனென்று உணர்த்தியது. பிரிந்து போகும் அல்லது பிரிய வேண்டியிருக்குமென்ற எண்ணம் பின்பு எழவே இல்லை.

கேள்வி: அருணாசலத்திற்கும் உங்களுக்குமுள்ள உறவு எத்தகையது? நீங்கள் இங்கே இருந்த சுமார் முப்பது ஆண்டுகளில் இந்த மலை உங்களை எவ்வாறு பாதித்தது என்பதைச் சற்று விவரிக்க முடியுமா?

டேவிட்: நான் ஸ்ரீ ரமணருக்காகவும் அவர் போதனைகளுக்காகவும் இங்கு வந்தேன். அவர் வாழ்ந்து உபதேசம் செய்த இடத்தில் இருக்க வேண்டுமென்று மட்டும் விரும்பினேன். என்னை இங்கு சேர்த்துவிட்டது அருணாசலத்தின் சக்தியாயிருக்கும் என்று பின்னர் உணர்ந்தேன். ஸாது ஓம் என்ற ஸ்ரீ ரமணரின் அடியார்களில் ஒருவர் அருணாசலத்தைப்பற்றி , நீண்ட கயிற்றால் பசுவைக் கட்டியிருக்கும் கம்பத்திற்கு அதை ஒப்பிட்டு அழகான பாடல் ஒன்றை எழுதினார். பசு, கம்பத்தைச் சுற்றிச் சுற்றி வந்து, ஒவ்வொரு சுற்றின் போதும் கயிற்றின் நீளத்தைக் குறைத்துக்கொண்டே வருகிறது. இறுதியில், அது கம்பத்தின் சமீபத்தில் வந்து எங்கும் நகர முடியாமல் நின்றுவிடுகிறாது. சில சமயம் நான் இப்படித்தான் உணர்கிறேன். இந்த மலை என்னை இங்கே இழுத்துள்ளது; என் முளைக்கயிற்றை , நான் வேறு எங்கும் செல்ல முடியாமல், அதன் மேல் அழுந்திக்கொண்டிருப்பது போல் உணரும் வரை, அங்குலம் அங்குலமாகச் சுருங்கச் செய்துள்ளது.. ஆனால் இது இன்பகரமான ஒரு சிறைப்படுத்துதல். நான் அதை ரஸிக்கின்றேன். வேறு எங்கேயும் சென்று இருக்க எனக்கு விருப்பமில்லை.

அருணாசலத்தை நான் ஒரு மூலப்பொருளாக-- ஸ்ரீ ரமணர் அவரது சீடர்கள் மட்டுமன்றி கடந்த 1500 ஆண்டுகளில் இங்கு வாழ்ந்திருந்த மற்ற ஞானிகள் முதலானோரையும் உள்ளடக்கிய பரம்பரையின் சக்தி வாய்ந்த உற்பத்தி ஸ்தானமாக நான் காண்கிறேன். இவர்களால் கவர்ச்சியுறுகிறேன். ஆனால் ஏனென்று சொல்லத் தெரியவில்லை.அருணாசலத்தின் சக்திக்கு இவர்கள் வடிகால்களாய் இருப்பதால் இருக்கலாம். என்னைப் பொறுத்த வரை அருணாசலம், பௌதிக உருவிலுள்ள தெய்விக சக்தி."நீங்கள் ஏன் உங்கள் யௌவன கால வாழ்க்கையை தென்னிந்தியாவிலுள்ள இம்மலையினருகே கழிப்பதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று நீங்கள் கேட்க விரும்பினீர்களானால், முதலில் நான் சொல்வது தேர்ந்தெடுத்தல் என் வசமிருந்தது என்று நான் நினைக்கவில்லை ,. என் கட்டுப்பாட்டிற்கும் மீறிய ஒரு சக்தியால் நான் ஈர்க்கப்பட்டேன்.". மேலும் நான் சொல்லலாம்,-"ஏன் நான் இறைவனின் சந்நிதானத்தில் எனது நாட்களைக் கழிப்பதைத் தேர்ந்தெடுக்கக் கூடாது?" ஏனென்றால் இம்மலை இதுவே தான் என்று நான் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

மாலோக்: டேவிட்! உம்முடன் இந்த நெருங்கிய உரையாடலைச் செய்தது மிக

மகிழ்ச்சியைத் தருகிறது.  உங்கள் ஆழ்ந்த நுண்ணறிவைப் பகிர்ந்து கொண்டதற்கும், தங்கள் நேரத்தை ஒதுக்கித் தந்த தயாளத்திற்கும் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றேன். எங்கள் எல்லோர் சார்பாகவும் மனமார்ந்த நன்றி!!